www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

ஜனவரி 2008
ரூ. 7.00

நன்றிகெட்ட சமூகமே!

நீ முகஞ்சுழிக்கும் மலக்குழிக்குள் மூழ்கிச் சாகும்

## இவர்களும் மனிதர்களே!



படிப்பகம்

www.padippakam.com

# போபால் விஷவாயு படுகொலை: மீண்டும் துரோகம்!

**டோ கெமிக்கல்ஸின் மீது போட்டிருந்த நட்ட ஈட்டு வழக்கைத் திரும்பப் பெற்றதன் மூலம் நாட்டு மக்களின் முதுகில் குத்திவிட்டது, காங்கிரசு அரசு.**

**போ**பால் விஷவாயு விபத்து என அழைக்கப்படும் வெகுஜனப் படுகொலையை அவ்வளவு எளிதாக யாரும் மறந்துவிட முடியாது. இப்படுகொலை நடந்து 23 ஆண்டுகள் கழிந்துவிட்டாலும், இக்கிரிமினல் குற்றத்திற்காக எந்தவொரு 'கனவானும்' இதுநாள்வரை தண்டிக்கப்படவில்லை. மரண தண்டனை வழங்க வேண்டிய இக்கொலைக் குற்ற வழக்கை, வெறும் இரண்டு ஆண்டுகள் மட்டுமே தண்டனை தரக்கூடிய குற்ற வழக்காக நீர்த்துப் போகச் செய்தது, முந்தைய பா.ஜ.க கூட்டணி ஆட்சி. விஷவாயு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அற்பத்தொகை 60,000/- ரூபாயை நிவாரணமாகக் கொடுத்து யூனியன் கார்பைடு நிறுவனத்தையும் காப்பாற்றி விட்டது, இந்திய அரசு.




போபால் விஷவாயு 'விபத்தின்' 23-ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி, அவ்விபத்தில் கணவனைப் பறிகொடுத்த பெண்கள் ஓய்வூதியம் கோரி போபால் நகரில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

யூனியன் கார்பைடு நிறுவனத்தை, "டோ கெமிக்கல்ஸ்" என்ற அமெரிக்கப் பன்னாட்டு நிறுவனம் விலைக்கு வாங்கி விட்டது. வியட்நாம் போரின் பொழுது, அமெரிக்க இராணுவத்துக்கு நச்சு இரசாயன குண்டுகளைத் தயாரித்துக் கொடுத்த கொலைகார நிறுவனம்தான் டோ கெமிக்கல்ஸ். யூனியன் கார்பைடு நிறுவனம், தனது போபால் தொழிற்சாலையில் கொட்டி வைத்திருந்த இரசாயனக் கழிவுகளால் அப்பகுதி நிலத்தடி நீர் முழுவதும் மாசடைந்து நஞ்சாகிவிட்டது. இதனைச் சுத்தப்படுத்த டோ கெமிக்கல்ஸ் 100 கோடி ரூபாய் தர வேண்டும் என்ற வழக்கை, உரம் மற்றும் இரசாயனத் துறை அமைச்சகம் நடத்தி வந்தது. இப்பொழுது இந்த வழக்கையும் திரும்பப் பெற காங்கிரசு கூட்டணி ஆட்சி முடிவு செய்துவிட்டது. நட்ட ஈட்டுத் தொகையை நீதிமன்றத்திற்கு வெளியே பேசி முடிவு செய்து கொள்ளப் போவதாக மைய அரசு அறிவித்திருக்கிறது. அதாவது, அமெரிக்க எஜமானர்கள் நடத்தப் போகும் கட்டப் பஞ்சாயத்தை ஏற்றுக் கொள்ள இந்திய அரசு தயாராகிவிட்டது.

விஷவாயுவால் பாதிக்கப்பட்டவர்கள், மைய அரசின் இம்முடிவை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகிறார்கள். இப்போராட்டங்களைக் கண்டித்திருக்கும் வர்த்தகத்துறை அமைச்சர் கமல்நாத், "டோ கெமிக்கல்ஸ் 400 கோடி டாலர் (16,000 கோடி ரூபாய்) மூலதனம் போடச் சம்மதம் தெரிவித்திருக்கும் இந்த வேளையில், நட்ட ஈடு பெறுவதை பெரிதுப்படுத்தக் கூடாது" எனத் திருவாய் மலர்ந்திருக்கிறார். அமைச்சரின் இந்த வாதத்தை விளக்கமாகச் சொன்னால், "கோடிக்கணக்கில் மூலதனம் போடக்கூடிய முதலாளித்துவ நிறுவனங்கள் இந்தியாவில் எந்த கிரிமினல் குற்றத்தையும் செய்யலாம்" என லைசன்ஸ் வழங்கப்பட்டுள்ளது.




இதுவொருபுறமிருக்க, அமெரிக்காவின் பங்கு பரிமாற்ற கமிசன், டோ கெமிக்கல்ஸ் நிறுவனம் 3,25,000 அமெரிக்க டாலர்கள் அபராதம் கட்ட வேண்டும் எனக் கட்டளையிட்டுள்ளது. டோ கெமிக்கல்ஸ், இந்திய அரசின் விவசாயத் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுக்கு 80 இலட்சம் ரூபாய் இலஞ்சம் கொடுத்ததற்காக, இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் தடை செய்யப்பட்டுள்ள டர்ஸ்பான் உள்ளிட்ட சிலவகைப் பூச்சி மருந்துகளை இந்தியாவில் பயன்படுத்த அனுமதி அளிப்பதற்காக நமது அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்ட 'நன்கொடை' இது. இந்தப் பூச்சி மருந்துகள் பச்சிளம் குழந்தைகளின் உடல் வளர்ச்சியையும், மூளை வளர்ச்சியையும் பாதித்து, அவர்களை நடைபிணமாக்கிவிடும் அபாயம் நிறைந்தவை. நமது நாடும், மக்களும் எப்படிப்பட்ட கிரிமினல்-துரோகக் கும்பல்களிடம் சிக்கிக் கொண்டுள்ளது என்பதற்கு இந்த இரண்டு எடுத்துக்காட்டுகளே போதுமானது. 'வாழ்க இந்திய-அமெரிக்க நட்புறவு!'

**● மணி**



படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 23

**இதழ் 3**

ஜன. 2008

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 15



படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி: 94446 32561


### குஜராத் - மோடியின் வெற்றி:

## இந்துவெறி பயங்கரவாதப் பிடி இறுகுகிறது

குஜராத் மாநில சட்டப் பேரவைத் தேர்தல்களில் ஆர்.எஸ்.எஸ்.-பா.ஜ.க. மற்றும் பிற இந்துத்துவ பாசிச சக்திகள், இந்து மதவெறியனும் காட்டுமிராண்டியுமான நரேந்திர மோடி தலைமையில் மீண்டும் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்து விட்டன. குஜராத்தைக் கவ்விய பாசிச இருள் தன் பிடியை மேலும் இறுக்கியிருக்கிறது. 2002 கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவம், அதன் பிறகு நடத்தப்பட்ட மாநிலம் தழுவிய முசுலீம்கள் படுகொலைகள், பாலியல் வன்முறைகள் ஆகியவற்றை பாசிச வக்கிரங்களோடும் கோரமாகவும் மோடி தலைமையில் கட்டவிழ்த்து விட்ட உண்மை இரத்தத்தை உறைய வைக்குமாறு அம்பலப்பட்ட பிறகும்; மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகளும், மனித உரிமை ஆர்வலர்களும், செய்தி ஊடகங்களும் தொடர்ந்து ஐந்தாண்டுகளாக நீதியை நிலைநாட்டவும், மோடி உட்பட இந்துத்துவக் கிரிமினல் கொலைவெறியர்கள் தண்டிக்கப்படவும் போராடிய பிறகும்; இந்து பாசிச பரிவாரங்களுக்குள்ளேயே பிளவுகளும் முரண்பாடுகளும் முற்றி வெடித்த பிறகும், பாசிச பரிவாரங்களின் அங்கமாகவே செயல்பட்ட போலீசும் - உளவுத்துறையும் நடத்திய போலி மோதல் படுகொலை உச்சநீதி மன்றத்திலேயே அம்பலப்பட்டு நாடு முழுவதும் நாறிய பிறகும், இந்தப் பஞ்சமா பாதகங்களை செய்த குற்றவாளிகளில் பெரும்பான்மையினர் ஒப்புதல் வாக்குமூலங்கள் அளித்த பிறகும், இறுதியாக இவ்வளவு கொலைபாதகச் செயல்களுக்கும் உரிமை பாராட்டி, மோடியே நியாயப்படுத்திய பிறகும், ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல் மீண்டும் ஆட்சியைப் பிடித்திருக்கிறது.

இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று, குஜராத் சமூகத்தை மத அடிப்படையில் பிளவுபடுத்தி, தனக்கென ஒரு கட்டுக்கோப்பான வாக்கு வங்கியை ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. மற்றும் பிற இந்துத்துவ பாசிசக் கும்பல்கள் உருவாக்கித் தக்க வைத்துக் கொண்டிருக்கின்றன. சிறுபான்மையினரான இசுலாமியர்களோ, 2002 படுகொலைகளுக்குப் பிறகு பய பீதியில் சிக்கி, ஜனநாயக உரிமைகள் ஏதுமற்ற அகதிகளாகவே வாழ்கிறார்கள். இவ்விரண்டுக்கும் இடையிலுள்ள மக்களோ, அரசியலற்ற பிழைப்புவாத-காரியவாத சகதியில் உழல்கின்றனர். இவர்கள் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.வுக்கும் எதிரணியான காங்கிரசுக்கும் இடையில் பெரிய வேறுபாடு எதையும் காண்பதற்கில்லை.

அடுத்தடுத்து வந்த தேர்தல்களில் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. அணி தோல்விகளையும் பின்னடைவுகளையும் சந்தித்ததற்கு அத்வானி-மோடி-ராஜ்நாத் போன்ற தலைமை பின்பற்றிய இந்துத்துவ கடுங்கோட்பாட்டுவாதமும், சிறுபான்மையினருக்கு எதிரான கொலைவெறித் தாக்குதல்களும் காரணங்களென்று கருதி அவற்றை மறைத்து வைத்துக் கொண்டு, ஒரு மென்மையான இந்துத்துவ கோட்பாட்டை முன்தள்ள வேண்டுமென்ற கருத்து இந்து பாசிச பரிவாரங்களிலேயே எழுந்திருந்தது. அதனால்தான் மோடி கும்பல் தனது வழக்கமான இசுலாமிய எதிர்ப்பு பாசிச வெறிப் பிரச்சாரத்திற்கு பதிலாக, "குஜராத் வளர்ச்சி" என்ற பிரச்சினையை முன்னிறுத்தி பிரச்சாரத்தை தொடங்கியது. ஆனால் மதச் சார்பற்ற சக்திகளோடு சேர்ந்து ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. பாசிச பரிவாரங்களுக்கு எதிராக கடுந்தாக்குதல் தொடுப்பதற்குப் பதிலாக, குஜராத்தின் முதன்மை எதிர்க்கட்சியான காங்கிரசு தானும் ஒரு மிதவாத இந்துத்துவ நிலை எடுத்தது. குறிப்பாக மோடி தலைமையிலான பாசிச பரிவாரங்களின் கிரிமினல் குற்றங்களுக்கெதிராக மத்திய ஆட்சியாளர்கள் என்ற முறையில் நடவடிக்கை எடுக்கத் தவறியதோடு, ஜனநாயக சக்திகளும் மனித உரிமை ஆர்வலர்களும் அதற்கான முயற்சியை மேற்கொண்டபோதும் பாராமுகமாகவே இருந்தது. "டெகல்கா" ஏட்டின் அம்பலப்படுத்துதல்கள் வெளியான பிறகும், அது "பா.ஜ.க.-டெகல்கா கூட்டுச் சதி" என்ற நிலை எடுத்தது. கிரிமினல் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் வேலையை செய்தது. அதற்கு முக்கியக் காரணம் அந்தக் கிரிமினல் குற்றவாளிகளில் பலர் இப்போது காங்கிரசு அணியில் இருக்கின்றனர்.

இவ்வாறு இந்துத்துவ பாசிச பரிவாரங்களின் வெற்றிக்குக் காரணங்கள் என்னவாக இருந்தாலும், அதன் விளைவுகள் குஜராத்தை மட்டும் பாதிப்பதாக இருக்காது. நாடு முழுவதும் அதன் பாசிச வெறியாட்டத்தை புதிய வேகத்துடன் நடத்தும். கிழக்கே ஒரிசாவில் கிறித்துவ சபைகளைத் தாக்குவதிலிருந்து இது ஆரம்பித்திருக்கிறது. அதன் வெற்றி சோ-ஜெயா முதலிய வழமையான கூட்டாளிகளை மட்டுமல்ல; இராமதாசு, வைகோ போன்ற பிழைப்புவாத - சந்தர்ப்பவாத சக்திகளையும் நெருக்கமாகி விடும். ஆகவே காங்கிரசு - இடது முன்னணி ஆகிய மிதவாத இந்துத்துவ மற்றும் போலி மதச்சார்பற்ற கூட்டணியை நம்பிக் கொண்டிராமல், உண்மையான மதச்சார்பற்ற சக்திகள் முன்பை விட மூர்க்கமான கூடுதல் வேகத்துடன் இந்துத்துவ பாசிச பரிவாரங்களை எதிர்த்துப் போரிடாமல் அவற்றை வீழ்த்த முடியாது. •

படிப்பகம்

www.padippakam.com

# நன்றி கெட்ட சமூகமே!

## நீ முகஞ்சுழிக்கும் மலக்குழிக்குள் மூழ்கிச் சாகும்

# இவர்களும் மனிதர்களே!



**கொ**லைகள், நாளும் தொடரும் படுகொலைகள். ஒருவரல்ல, இருவரல்ல; ஆண்டுக்கு ஏறத்தாழ 22,327 தாழ்த்தப்பட்டோர் படுகொலை செய்யப்பட்டு வருகிறார்கள். இது, ஆதிக்க சாதிவெறியர்களால் கொல்லப்பட்ட தாழ்த்தப்பட்டோரின் எண்ணிக்கை அல்ல. நாடெங்கும் பாதாள சாக்கடை அடைப்புகளை அகற்றும்போது நச்சுவாயு தாக்கி, மூச்சுத் திணறி மாண்டு போகும் துப்புரவுத் தொழில் செய்யும் தாழ்த்தப்பட்டோரின் எண்ணிக்கைதான் இது.

காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதத்தை ஒடுக்குவது என்ற பெயரில் குவிக்கப்பட்டுள்ள அரசு பயங்கரவாத போலீசு, இராணுவ, துணை இராணுவப் படையினரில், 1990 முதல் 2007 மார்ச் மாதம் வரை மாண்டு போனவர்களின் எண்ணிக்கை 5100 பேர். பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது மாண்டு போன அச்சிப்பாய்களின் குடும்பத்தாருக்கு நிவாரணமும் கருணைத் தொகையும் ஓய்வூதியமும் பதக்கங்களும் அரசால் வழங்கப்படுகிறது. ஆனால், ஆண்டுக்கு ஏறத்தாழ 22,000 பேர் துப்புரவுப் பணியாற்றும்போது மாண்டு போகிறார்கள். அவர்களது குடும்பத்தாருக்கு நிவாரணமோ, உதவிகளோ செய்யப்படுவதில்லை.

கடந்த 2006-ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், அரியானா மாநிலத்தின் ஹல்தேரி கிராமத்தில் 50 அடி ஆழமுள்ள ஆழ்குழாய் கிணற்றில் தவறி விழுந்த 6 வயதான குமார் காஷ்யப் என்ற சிறுவனை மீட்க இராணுவப் படை விரைந்தது. மீட்புப் பணியைப் பார்வையிட மாநில முதல்வர் ஹூடா, அமைச்சர்கள், எம்.பி.க்கள் அங்கே குவிந்தனர். நீண்ட போராட்டத்துக்குப் பிறகு அச்சிறுவன் மீட்கப்பட்டதை தொலைக்காட்சிகள் நேரடி ஒளிபரப்புச் செய்தன. நாளேடுகள் தலைப்புச் செய்தியாக வெளியிட்டன. மீட்கப்பட்ட அச்சிறுவனுக்கு ரூ. 7 இலட்சம் பெறுமான பரிசுகள் வழங்கப்பட்டன. ஆனால், பாதாள சாக்கடையில் இறங்கி அடைப்புகளை நீக்கும்போது நச்சுவாயு தாக்கி தத்தளிக்கும் துப்புரவுத் தொழிலாளியை மீட்க எந்த இராணுவமும் வருவதில்லை. இராணுவம் கிடக்கட்டும்; தீயணைப்புப் படையின் மீட்புக் குழுகூட வருவதில்லை. எந்த அமைச்சரும் எட்டிப் பார்ப்பதில்லை. மாண்டுபோன துப்புரவுத் தொழிலாளியின் குடும்பத்துக்கு நிவாரணமும் இல்லை.

மனிதக் கழிவுகள், அடுப்பங்கரைக் கழிவுகள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் ஆலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள், மருத்துவமனைக்



படிப்பகம்

www.padippakam.com

கழிவுகள், ஆடு-மாடுகளின் கழிவுகள், இறைச்சிக் கூட கழிவுகள் என அனைத்தும் பாதாளச் சாக்கடையில் பாய்கின்றன. பெருநகரங்களில் இப்பாதாள சாக்கடைகளில் ஆங்காங்குள்ள மனிதக் குழி மூடிகளைத் திறந்து வெற்றுடம்புடன் இறங்கி துப்புரவுத் தொழிலாளர் அடைப்புகளை அகற்றுகின்றனர். டெல்லி மாநகரில் ஏறத்தாழ 5600 கி.மீ. நீளத்துக்கு குறுக்கும் நெடுக்குமாக அமைந்துள்ள பாதாள சாக்கடையில் ஒன்றரை லட்சத்துக்கும் மேலான திறப்புக் குழிகள் உள்ளன. சென்னையில் 2800 கி.மீ. நீளத்துக்கு ஏறத்தாழ 80,000-க்கும் மேற்பட்ட திறப்புக் குழிகள் உள்ளன. அடைப்புகளை நீக்க துப்புரவுத் தொழிலாளர்கள் அன்றாடம் இக்குழிகளில் இறங்கி மூழ்கி எழுகின்றனர்.

மூழ்கி எழுந்தால் உடலெங்கும் கழிவுகள் படிந்து துர்நாற்றம் குடலைப் புரட்டும். பாதாள சாக்கடையில் மூச்சை அடக்கி மூழ்கும்போது கழிவுகள் உதட்டில் படியும். மீண்டு வெளியே வந்து உடலைக் கழுவிய பிறகும் நாற்றம் அருவருப்பூட்டும். பச்சைத் தண்ணீரைக் குடித்தால் கூட குமட்டும்.

பாதாள சாக்கடைகளில் அடைப்பு ஏற்பட்டு கழிவுகள் அழுகியும் நொதித்தும் பல வகை நச்சு வாயுக்கள் உருவாகின்றன. ஹைட்ரஜன் சல்பைடு எனும் கொடிய நச்சு வாயு மூளைக்குச் செல்லும் பிராண வாயுவைத் தடுத்து மயக்கத்தையும் மரணத்தையும் விளைவிக்கும். மீதேன் என்பது இன்னுமொரு கொடிய நச்சு வாயு. இதுவும் மரணத்தை விளைவிக்கும். இவை தவிர கரியமலவாயு, கார்பன் மோனாக்சைடு முதலான நச்சு வாயுக்களும் துப்புரவுத் தொழிலாளிகளைத் தாக்குகின்றன. வாடையோ நிறமோ இல்லாத சில கொடிய நச்சுவாயுக்களைக் கண்டறியவும் முடியாது. பாதாள சாக்கடையின் மனிதக் குழி எனும் மரணக் குழியில் இறங்கி திடீர் மரணமடைவது மட்டுமின்றி, பெரும்பாலான துப்புரவுத் தொழிலாளர்கள் சுவாசக் கோளாறுகளுக்கும், தோல் நோய்களுக்கும் பலியாகின்றனர்.




''நச்சு வாயு உள்ளதா என்று சோதித்தறிய எங்களுக்கு எவ்வித சாதனமும் வழங்கப்படுவதில்லை. பாதாள சாக்கடையின் மனிதக்குழி மூடிகளைத் திறந்து பார்ப்போம். கரப்பான்பூச்சிகள் ஓடினால் பிரச்சினை இல்லை. அவை செத்துக் கிடந்தால் அபாயம். இதுதான் நச்சுவாயு உள்ளதா என்பதைக் கண்டறிய நாங்கள் வைக்கும் சோதனை. கரப்பான் பூச்சிகள் செத்துக் கிடந்தால் நச்சுவாயு உள்ளதாகத் தீர்மானித்து, சிறிது நேரம் மூடியைத் திறந்து வைத்துவிட்டு, பின்னர் குழியில் இறங்குவோம்'' என்கிறார் கிருஷ்ணையா என்ற துப்புரவுத் தொழிலாளி.

''நாங்கள் குழியில் இறங்கி, தீக்குச்சியைப் பற்ற வைத்து கீழே பிடித்துப் பார்ப்போம். தீக்குச்சி சுடர் விட்டு எரிந்தால் நச்சுவாயு உள்ளதாக முடிவு செய்து, சிறிது நேரம் மூடியைத் திறந்து வைத்துவிட்டு குழியில் இறங்குவோம்'' என்று இன்னுமொரு சோதனை முறையைக் கூறுகிறார் முனியசாமி என்ற தொழிலாளி.



மூங்கில் குச்சிகள்தான் அடைப்புகளை நீக்க துப்புரவுத் தொழிலாளிகளுக்குத் தரப்படும் சாதனம். சில நேரங்களில் இரும்புக் கம்பிகள் தரப்படும். ''குழியினுள் மூழ்கி மூச்சை அடக்கி மூங்கில் குச்சியால் குத்தி அடைப்புகளை உடைக்கும்போது, திடீரென உடைப்பு ஏற்பட்டு சாக்கடை நீர் வெள்ளமெனப் பாய்ந்து எங்களை இழுத்துச் சென்றுவிடும். எதிர்நீச்சல் போட்டு எழமுடியாமல் மாண்டவர்கள் ஏராளம்'' என்கிறார் டெல்லியைச் சேர்ந்த சதீஷ் என்ற துப்புரவுத் தொழிலாளி.

பாதாள சாக்கடைக்குள் இறங்கும் துப்புரவுத் தொழிலாளிக்கு கயிறு மட்டும்தான் பாதுகாப்புச் சாதனமாகத் தரப்படுகிறது. கயிறை இடுப்பில் கட்டிக் கொண்டு பாதாள சாக்கடைக்குள் மூழ்கும் தொழிலாளி அபாயம் ஏற்படும்போது கயிறை அசைத்தால், மேலே கயிறைப் பிடித்துக் கொண்டிருக்கும் மற்றொரு தொழிலாளி அவரை இழுத்து மேலே தூக்குவார். ''பல நேரங்களில் மாண்டு போன சக தொழிலாளியின் பிணத்தைத் தூக்குவதற்குத்தான் இந்தக் கயிறு பயன்பட்டிருக்கிறது'' என்று விம்முகிறார் இராமையா என்ற தொழிலாளி.

**நாட்டின் மிகப்பெரிய அரசுத்துறை நிறுவனமான இரயில்வே துறையில் மலம் அள்ளும் தொழில் இன்னமும் வெளிப்படையாகவே நடந்து வருகிறது.**

ஆனால், மேலைநாடுகளிலும் தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் துப்புரவுத் தொழிலாளிக்கு சாக்கடைக் கழிவுகள் உடலில் படாதிருக்க கவச உடைகள் தரப்படுகின்றன. மூச்சுக் கவசங்கள், கை-கால்களுக்கான தனிச்சிறப்பான உறைகள் தரப்படுகின்றன. பாதாள சாக்கடையில் துப்புரவுத் தொழிலாளி இறங்குமுன் நச்சுவாயு உள்ளதா என்று நவீன கருவிகளைக் கொண்டு சோதிக்கப்படுகிறது. குழியில் இறங்கியதும் எந்திர விசிறி மூலம் காற்றோட்டம் உருவாக்கப்படுகிறது. துப்புரவு தொழிலாளிக்கென தனிப்பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்த பின் ஒவ்வொரு தொழி



படிப்பகம்

www.padippakam.com



லாளியும் தேர்ச்சி பெற்றால் மட்டுமே அங்கீகாரம் வழங்கப்படுகிறது.

ஆனால், இந்தியாவில், கயிறுதான் துப்புரவுத் தொழிலாளிக்குத் தரப்படும் பாதுகாப்புக் கவசம். இத்தொழிலுக்கென எவ்வித சிறப்புப் பயிற்சியும் அளிக்கப்படுவதில்லை. தாழ்த்தப்பட்டோர் என்பதாலேயே துப்புரவுத் தொழிலாளிகள் நம் நாட்டில் நரபலி கொடுக்கப்படுகிறார்கள். டெல்லி குடிநீர்-வடிகால் வாரியத்தில் மட்டும் கடந்த 2005-ஆம் ஆண்டின் முதல் 6 மாத காலத்தில் 200 துப்புரவுத் தொழிலாளிகள் கொல்லப்பட்டுள்ளனர். ஒட்டு மொத்த தொழிலாளிகளில் 95% பேர் படுகாயமடைந்துள்ளனர். பாதிக்கும் மேற்பட்டோர் கண்நோய்கள், தோல் நோய்கள், சுவாசக் கோளாறு, மஞ்சள் காமாலை நோய்களுக்கும் ஆளாகியுள்ளனர். ஓய்வு பெறுமுன்னரே பெரும்பாலான தொழிலாளிகள் நோய் தாக்கி மரணமடைகின்றனர். சராசரியாக 45 ஆண்டுகள்தான் ஒரு துப்புரவுத் தொழிலாளியின் வாழ்க்கைக் காலமாக உள்ளது. அபாயகரமான இத்தொழிலில் ஈடுபடும் தொழிலாளிக்கு சம்பளத்தோடு பேரிடர் உதவித் தொகையாக ரூ. 50 முதல் ரூ. 200 வரை மட்டுமே வழங்கப்படுகிறது.



இந்தியாவில் துப்புரவுத் தொழிலாளிகள் அற்பக் கூலிக்கு உயிரைப் பணயம் வைத்து பாதாளச் சாக்கடையில் இறங்கும் அதேநேரத்தில், அமெரிக்காவின் நியூயார்க் நகரில் துப்புரவுத் தொழிலாளர்கள் பாதுகாப்புக் கவசங்களுடன் பணியில் ஈடுபடுத்தப்பட்டு மாதத்துக்கு ஏறத்தாழ ரூ. 1 லட்சம் ஊதியம் பெறுகிறார்கள். ஆறு மாதங்களில் இச்சம்பளம் இருமடங்காக உயர்த்தப்படுகிறது. ஆனால் இந்தியாவில் 20 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றும் நிரந்தரம் செய்யப்பட்ட துப்புரவுத் தொழிலாளிக்கு மாதம் ரூ. 12,000 கூட ஊதியமாகக் கிடைப்பதில்லை. "எல்லா பாதுகாப்புக் கவசங்களுடன் ரூ. 50,000 வரை சம்பளம் கொடுத்தாலும் பார்ப்பனர்களும் ஆதிக்கச் சாதியினரும் இத்தொழிலைச் செய்ய முன்வர மாட்டார்கள். தாழ்த்தப்பட்ட சாதியினர் மட்டுமே இத்தொழிலை நிர்ப்பந்தமாகச் செய்யுமளவுக்கு இங்கே தீண்டாமை புரையோடிப் போயுள்ளது" என்று வேதனையுடன் குறிப்பிடுகிறார், தாழ்த்தப்பட்ட வால்மீகி சங்கப் பிரமுகரான புருசோத்தமன் வகேலா.

**நச்சு வாயு உள்ளதா என்று சோதித்து அறிய எங்களுக்கு எவ்விதச் சாதனமும் வழங்கப் படுவதில்லை.**

"ஏதோவொரு கம்பெனியின் ஆதாயத்துக்காக டெல்லி மாநகராட்சி 50 பாதுகாப்புக் கவசங்களை வாங்கியது. இங்கு நாங்கள் 800 பேருக்கு மேல் இருக்கும்போது, யார் இதை அணிய முடியும்? மேலும் அதன் எடையோ 18 கிலோ. இது தவிர வாயுக்கலன் எடையோ 13 கிலோ. இவற்றைச் சுமந்துக் கொண்டு சாக்கடை குழியில் இறங்கினால், மீண்டு வர முடியாமல் அங்கேயே சமாதி ஆக வேண்டியதுதான்" என்று பாதுகாப்புக் கவசங்களின் யோக்கியதையும் அரசின் அலட்சியத்தையும் சாடுகிறார் டெல்லியைச் சேர்ந்த துக்காராம் என்ற தொழிலாளி.

ஆனால் அரசோ, நாங்கள் பாதுகாப்புக் கவசம் வழங்கியும் கூட, அவற்றைத் துப்புரவுத் தொழிலாளிகள் பயன்படுத்துவதில்லை என்று பழிபோட்டு தப்பித்துக் கொள்கிறது. இதேபோல அடிக்குழாய் மூலம் சேற்றை உறிஞ்சும் கருவிகள் இறக்குமதி செய்யப்பட்டு, நம் நாட்டு பாதாள சாக்கடைகளுக்குப் பொருத்தமில்லாததால் துருப்பிடித்து கிடக்கின்றன.

தனியார்மயக் கொள்கை தீவிரமாக்கப்பட்ட பிறகு, பல மாநகராட்சிகளில் துப்புரவுப் பணிகள் தனியாருக்குக் கையளிக்கப்பட்டுள்ளன. இத்தனியார் நிறுவனங்கள் அற்பக் கூலிக்கு ஒப்பந்தத் தொழிலாளிகளை வேலைக்கு அமர்த்தி கொழுத்த ஆதாயமடைகின்றனவே தவிர துப்புரவுத் தொழிலாளிக்கு எவ்வித பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்வதில்லை. ஆபத்தான பாதாள சாக்கடைப் பணிகளில் இறங்கி துப்புரவுத் தொழிலாளி மாண்டு போனால், அற்பத் தொகையை நிவாரணமாகக் கொடுப்பதற்கு மேல் அவை வேறொன்றும் செய்வதில்லை. ஒப்பந்தத் தொழிலாளி என்பதால் வழக்கு - விசாரணையும் நடப்பதில்லை. அரசோ இது ஒப்பந்த நிறுவனத்துக்கும் தொழிலாளிக்கு



படிப்பகம்

www.padippakam.com

மான தாவா என்று கூறி, கை கழுவிக் கொள்கிறது. கடந்த மார்ச் 2006-லிருந்து ஆகஸ்ட் 2007 வரை டெல்லியில் 14 துப்புரவுத் தொழிலாளிகள் பாதாள சாக்கடையில் இறங்கி வேலை செய்யும்போது மாண்டு போயுள்ளனர். இவர்களில் 12 பேர் ஒப்பந்தக் கூலிகள். இவர்களது குடும்பத்தாருக்கு எவ்வித நிவாரணமும் இன்றுவரை கிடைக்கவில்லை.

ஒப்பந்ததாரர்கள் மூலம் துப்புரவுத் தொழிலாளிகளை வேலைக்கு அமர்த்தக் கூடாது என்று ஏற்கெனவே குஜராத் உயர்நீதி மன்றம் உத்தரவிட்டுள்ள போதிலும், நாடெங்கும் ஒப்பந்த அடிப்படையிலான துப்புரவுப் பணியே விரிவடைந்து வருகிறது. இத்தகைய ஒப்பந்த முறையானது, துப்புரவுத் தொழிலாளிகளின் உயிரைப் பறிப்பதோடு, நிரந்தரத் தொழிலாளிகளின் வேலையையும் பறிக்கிறது. சென்னை மாநகராட்சி, 2003-ஆம் ஆண்டில் பாதாள சாக்கடைத் துப்புரவுப் பணியை ஒரு கோடி ரூபாய் ஏலத்துக்கு கே.கே.குமார் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் என்ற நிறுவனத்திடம் கையளித்தது. அத்தனியார் நிறுவனமோ பாதாள சாக்கடையில் மூழ்கி மூச்சை அடக்கி நீந்திச் சென்று அடைப்புகளை நீக்கும் தனிச்சிறப்பான நீச்சல் பணியாளர்கள் 250 பேரை வேலையிலிருந்து நீக்கிவிட்டு, அற்ப கூலிக்கு அவர்களை ஒப்பந்தக் கூலிகளாக்கியுள்ளது.



பாதாளச் சாக்கடைக்குள் பிணமாகிப் போன தனது சகோதரர் படத்துடன் ராஜிந்தர் மற்றும் அவரது தாயார்.

நீதிமன்றத் தீர்ப்பைத் துச்சமாக மதிப்பது ஒருபுறமிருக்க, தான் இயற்றிய சட்டத்தையே இந்திய அரசு கிடப்பில் போட்டுவிட்டு, துப்புரவுத் தொழிலாளிகளான தாழ்த்தப்பட்டோரை நாயினும் கீழானவர்களாகவே நடத்தி வருகிறது. மனித மலத்தைத் தலையில் சுமப்பது, உலர் கழிப்பறைகளைச் சுத்தம் செய்வது ஆகியன 1993-ஆம் ஆண்டில் இந்திய அரசால் சட்டபூர்வமாகத் தடை செய்யப்பட்டுள்ளன. இச்சட்டத்தை மீறினால், ஓராண்டு சிறைத் தண்டனையும் ரூ. 2,000 அபராதமும் விதிக்கப்படும். வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்படி வழக்கும் தொடரப்படும். இருப்பினும் மலம் அள்ளும் துப்புரவுப் பணி இந்திய அரசாலேயே சட்டவிரோதமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

நாட்டின் மிகப் பெரிய அரசுத்துறை நிறுவனமான இரயில்வே துறையில் மலம் அள்ளும் தொழில் இன்னமும் வெளிப்படையாகவே நடந்து வருகிறது. இரயில்வே துறையில் ஏறத்தாழ 14,500 ரயில் பெட்டிகளில் பழங்கால முறையிலான கழிவறைகளே நீடிக்கின்றன. ரயில் நின்ற பிறகுதான் பயணிகள் கழிப்பறைக்குச் செல்வதால் ரயில் நிலையங்கள் மலக்காடாகின்றன. மனிதர்கள் மலம் அள்ள சட்டபூர்வமாகத் தடைவிதிக்கப்பட்டுள்ள போதிலும், 6856 ரயில் நிலையங்களில் தாழ்த்தப்பட்டோரான துப்புரவுத் தொழிலாளிகளே மலம் அள்ளும் வேலையைச் செய்கின்றனர். இக்கொடுமைக்கு எதிராக பல்வேறு அமைப்புகளும் பலமுறை போராடிய போதிலும், வழக்கு தொடுத்த போதிலும் அரசு அசைந்து கொடுக்கவில்லை. ரயில் பெட்டிகளில் நவீன கழிப்பறைகளை அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளது என்றும், அதிக செலவு பிடிப்பதால் திட்டம் தாமதமாகிறது என்றும் பசப்பி வருகிறது இரயில்வே துறை.



இரயில்வே துறையிலேயே சட்டவிரோதமாக இக்கொடுமை தொடரும்போது, நகராட்சிகள் - பஞ்சாயத்துக்களின் நிலைமை பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. துடப்பம், இரும்புவாளி, தகர முறத்தோடு இன்னமும் துப்புரவுத் தொழிலாளிகள் மனித மலத்தை அள்ளும் கொடுமை பல மாநிலங்களில் கேள்வி முறையின்றித் தொடர்கிறது. நாடெங்கும் ஏறத்தாழ 13 லட்சம் தாழ்த்தப்பட்டோர் மனித மலம் அள்ளுவதைச் செய்து வருவதாக துப்புரவுத் தொழிலாளர் சங்கம் (சஃபய் கரம்சாரி அந்தோலன் - SKA) கூறுகிறது. இச்சட்டவிரோத சமூகக் கொடுமைக்கு எதிராக இச்சங்கம் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்த போது, எல்லா மாநில அரசுகளும் தங்கள் மாநிலத்தில் நவீன கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளதாகவும், மனித மலம் அள்ளும் துப்புரவுத் தொழிலாளி என்று யாருமே இல்லை என்றும் கூசாமல் புளுகின. மேலும், மலம் அள்ளும் தொழிலில் ஈடுபட்டு வந்த துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வும் மாற்று வேலைவாய்ப்பும் செய்யப்பட்டதாகவும் அவை கணக்குக் காட்டி ஏய்த்தன.

இரயில்வே முதற்கொண்டு நகராட்சிகள் - பஞ்சாயத்துகள் வரை மலம் அள்ளுவது உள்ளிட்ட துப்புரவுப் பணிகள் தனியார்மயமாக்கப்பட்டு வருவதால், மைய அரசும் மாநில அரசுகளும் தாங்கள் மலம் அள்ளும் தொழிலாளர்களை நேரடியாக வேலைக்கு அமர்த்தவில்லை என்று கூறி மோசடி செய்கின்றன. மேலும், துப்புரவுப் பணி என்பது மாநில அரசின் பொறுப்பு என்கிறது மைய அரசு. இதன்படி மலம் அள்ளுவதும் துப்புரவுப் பணி தான் என்பதாகச் சுருக்கி, இச்சமூகக் கொடுமையை சாதாரண துப்புரவு - சுகாதாரப் பிரச்சினையாகச் சுருக்கி விட்டது மைய அரசு.

மனித மலத்தை அள்ளும் தொழிலுக்குத் தடைவிதித்து 13 ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்றுவரை இச்சமூகக் கொடுமை தொடர்ந்த போதிலும், இதுவரை ஒரு வழக்கைக் கூட அதிகார வர்க்கமோ, போலீசோ பதிவு செய்யவில்லை. இச்சட்டம்

**இந்தியாவில், கயிறுதான் துப்புரவுத் தொழிலாளிக்குத் தரப்படும் பாதுகாப்புக் கவசம்.**


படிப்பகம்

www.padippakam.com



வெறும் காகிதச் சட்டமாகவே உள்ளது. துப்புரவு அதிகாரி, சுகாதார அதிகாரி, மாவட்ட ஆட்சியர் ஆகியோரிடமே இச்சட்டத்தின்படி கண்காணித்து நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் உள்ளது. இந்நிலையில், மலம் அள்ளும் துப்புரவுத் தொழிலாளியால் புகார் மட்டும்தான் கொடுக்க முடியும். அரசு எந்திரத்தில் உள்ள சாதிவெறி கொண்ட அதிகார வர்க்கம் இத்தகைய புகார்கள் மீது நடவடிக்கை எடுக்கும் என்று நம்புவது இன்னுமொரு மூட நம்பிக்கைதான்.

மலம் அள்ளும் இழிதொழிலிலிருந்து மீண்டு வேறு தொழில் செய்து பிழைக்க தாழ்த்தப்பட்டோர் முயுற்சித்தாலும், பார்ப்பன இந்துமத சாதியக் கட்டுமானம் அவர்களை மீண்டும் பழிவாங்குகிறது. அரியானா மாநிலத்தின் ரோடக் மாவட்டத்தைச் சேர்ந்த சுமித்ரா தேவி எனும் இளம் பெண், சில சமூக ஆர்வலர்களின் உதவியுடன் மலம் அள்ளும் இழிதொழிலிலிருந்து மீண்டு, வங்கியில் கடன் பெற்று கிராமத்தில் துணி வியாபாரம் செய்தார். பிணங்களின் மீது இறுதியாகப் போர்த்தப்படும் துணிகளைக் களவாடி அவர் துணி வியாபாரம் செய்வதாக ஆதிக்க சாதியினர் வதந்தியைப் பரப்பி, அவரது வியாபாரத்தையே முடமாக்கினர். நட்டமடைந்த அவர் வியாபாரத்தை விட்டு, வேறு வழியின்றி இப்போது மீண்டும் மலம் அள்ளும் தொழிலையே செய்கிறார்.

**ரூ.50,000/- வரை சம்பளம் கொடுத்தாலும் பார்ப்பனர்களும் ஆதிக்கச் சாதியினரும் இத்தொழிலைச் செய்ய முன் வரமாட்டார்கள்.**

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மொகஞ்சதாரோ - ஹாரப்பா நாகரிக காலத்தில் கூட, ஒவ்வொரு வீட்டிலும் கழிப்பறைகள் அமைக்கப்பட்டு, செங்கற்களிலான கால்வாய் மூலம் கழிவுகள் வெளியேற்றப்பட்டுள்ளன என்பதை அகழ்வாராய்ச்சிகள் நிரூபித்துக் காட்டுகின்றன. ஆனால் தொழில்நுட்பப் புரட்சி நடக்கும் இன்றைய நவீன காலத்தில் இன்னமும் நம்நாட்டில் மனித மலத்தை அள்ளும் கொடுமை தொடர்கிறது. நாடெங்கும் நவீன கழிப்பறைகளைக் கட்டியமைத்து இக்கொடுமையைத் தடுத்து நிறுத்த, போதிய நிதி இல்லை என்று அரசு வாதிடுவது மிகப் பெரிய மோசடி. சந்திரனுக்கு விண்கலம் அனுப்ப "சந்திராயன் II" திட்டத்துக்கு ரூ. 386 கோடியை அரசு வாரியிறைக்கிறது. ஆனால், மலம் அள்ளும் கொடுமையை நிறுத்தவும், பாதாள சாக்கடைகளை நவீனப்படுத்தி துப்புரவுத் தொழிலாளர்கள் நரபலி கொடுக்கப்படுவதைத் தடுக்கவும் மட்டும் நிதியில்லையாம்!

ஜவஹர்லால் நேரு நகர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் கடந்த ஏழாண்டுகளில் ரூ. 1,20,536 கோடிகளை நகராட்சிகளுக்கும் உள்ளூராட்சிகளுக்கும் மைய அரசு வாரியிறைத்துள்ளது. இதில் ஏறத்தாழ 40% தொகை வடிகால்கள், பாதாள சாக்கடைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. மீண்டும் பழைய வழியிலான பாதாளச் சாக்கடைக் குழாய்களும் மனிதக் குழிகளும் அமைக்கப்படுகின்றனவே தவிர, துப்புரவுத் தொழிலாளிகளின் பாதுகாப்புக்காக சல்லிக்காசு கூட செலவிடப்படுவதில்லை. ஏனெனில், அருவருப்பான - ஆபத்தான தொழில் என்றாலும், பாதாள சாக்கடையைத் துப்புரவு செய்ய மலிவான உழைப்புக்கு தாழ்த்தப்பட்டோர் இருக்கிறார்கள் என்கிற அரசின் சாதியத் திமிர்தான் இதற்குக் காரணம்.

அதிகார வர்க்கம், போலீசு-இராணுவம், நீதித்துறை அடங்கிய இன்றைய அரசு எந்திரம்தான், சட்டத்திற்கும் சமூக நீதிக்கும் எதிராக மலம் அள்ளும் தொழிலில் தாழ்த்தப்பட்டோரை நிர்பந்தமாகத் தள்ளுகிறது. எவ்விதப் பாதுகாப்போ நிவாரணமோ இன்றி, பாதாள சாக்கடை-துப்புரவுத் தொழில் செய்யும் தாழ்த்தப்பட்டோரை தொடர்ந்து நரபலி கொடுத்து வருகிறது. அவர்களை அறிந்தே தீராத கொடிய நோய்களில் தள்ளி வதைக்கிறது. தாழ்த்தப்பட்டோருக்கென்றே இத்தொழிலை ஒதுக்கி பார்ப்பன சாதியக் கட்டுமானத்தைக் கட்டிக் காக்கிறது. தீண்டாமைக்கும், தொடரும் இக்கொடுமைக்குமான முதல் குற்றவாளியே இன்றைய அரசமைப்புதான்.



மனித மலத்தை மனிதனை அள்ள வைக்கும் வன்கொடுமையை ஒழிக்கக் கோரியும்; தங்களின் வாழ்க்கையைப் புனரமைக்க உதவி வழங்கக் கோரியும் நகர சுத்தித் தொழிலாளர்கள் ஆந்திர மாநிலம் - கர்நூல் நகரில் நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

கிஞ்சித்தும் மனிதாபிமானமின்றி சாதியத் திமிர் கொண்ட இக்கேடுகெட்ட அரசமைப்பை வீழ்த்தாமல் துப்புரவுத் தொழில் செய்யும் தாழ்த்தப்பட்டோர் நரபலியாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்திட முடியாது. உழைக்கும் மக்களின் புரட்சிகர அரசை நிறுவாமல் மனித மலம் அள்ளும் சமூகக் கொடுமைக்கு முடிவு கட்டவும் முடியாது.

● பாலன்


படிப்பகம்

www.padippakam.com

# "எம்.ஆர்.எஃப். ஆலையை உடனே திற!"
# ஆலை மூடலுக்கு எதிராக ஆர்த்தெழுந்த தொழிலாளி வர்க்கம்




டயர் உற்பத்தியில் கடந்த 43 ஆண்டுகளாக முன்னணி நிறுவனமாக இயங்கி வந்த, சென்னையிலுள்ள எம்.ஆர்.எஃப் கம்பெனி கடந்த டிசம்பர் 3-ஆம் தேதி முதலாக சட்டவிரோதமாக கதவடைப்பு செய்துள்ளது. இந்நிறுவனத்தின் பிரம்மாண்டமான வளர்ச்சிக்கும் மேலும் 5 கிளைகளின் உருவாக்கத்திற்கும் அயராது பாடுபட்ட ஆயிரக்கணக்கான தொழிலாளர்களோ இன்று வீதியில் வீசியெறியப்பட்டுள்ளனர்.

தொழிலாளர்களின் உரிமைகளை இழக்க மறுத்து, நிர்வாகத்தின் அடக்குமுறையை எதிர்த்த குற்றத்திற்காக, இரு தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து 26 பேரை சஸ்பெண்ட் செய்தது நிர்வாகம். இதை எதிர்த்து தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ததும், திமிரெடுத்த நிர்வாகம் அடாவடித்தனமாக ஆலையை மூடிவிட்டது. ஆலையை மீண்டும் திறக்கக் கோரி தொழிலாளர் நல ஆணையர் அளித்த அறிவுரையையும் ஏற்க மறுத்து விட்டது. கதவடைப்புக்குத் தடை விதித்துள்ள தமிழக அரசின் உத்தரவைச் செயல்படுத்துமாறு உயர்நீதி மன்றம் விதித்துள்ள ஆணையையும் எதிர்த்து எம்.ஆர்.எஃப் நிர்வாகம் மேல் முறையீடு செய்து கொக்கரிக்கிறது.

ஆலையை மூடுவதற்கு எம்.ஆர்.எஃப் டயர்களுக்குச் சந்தையில்லாமல், உற்பத்தி தேங்கி விட்டதோ, நட்டமோ காரணமல்ல. இந்தியாவின் சந்தையில் முதலிடத்தைப் பிடித்து கொழுத்த இலாபமடையும் முன்னணி நிறுவனம் தான் எம்.ஆர்.எஃப். மறுகாலனியாக்கத்திற்கு ஏற்ப தொழிலாளர் உரிமைகளைப் பறித்து கொத்தடிமைகளாக்கிச் சுரண்டும் நோக்கத்தோடுதான் இப்படி ஆலையை மூடி அடாவடித்தனம் செய்கிறது நிர்வாகம். சட்டவிரோத கதவடைப்பு செய்து அரசு உத்தரவையும் மதிக்காத இந்நிறுவன முதலாளியைக் கைது செய்து, ஆலையை அரசே ஏற்று நடத்துவதற்குப் பதில், கைகட்டி நிற்கிறது தமிழக அரசு.

ஆலை மூடலால் குமுறிக் கொண்டிருந்த எம்.ஆர்.எஃப் தொழிலாளர்களை அணிதிரட்டி, "மூடிய எம்.ஆர்.எஃப் ஆலையை உடனே திற! ஆலையைத் திறக்காமல் அடாவடி செய்யும் முதலாளியைக் கைது செய்! எம்.ஆர்.எஃப் ஆலையை அரசுடமையாக்கு!" என்ற முழக்கத்துடன் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி 26.12.07 அன்று மாலை மெமோரியல் ஹால் அருகே எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது.

பு.ஜ.தொ.மு. மாநிலத் தலைவர் தோழர் முகுந்தன் தலைமையில் நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில், எம்.ஆர்.எஃப் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலர் தோழர் பிரபாகரன், பு.ஜ.தொ.மு. மாநிலச் செயலர் தோழர் சுப.தங்கராசு மற்றும் முன்னணியாளர்கள் கண்டன உரையாற்றினர்.

தொழிலாளர்கள் குடும்பத்தோடு திரண்டு வந்து வர்க்க உணர்வோடு நடத்திய இந்த ஆர்ப்பாட்டம், தொழிலாளர்களிடம் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. எம்.ஆர்.எஃப் நிறுவனத்தின் இதர கிளைகளைச் சேர்ந்த தொழிலாளர்களையும் இணைத்துப் போராடவும், இதர தொழிற்சங்கங்களையும் உழைக்கும் மக்களையும் அணிதிரட்டி அடுத்தகட்டப் போராட்டத்தைத் தொடரவும், பு.ஜ.தொ.மு.வும் எம்.ஆர்.எஃப் தொழிலாளர்களும் உறுதியேற்றுள்ளனர்.

தொழிலாளி வர்க்கம் தோற்றதாக வரலாறில்லை.

**– பு.ஜ. செய்தியாளர், சென்னை.**

www.padippakam.com

# சுயநலத்தின் இரண்டு முனைகள்

**கட்டாயக் கிராமப்புற மருத்துவ சேவைத் திட்டம் உலக வங்கியின் கட்டளை என்ற ஒரே காரணத்திற்காக அதை எதிர்க்கும் மருத்துவ மாணவர்களின் போராட்டத்தினை ஆதரிக்க முடியாது.**

மத்திய அரசு கொண்டு வர இருக்கும் கிராமப்புறக் கட்டாய மருத்துவ சேவைத் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒரு சுற்றுப் போராட்டம் நடத்திய மருத்துவ மாணவர்கள், தமிழக முதல்வரும் மருத்துவத்துறை அமைச்சரும் அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் தற்காலிகமாகத் தமது வகுப்பறைகளுக்குத் திரும்பியிருக்கின்றனர்.

ஏற்கெனவே உள்ள மருத்துவக் கல்வித் திட்டத்தின்படி, பள்ளிப் படிப்பு முடிந்த பிறகு, நான்கரை ஆண்டுகாலம் மருத்துவக் கல்லூரிப் படிப்புடன், 4,500 ரூபாய் உதவித் தொகையுடன் ஓராண்டு உள்பயிற்சி மருத்துவராகப் பணியாற்றித் தேறிய மாணவர்களுக்கு இளங்கலை மருத்துவர் பட்டம் (எம்.பி.பி.எஸ்.) வழங்கப்பட்டு வந்தது. புதிதாகக் கொண்டு வரப்படும் திட்டத்தின்படி, உள்பயிற்சி மருத்துவராகப் பணியாற்றிய பிறகு, நான்கு மாதம் கிராமப்புற மருத்துவமனையிலும், அடுத்த நான்கு மாதம் வட்டத் தலைநகர் மருத்துவமனையிலும், கடைசி நான்கு மாதம் மாவட்ட மருத்துவமனையிலும் — ஆக ஓராண்டு காலம் 8,000 ரூபாய் உதவித் தொகை பெற்றுக் கொண்டு வெளிப் பயிற்சி மருத்துவராகப் பணியாற்ற வேண்டும்; அதன்பிறகுதான் அவர்களுக்கு இளங்கலை மருத்துவர் (எம்.பி.பி.எஸ்) பட்டம் வழங்கப்படும்.

"இது கிராமப்புற ஏழை மக்களுக்கு மருத்துவச் சேவை செய்யும் நல்ல நோக்கத்துடன் கொண்டு வரப்படும் திட்டம். இதை எதிர்ப்பவர்கள் கிராமப்புற விவசாய மக்களுக்கு எதிரானவர்கள்" என்று மத்திய "சமூக நலத்துறை" அமைச்சர் அன்புமணியும் அவரது குடும்பக் கட்சியின் நிறுவனர் இராமதாசும் பேசி வருகின்றனர்.

கிராமப்புற ஏழை மக்களுக்குச் சேவை செய்வதையே இத்திட்டம் நோக்கமாகக் கொண்டிருக்கிறது என்பது உண்மை அல்லவென்று அத்திட்டத்தைச் சற்றுக் கவனத்தோடு பார்த்த மாத்திரத்தில் அறிந்து கொள்ள முடியும். ஒரு நான்கு மாதங்களில் கிராமப்புற மருத்துவமனைகளில், போதிய பயிற்சியும் அனுபவமும் இல்லாத இளம் மருத்துவர்கள் கிராமப்புற மக்களுக்கு என்ன சேவை செய்து விட முடியும்! ஆகவே, இப்போது அரசு கொண்டு வந்திருக்கும் திட்டத்தை கல்லூரியில் மருத்துவப் படிப்பு முடித்த பிறகு ஓராண்டு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளில் உள் மருத்துவராகவும், மேலும் ஓராண்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை அல்லாத வெளி மருத்துவமனைகளில் பயிற்சி மருத்துவராகவும் பணியாற்றுவதைக் கட்டாயமாக்குகிறது என்று வேண்டுமானால் கருதலாம்.

இவ்வாறு, இளம் மருத்துவர்களின் பயிற்சிக் காலத்தை மேலும் ஓராண்டு நீட்டிப்பதை கிராமப்புறக் கட்டாய சேவைத் திட்டம் என்று அரசும், மருத்துவக் கல்விக் காலத்தை ஆறரை ஆண்டுகளாக அதிகரிப்பதாக மருத்துவ மாணவர்களும் தவறான கருத்தை மக்களிடம் கூறி வருகின்றனர். இரண்டு தரப்பாரிடமும் உண்மையைச் சொல்லும் நேர்மையான அணுகுமுறை இல்லை.

இத்திட்டத்தை எதிர்ப்பதற்கு மாணவர்கள் தரப்பில் சில காரணங்கள்கூறப்படுகின்றன. கல்விக் கடன் பெற்று மருத்துவப்படிப்பு முடிக்கும் தாங்கள் உடனடியாக வேலைக்குப் போய் கடனடைக்க முடியாத நிலை ஏற்படுகிறது. அரசு தரும் 8000 ரூபாய் உதவித் தொகையைக் கொண்டு கல்விக் கடனைத் திருப்பிச் செலுத்த இயலாமல் போகிறது. உடனடியாக வேலைக்குப் போகாவிட்டால் படிக்க வைத்த பெற்றோர்களின் சுமை ஏறி விடுகிறது. பட்டமேற்படிப்புக்குச் செல்வதில் பிரச்சினை ஏற்படும்; உரிய வயதில், குறிப்பாகப் பெண் மருத்துவர்களுக்கு திருமணம் செய்து கொள்ள இயலாமல் போகிறது - இவ்வாறான தமது சொந்த நலன்களுக்கான காரணங்களோடு, சில பொதுநல - மக்கள் நலப் பிரச்சினைகளையும் போராடும் மருத்துவ மாணவர்கள் சேர்த்துக் கொள்கிறார்கள்.

கிராமப்புற மருத்துவமனைகளில் மருந்து, கருவிகள், செவிலியர் போன்றவை போதிய அளவில் இல்லாதபோது எப்படி கிராம மருத்துவ சேவை செய்ய முடியும்? கிராம மருத்துவ மனைகளில் மருத்துவப் பணியிடங்கள் காலியாக உள்ளன. உரிய மருத்துவர்களை நியமிக்காமல் பயிற்சி மருத்துவ மாணவர்களை அனுப்புவதால், ஏற்கெனவே பட்டம் பெற்ற மருத்துவர்களின் வேலை வாய்ப்புகள் பறிக்கப்படும். மேலும் மருத்துவச் சேவைக்கான அரசுச் செலவைக் குறைக்கும்படி உலக வங்கி உத்தரவிட்டுள்ளது; அதற்காக பயிற்சி மாணவர்களை சுழற்சி முறையில் அனுப்புவதன் மூலம் புதிய மருத்துவர்களை நியமித்து, மருத்துவ வசதிகளைப் பெருக்க வேண்டிய கடமையிலிருந்து தவறும் அரசு மக்களை ஏய்க்கவே இத்திட்டத்தைக் கொண்டு வருகிறது.

கிராமப்புற மருத்துவ சேவையில் அரசின் பொறுப்பின்மை - தவறுகள் குறித்துக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் உண்மைதான்; என்றபோதும் அவற்றுக்காக மருத்துவ மாணவர்கள் ஒருபோதும் கவனஞ் செலுத்தியதோ, குரல் கொடுத்ததோ கிடையாது; அதேசமயம் அரசின் புதிய திட்டத்தால் தாங்கள் பாதிக்கப்படுவதாக மருத்துவ மாணவர்கள் கூறும் எந்தக் காரணத்தையும் ஏற்க முடியாது.

உதாரணமாக, கல்விக் கடன் அடைப்பதில் பிரச்சினை வரும் என்றால், அதற்குரிய காலத்தை நீட்டிக்கும்படியும், எளிய தவணையாக்கும்படியும், உதவித் தொகையை அதிகரிக்கும்படியும் கோரலாமே! மருத்துவ உயர்கல்விக்


படிப்பகம்

www.padippakam.com

கான தகுதிகளில் ஒன்றாக இந்தப் பயிற்சிக் காலத்தையும் கணக்கிடும்படி கோரலாமே! இந்தப் பயிற்சிக் காலத்திலேயே தேவையானால் திருமணம் செய்து கொள்வதை எது தடுக்கிறது?

எவ்வளவு விரைவில் பட்டம் பெற்று தொழில் தொடங்கி காசு பணத்தைப் பார்ப்போம், வரதட்சிணை பெற்று வசதிகளைப் பெருக்கிக் கொள்ளலாம் என்ற சிந்தனை கணிசமான அளவு மருத்துவ மாணவர்களைப் பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை அவர்கள் மறுக்க முடியாது. கிராமப்புற மருத்துவமனைகளில் பணிநியமனம் செய்யப்பட்ட மருத்துவர்கள் அங்கு பொறுப்பேற்க மறுப்பதும், பொறுப்பேற்ற பிறகும் அருகிலுள்ள நகரங்களில் குடியேறி தனியே தொழில் செய்வதையும் காண்கிறோம். பலர் பணி நேரங்களில் மருத்துவமனைகளில் இருப்பதுமில்லை; நோயாளிகளை மரியாதையுடன் நடத்தி உரிய சிகிச்சையும் அளிப்பதில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக மருத்துவப் படிப்பை முடித்து, இளங்கலை மருத்துவப் பட்டம் பெற்றிருந்தாலும், சுயமாக மருத்துவச்சேவை செய்வதற்கு ஒவ்வொருவரும் குறைந்தது ஐந்தாண்டுகளுக்காவது முதுநிலை மருத்துவர்களின் கீழ் பணியாற்றி அனுபவம் பெற வேண்டியது அவசியமென்பதை அவர்கள் உணர வேண்டும். இந்தக் காலத்தை உயர் கல்விக்கான தகுதியாகக் கருத வேண்டும் என்றும், ஏற்புடைய ஊதியத்தை அரசு வழங்க வேண்டும் என்றும் இளநிலை மருத்துவர்கள் கோருவதுதான் அவர்களின் தொழிலுக்கே அவசியமாக உள்ளது.



**கட்டாய கிராமப்புற மருத்துவ சேவைத் திட்டத்தை எதிர்த்து சென்னை - ஸ்டான்லி மருத்துவமனையைச் சுத்தம் செய்யும் மாணவர்கள்: போராட்டம் என்ற பெயரில் உடல் உழைப்பைக் கேவலப்படுத்தும் மேல்தட்டு வர்க்கத் திமிர்.**

அரசு கொண்டு வரவிருக்கும் கிராமப்புறக் கட்டாய மருத்துவ சேவைத் திட்டம் உண்மையில் கிராமப்புறங்கள் நலனுக்கானதே கிடையாது. ஒரு நான்கு மாதமே கிராமப்புற மருத்துவமனைகளில் பணியாற்றுவதைப் புதிய திட்டம் கோருகிறது. மத்திய அரசு தனது மொத்த ஆண்டு வருவாயில் 18 சதவீதத்தை இராணுவத்திற்குக் கொட்டும் அதேசமயம், 1.3 சதவீதமே மருத்துவத்துறைக்கு ஒதுக்குகிறது; மாநில அரசு 5.5 சதவீதமே ஒதுக்குகிறது; மருத்துவப் பணியிடங்கள் பலவும் நிரப்பப்படாமல் காலியாக இருக்கின்றன. அரசு மருத்துவமனைகளில், குறிப்பாகக் கிராமப்புற மருத்துவமனைகளில் அடிப்படை வசதிகளோ, மருந்துகளோ கருவிகளோ கிடையாது. இவற்றையெல்லாம் கவனிக்காமல், ஒரு நான்கு மாதம் இளம்நிலை பயிற்சி மருத்துவர்களை அனுப்புவதைக் கிராமப்புற மக்களின் மருத்துவச் சேவையாக வாய் கிழியப் பேசுகிறார்கள், இராமதாசர்கள்.

உண்மையில் கிராமப்புற மருத்துவ சேவையில் அக்கறையுடையதாக செயல்படும் அரசாக இருந்தால், ஐந்தாண்டுகளுக்காவது வேலை உத்திரவாதமளித்து இளம்நிலை மருத்துவர்களைக் கிராமப்புற மருத்துவமனைகளில் நியமிக்க வேண்டும். அவர்கள் தொடர்ந்து அங்கு பணியாற்றுவதை ஊக்குவிக்கும் வகையில் ஊதிய விகிதங்கள் நிர்ணயிக்கப்பட வேண்டும். வசிப்பிடம், வாகன வசதிகள் போன்றவை வழங்க வேண்டும். போதிய மருத்துவக் கருவிகள், படுக்கை, பிற கட்டுமான வசதிகள், மருந்துகள், உதவியாளர்களை நியமிக்க வேண்டும். இவ்வாறு பணிபுரியும் தகுதி அடிப்படையிலேயே மருத்துவ உயர்கல்விக்கு தேர்வு செய்யப்பட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக இந்த வகையிலான மருத்துவ சேவையை மேற்பார்வையிடும் மக்கள் பிரதிநிதிக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு மக்கள் நலனில் அக்கறையுடைய கோரிக்கைகளுக்காக அல்லாமல், தங்கள் சொந்த நலனுக்காக மட்டும் போராடும் '''வெள்ளுடை வேந்தர்களை'' மக்கள் ஏன் ஆதரிக்க வேண்டும்?

**• ஆர்.கே.**



படிப்பகம்

www.padippakam.com

# நெல்லுக்கு ஆதார விலை பிச்சையல்ல, உரிமை!

## உற்பத்திச் செலவை ஈடுகட்டக் கூடிய ஆதார விலையை நெல்லுக்குக் கொடுக்க மறுப்பது எந்த ஊர் நியாயம்?

**கோ**துமைக்குத் தரப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலையை, ஒரு குவிண்டாலுக்கு ரூ. 1,000/- என உயர்த்தி நிர்ணயித்திருக்கும் மைய அரசு, நெல் விலையை நிர்ணயிப்பதில் மாற்றந்தாய் மனப்போக்குடன் நடந்து கொண்டுள்ளது. 1994-95 ஆண்டு வரை, நெல்லுக்கும் கோதுமைக்குமான குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயிப்பதில் எவ்வித வேறுபாடும் இருந்தது கிடையாது. அதன்பிறகு, அவற்றின் ஆதரவு விலைகளை நிர்ணயிப்பதில் வேறுபாடு காட்டப்படுவது தொடங்கி, இன்று இந்த விலை வேறுபாடு ரூ. 255/- ஆக அதிகரித்து விட்டது.

இந்த ஆண்டு ஒரு குவிண்டால் சன்னரக நெல்லுக்கான ஆதரவு விலை ரூ. 675/-; மோட்டாரக நெல்லுக்கான ஆதரவு விலை ரூ. 645/- என்றுதான் மைய அரசால் நிர்ணயிக்கப்பட்டது. இதற்கு மேல் ஊக்கத் தொகை வழங்கவும் மறுத்து விட்டது, மைய அரசு. தமிழக விவசாயிகள் ஒரு குவிண்டால் நெல்லுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலையாக ரூ. 1,000/- தர வேண்டும் எனக் கோரி வருவது தி.மு.க.வுக்குத் தெரிந்திருந்தும் கூட, மைய அமைச்சரவை நெல்லுக்கு மிகவும் குறைவாக ஆதரவு விலையை நிர்ணயித்ததை அக்கட்சி எதிர்த்துப் பேசவில்லை.

தமிழக விவசாயிகள் மைய அரசின் இந்த முடிவை எதிர்த்துப் போராட்டத்தில் இறங்கிய பிறகு, தமிழக முதல்வர் மு.க., மைய அரசுக்குக் கடிதம் எழுத, அதனைத் தொடர்ந்து, மைய அரசு ஏதோ பிச்சை போடுவது போல, இரண்டு தவணைகளில் ஆதரவு விலையை ரூ. 100/- உயர்த்தி, சன்னரக நெல்லுக்கு ரூ.775/- மோட்டா ரக நெல்லுக்கு ரூ.745/- என விலை நிர்ணயம் செய்தது.

இதற்கு மேல் மைய அரசிடமிருந்து ஒரு பைசாகூடப் பெயராது எனத் தெரிந்து கொண்ட மு.க., தமிழக நெல் விவசாயிகளின் அதிருப்தியைப் போக்குவதற்காக, கூடுதல் ஊக்கத் தொகையாக ஐம்பது ரூபாய் தமிழக அரசின் சார்பில் அளிக்கப்படும் என அறிவித்திருக்கிறார்.

ஒரு குவிண்டால் நெல்லுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலையாக ரூ. 1,000/- தர வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கை, அநியாயமானதோ, தான்தோன்றித்தனமானதோ அல்ல. விவசாயிகளின் தற்கொலைச் சாவுகள் பற்றி ஆராய்வதற்காக வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையில் மைய அரசினால் அமைக்கப்பட்ட தேசிய கமிசன் ஒரு குவிண்டால் நெல்லுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ. 1,400/- தரப்படவேண்டும் எனப் பரிந்துரை செய்திருக்கிறது. கோதுமை உற்பத்திக்கு ஆகும் செலவைவிட, நெல் உற்பத்திக்கு ஆகும் செலவு அதிகமானது என்பதை மைய அரசும் ஏற்றுக் கொண்டுள்ளது. இதற்குப் பிறகும், மைய அரசு நெல் விவசாயிகளின் வயிற்றில் அடிக்கத் துணிகிறது என்றால், மன்மோகன் சிங் கும்பலை எதைக் கொண்டு அடிப்பது?

இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த வே.துரைமாணிக்கம் தலைமையில் அமைக்கப்பட்ட கமிட்டியின் பரிந்துரையின் படியும்; தமிழக வேளாண்மைத் துறையின் கணக்கீட்டின்படியும் ஒரு ஏக்கர் நிலத்தில் நெல் உற்பத்தி செய்வதற்கு ஆகும் சராசரி செலவு ரூ. 14,689/- என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விளைச்சல் நன்றாக இருந்தால் ஒரு ஏக்கர் நிலத்தில் அதிகபட்சமாக 1,800 கிலோ மகசூல் கிடைக்கும். இம்மகசூல் அனைத்தையும், குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு விற்றால் கூட ரூ.14,300/- லிருந்து ரூ.15,000/- வரைதான் கிடைக்கும். நெல்லை விற்றுக் கிடைக்கும் வரவு, உற்பத்திச் செலவை ஈடுகட்டக்கூடப் போதாது என்றால், விவசாயிகள் நெல் விவசாயம் பார்ப்பதைவிட, நிலத்தைத் தரிசாகவே போட்டு விடலாம்.

இந்தியாவில் 4.4 கோடி ஹெக்டேர் பரப்பளவில் விளையும் நெல் மகசூல் அனைத்தையும் மைய அரசே கொள்முதல் செய்வது கிடையாது. தமிழகத்தில் விளையும் நெல்லில்

ஒரு குவிண்டால் நெல்லுக்கு ஆயிரம் ரூபாய் ஆதரவு விலை நிர்ணயம் செய்யக் கோரி, தமிழக விவசாயிகள் நாடாளுமன்றம் முன்பு நடத்திய ஆர்ப்பாட்டம்.





படிப்பகம்

www.padippakam.com

காணப்படும் ஈரப்பதத்தைக் காட்டியே, தமிழக விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்வதைத் தட்டிக் கழித்து வருகிறது, மைய அரசு. எனவே, நெல் விவசாயிகளுக்குத் தங்களின் விளைச்சலைத் தனியாரிடம் விற்பதைத் தவிர வேறுவழியில்லாமல் போய் விடுகிறது. விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்யும் தனியார் கமிசன் ஏஜெண்டுகள், குறைந்தபட்ச ஆதரவு விலை கொடுத்து வாங்குவார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது. எனவே, நடைமுறையில் நெல் விவசாயிகளுக்கு ஏற்படக்கூடிய நட்டம், புத்தக மதிப்பீட்டைவிட அதிகமாகவே இருக்கும்.

கந்துவட்டிக் கடனில் மூழ்கிப் போன விவசாயிகளின் எண்ணிக்கையில், தமிழகம், இந்திய அளவில் இரண்டாம் இடத்தில் இருக்கிறது. வேளாண் விளைபொருட்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்காமல் இருப்பதனால் தான், விவசாயிகள் கடன் சுமையில் இருந்து மீள முடியாமல் தற்கொலை செய்து கொண்டு மாண்டு போகிறார்கள். தென்னிந்திய மாநிலங்களைச் சேர்ந்த நெல் விவசாயிகள், குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ. 1,000/- தர வேண்டும் எனக் கோருவதையும், அதற்காகத் தமிழக விவசாயிகள் போராடுவதையும் இந்தச் சூழ்நிலையில் இருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால், மைய அரசின் வேளாண்துறை அமைச்சர் சரத்பவாருக்கோ, தமிழக நெல் விவசாயத்தின் அரிச்சுவடி கூடத் தெரியவில்லை.



''நெல்லுக்கு மைய அரசு அறிவித்துள்ள குறைந்தபட்ச ஆதரவு விலையை பஞ்சாப் விவசாயிகள் வரவேற்றுள்ளனர்'' எனத் தமிழக விவசாயிகளிடம் கூறி தமிழகத்தையும், பஞ்சாபையும் எதிரெதிராக நிறுத்தியிருக்கிறார், சரத்பவார். அதற்குத் தமிழக விவசாயிகள், ''பஞ்சாபில் கோதுமை, நெல் என இரண்டு பயிர்கள். ஒன்று இல்லாவிட்டாலும், ஒன்றில் கிடைப்பதால் மகிழ்ச்சியாக உள்ளார்கள்'' எனப் பதிலடி கொடுத்துள்ளனர்.

''தமிழ்நாட்டில் மூன்று போகம் நெல் சாகுபடி நடப்பதாக''க் கூறித் தனது முட்டாள்தனத்தை வெளிக்காட்டிக் கொண்ட சரத்பவார், ''விவசாயத் துணைத் தொழில்களான கால்நடை வளர்ப்பு, மீன் வளர்ப்பில் விவசாயிகள் ஈடுபட்டால், நல்ல வருமானம் கிடைக்கும்'' என்ற 'அரிய' ஆலோசனையை எடுத்துக் கூறி பிரச்சினையை திசை திருப்பியிருக்கிறார்.

''மீன் வளர்க்க மின்சாரத்துக்கு எங்கு போவது? யூனிட் 6 ரூபாய் வசூலிக்கிறார்கள். இலவசமாக மின்சாரம் கிடைக்குமா?'' என விவசாயிகள் கேட்டதில் மூக்குடைந்து போன அமைச்சர், ''நீங்கள் இப்படிக் கூடுதல் விலை கேட்டால், குறைந்த விலைக்கு எப்படி அரிசி கொடுக்க முடியும்?'' எனக் கேட்டு, விவசாயிகளைப் பொதுமக்களின் வில்லனாகக் காட்ட முயலுகிறார்.

ஒரு குவிண்டால் நெல்லுக்கு 250 ரூபாய் கூடுதலாகக் கொடுப்பதை மறுப்பதற்கு ஆயிரத்தெட்டு காரணங்களை அடுக்கும் சரத்பவார், புளுத்துப் போன கோதுமையை, அந்நிய நாடுகளில் இருந்து அநியாய விலைக்கு இறக்குமதி செய்வதற்கு எவ்விதத் தயக்கமும் காட்டியதில்லை. இந்த இறக்குமதியை எதிர்த்து வந்த கோதுமை விவசாயிகளின் கோபத்தைத் தணிப்பதற்காகத்தான், கோதுமையின் ஆதரவு விலையை ரூ. 1000/- என மைய அரசு அறிவித்திருக்கிறது.

''நெல்லுக்கு ஆதரவு விலை ரூ.1000/- கொடுத்தால், மக்களுக்குக் குறைந்த விலையில் எப்படி அரிசி கொடுக்க முடியும்?'' எனக் கேட்கிறார் சரத்பவார். ஆனால், பிரதமர் மன்மோகன் சிங்கோ, ''மக்களுக்குக் குறைந்த விலையில் அரிசியையும், கோதுமையையும் ஏன் வழங்க வேண்டும்?'' எனக் கேட்கிறார். ''மைய அரசு மக்கள் நலத் திட்டங்களுக்காக ரூ. 1 இலட்சம் கோடி ரூபாய் மானியமாக வழங்குவதாகவும்; இம்மானியம் முழுமையாக மக்களைச் சென்றடையவில்லை என்பதால், இம்மானியங்களை விரைவில் ஒழித்துவிட வேண்டும்'' என்ற அரிய ஆலோசனையை சமீபத்தில் கூறியிருக்கிறார், மன்மோகன் சிங்.

மூட்டை பூச்சிக்குப் பயந்து வீட்டைக் கொளுத்தச் சொல்லும் முட்டாள்தனம்தான் இது. பொது மக்களுக்கு ரேசன் கடைகளின் மூலம் மானிய விலையில் அரிசியும், கோதுமையும் வழங்கத் தேவையில்லை என்றால், விவசாயிகளுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை கொடுத்து, நெல்லையும், கோதுமையையும் மைய அரசு வாங்க வேண்டியதில்லை என்பதுதான் பொருள்.

**வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் தலைமையில் அமைக்கப்பட்ட தேசிய கமிசன் ஒரு குவிண்டால் நெல்லுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ. 1,400/- தரவேண்டும் எனப் பரிந்துரை செய்திருக்கும் பொழுது, மைய அரசோ ரூ. 1,000/- கூடத் தராமல் அடாவடித்தனம் செய்கிறது.**

''மானியங்களை அடியோடு ஒழிக்க வேண்டும்'' என்ற பொருளாதாரக் கொள்கை ஆட்சியில் இருக்கும்வரை, கோதுமைக்கு ரூ.1,000/- கிடைத்துவிட்டது எனக் கோதுமை விவசாயிகள் நிம்மதியடைந்து விடவும் முடியாது; இன்றில்லாவிட்டால் நாளை, நெல்லுக்கும் 1,000 கிடைத்துவிடும் என நெல் விவசாயிகள் காத்துக் கிடக்கவும் முடியாது.

தாராளமயம் விவசாயிகளின் கழுத்துக்குக் கத்தியாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது. தமிழக அரசு நடத்தி வந்த நெல் கொள்முதலை முந்தைய அ.தி.மு.க. ஆட்சி கைவிட்டதற்கும்; தற்போதைய தி.மு.க. ஆட்சி அதனை மீண்டும் கொண்டுவர மறுப்பதற்கும் தாராளமயம்தான் காரணம்.

தமிழகத்தில் முன்பு 70 இலட்சம் ஏக்கரில் நடந்துவந்த நெல் சாகுபடி தற்பொழுது 55 இலட்சம் ஏக்கராகச் சுருங்கி விட்டதாகக் கூறப்படுகிறது. நெல்லுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை கிடைக்கவில்லை என்றால், நெல் சாகுபடி பரப்பு மேலும் சரிந்து வீழ்வதைத் தடுக்க முடியாது. தமிழக மக்களின் ஆதார உணவுப் பயிரான நெல் சாகுபடியைப் பாதுகாக்க வேண்டும் என்றால், அந்நிய மூலதனத்திற்காக பாரம்பரிய உணவுப் பயிர் விவசாயத்தைப் புறக்கணிக்கும் தாராளமயத்தை எதிர்த்துப் போராடுவது தவிர்க்க முடியாதது!

●ரஹீம்


படிப்பகம்

www.padippakam.com

# மின்வெட்டு – டாலர் மதிப்புச் சரிவு
# தமிழகத்தை அழுத்தும் நுகத்தடிகள்

"பகலில் ஆலைகளை இயக்காமல் இரவில் இயக்குங்கள்; வாரத்துக்கு ஒருமுறை எந்திர இயக்கத்தை நிறுத்தி வையுங்கள்." - இவையெல்லாம், கடுமையான மின்வெட்டால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ள நெசவாலை முதலாளிகளிடம் தமிழக மின்துறை அமைச்சர் வைத்துள்ள வேண்டுகோள்கள். உணவுப் பஞ்சம் தலைவிரித்தாடிய 1960-களில் அன்றைய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி "வாரத்துக்கு ஒரு நாள் பட்டினி கிடப்பீர்" என்று நாட்டு மக்களுக்குச் செய்த உபதேசத்துக்குச் சற்றும் குறையாத பொறுப்பற்ற யோசனைகளே இவை.

பொன்விழா கொண்டாடிய தமிழ்நாடு மின்சார வாரியம், தமிழகத்தின் தேவையைவிட அதிகமாக மின்னுற்பத்தி செய்வதை, அது வெளியிட்டிருக்கும் நாட்காட்டிகளில் கூடச் சாதனையாக அறிவித்துள்ளது. அமைச்சர் வீராசாமியே பலமுறை இதனைப் பெருமையாகக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் நடைமுறையில், உண்மை நிலவரமோ வேறுவிதமாக உள்ளது.

கடந்த மூன்று மாதங்களாக தமிழகமெங்கும் அறிவிப்பின்றியே அடிக்கடி மின்சாரம் நிறுத்தப்படுகிறது. ஏற்கெனவே நேரம் தவறி விவசாயத்துக்கு வழங்கப்பட்டு வந்த மின்சாரமும் அடிக்கடி மின்தடையால் நின்று போய், நீர்ப்பாய்ச்சலின்றி விவசாயம் தத்தளிக்கத் தொடங்கியுள்ளது.

விருதுநகர் மாவட்டத்துக்குக் குடிநீர் வழங்கிவரும் தாமிரபரணி - மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், இம்மின்வெட்டால் கடுமையாகப் பாதிக்கப்பட்டு அம்மாவட்டத்தின் பல பகுதிகள் குடிநீர்த் தட்டுப்பாட்டினால் தவிக்கின்றன. பல லட்சம் தொழிலாளர்களின் வாழ்வுக்கு ஆதாரமான நெசவாலைகளுக்கும் விசைத்தறிகளுக்கும் தொடர்ச்சியாக மின்சாரம் கிடைக்காததால், கோவை-திருப்பூர் பகுதிகளில் நெசவுத் தொழில் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

பின்னலாடைத் தொழிலில் கூட மின்சாரத் தட்டுப்பாட்டை ஜெனரேட்டர்களை வைத்து இயக்கி சமாளித்து விட முடியும். ஆனால், விசைத்தறியோ கடும் மனித உழைப்பைக் கொண்டு குறைந்த லாபத்தில் இயங்கும் தொழிலாகும். இத்தொழிலுக்கு தினமும் 5 மணி நேர மின்வெட்டு என்றால், அத்தொழில் எவ்வளவு பாதிக்கப்படும் என்று சொல்லத் தேவையில்லை. இப்பாதிப்புகள் அனைத்தும் தொழிலாளர் தலையில் சுமத்தப்பட்டு, அவர்களது ஊதியமும் கணிசமாகக் குறைந்துள்ளது.

கோவை-ஈரோடு மாவட்டங்கள், தமிழகத்தின் மின்சாரத்தில் 13.5%-ஐ நுகரும் அளவுக்கு நெசவாலைகள், நூற்பாலைகளைக் கொண்டுள்ளன. இப்பகுதிகளில் பல சமயங்களில் 8 மணி நேரம் வரை மின்வெட்டு நீடிக்கிறது. இதனால் நெசவாலைகளும் நூற்பாலைகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டு உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது.

ஏற்கெனவே அமெரிக்க டாலரின் மதிப்பு வீழ்ச்சியால் 15%-க்கு மேல் இலாபத்தில் சரிவைக் கண்டுள்ள நெசவுத் தொழிலை மின் பற்றாக்குறையானது மேலும் நலிவடையச் செய்துவிடும் என்று தென்னிந்திய ஆலை அதிபர்கள் சங்கம் (சிமா) கூறுகிறது. இதுதவிர, தமிழகமெங்கும் பல்லாயிரக்கணக்கான சிறுதொழில் நிறுவனங்கள் தொடரும் மின்வெட்டால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

அரசு புள்ளி விவரங்களின்படி தமிழகத்தின் மொத்த மின்உற்பத்தி 10,000 மெகாவாட் ஆகும். இதில் 55% தமிழக அரசின் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்தும் 28% மத்திய அரசின் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்தும் 11% தனியார் மின்உற்பத்தி நிலையங்களிலிருந்தும் 3.5% வெளிமாநிலங்களிலிருந்தும் பெறப்படுகிறது.

இது தவிர, காற்றாலைகள் மூலம் ஏறத்தாழ 3000 மெகாவாட் மின்சாரம் கிடைக்கிறது. இருப்பினும், மின்வெட்டு தொடரக் காரணம் என்ன? "காற்றாலைகள் மற்றும் நீர்மின்

**மின்வெட்டுக்கு எதிராகவும் மறுகாலனியத் தாக்குதலுக்கு எதிராகவும் உசிலம்பட்டி, பென்னாகரம், தொண்டி ஆகிய பகுதிகளில் விவசாயிகள் விடுதலை முன்னணி கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. பென்னாகரத்தில் 18.12.07 அன்று பெண்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து வி.வி.மு. நடத்திய ஆர்ப்பாட்டம்.**





படிப்பகம்

www.padippakam.com

திட்டங்களிலிருந்து அண்மைக் கால மாக மின் உற்பத்தி எதிர்பார்த்த அளவுக்குக் கிடைக்கவில்லை. இது தான் மின்சாரத் தட்டுப்பாட்டுக்குக் காரணம்'' என்கிறார் அமைச்சர் வீராச்சாமி.

அணைகள் அனைத்தும் நிரம்பி வழியும் இந்நேரத்தில் மின்உற்பத்தி எப்படி முடங்கிப் போகும்? மேலும், காற்றாலைகள் மூலம் கிடைக்கும் மின் சாரம் மிகக் குறைவானதுதான். ஆனால், தற்போதைய மின்தட்டுப் பாடோ 30%-க்கு மேலாக இருக்கிறதே, அதற்குக் காரணம் என்ன?

கடந்த இருபது ஆண்டுகளாக மின் னுற்பத்தியிலும் மின் விநியோகத்திலும் புழங்கிவரும் எந்திரங்களோ, கருவிகளோ புதுப்பிக்கப்படவில்லை; சீர மைக்கப்படவில்லை. மின்தடையைப் பழுதுநீக்கி சரிசெய்யும் துறையிலும் பராமரிப்பிலும் பல்லாயிரக்கணக்கான காலி இடங்கள் நிரப்பப்படாமல், தற்காலிகத் தொழிலாளர்களை வைத்து சமாளித்து வருகின்றனர். சென்ற ஆட்சியில் கோரப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் இறுதியாக்கப்பட்டு முடிக்கப்படாததால் பல வேலைகள் கிடப்பில் உள்ளன. இத்தகைய நிர்வாகச் சீர்கேடுகளும் குளறுபடிகளுமே மின்தடைக்கு முக்கிய காரணங்களாகின்றன.

இதுதவிர, தினசரி ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற ரீதியில் கணக்கற்ற பன்னாட்டு நிறுவனங்களுடனும் தரகுப் பெருமுதலாளிகளுடனும் தமிழக அரசு போட்டுக் கொண்டிருக்கும் ஒப்பந்தங்கள் 24 மணி நேரத் தங்குத் தடையற்ற மின் வழங்கலை முன்னிபந்தனையாகக் கொண்டுள்ளன. புதிதாக உருவாகி வரும் 120 தொழில் பூங்காங்களால் மட்டும் 700 மெகாவாட்டுகள் வரை மின்தேவை கூடுதலாகியுள்ளது.

ஆனால், கூடுதல் மின்தேவையை ஈடு செய்யும் வகையில் மின் உற்பத்தி அதிகரிக்கப்படவில்லை. அதிக உற்பத்தியை ஈட்டி, அடுத்தடுத்து தங்கப்பதக்கம் வெல்லும் மேட்டூர் மின்நிலையத்திலும் ஊழியர் பற்றாக்குறை நிலவுவதிலிருந்தே அரசின் நிர்வாகச் சீர்கேட்டைப் புரிந்து கொள்ள முடியும்.

பத்தாண்டுகளுக்கு முன் தனியார் மின் உற்பத்தி 0.4 சதவீதமாக இருந்தது. தனியார்மயம் தேசியக் கொள்கையாகிவிட்ட பிறகு, இன்று தனியார் மின் உற்பத்தி 28.18 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. இத்தனியார் நிறுவனங்களிடமிருந்து பல மடங்கு அதிகமாக கட்டணம் செலுத்தி தமிழக அரசு மின் சாரத்தை வாங்குவதால் ஆண்டுக்கு ரூ. 1216 கோடி வரை நட்டமடைந்து வருகிறது. இதனால் மின்னுற்பத்தியை அதிகரிக்கவோ, பராமரிப்புப் பணிகளைச் செய்யவோ முடியாமல் மின் வாரியம் தடுமாறுகிறது.



எதிர்காலம் என்னவாகும்?: டாலர் மதிப்புச் சரிவினால் நெருக்கடியில் சிக்கி ''லே-ஆஃப்'' விடப்பட்ட மும்பையிலுள்ள நெசவாலையில், கவலையுடன் தொழிலாளர்கள்.

உள்ளூர் தொழிலுக்கும் விவசாயத்துக்குமான மின்சாரத்தை வெட்டி பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ள தமிழக அரசு, அதேநேரத்தில் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் - தொழில் பூங்காக்கள், பன்னாட்டு நிறுவனங்கள், கணினி தொழில்நுட்ப நிறுவனங்கள் முதலானவற்றுக்குத் தடையின்றி மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது. இதன்மூலம், அரசின் மின் விநியோகத்தின் மீது அவநம்பிக்கை உருவாகவும், தனியார் மின்சார விநியோகத்தை மக்கள் இயல்பாக ஏற்றுக் கொள்ளச் செய்யவுமான எதிர்விளைவையே உருவாக்கி வருகிறது.

மின்வெட்டால் கடும் பாதிப்புக்குள்ளான தமிழகம், நிர்வாகக் குளறுபடிகளைச் சீரமைத்தால் நெருக்கடியிலிருந்து மீண்டு விட முடியும். ஆனால் தனியார்மயம் - தாராளமயம் - உலகமயம் எனும் மறுகாலனியாதிக்கமோ, தமிழகம் உள்ளிட்டு நாட்டு மக்கள் அனைவரையும் மீள முடியாதபடி மரணக் குழியில் தள்ளும் பேரபாயமாகும்.

தாராளமயம் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளை தற்கொலைச் சாவுக்குத் தள்ளியுள்ள நிலையில், கடந்த ஏப்ரல் முதலாகத் தொடரும் டாலர் மதிப்புச் சரிவினால், ஏற்றுமதியைச் சார்ந்துள்ள ஜவுளித் தொழிலும் ஆயத்த ஆடைத் தொழிலும் மீள முடியாத நெருக்கடியில் சிக்கியுள்ளன. இத்தொழில்களை நம்பியுள்ள 3.5 கோடி தொழிலாளர்களின் எதிர்காலமோ இருண்டு கிடக்கிறது. இந்திய ரூபாய்க்கு நிகராக, டாலரின் மதிப்பு 12%-க்கு மேல் குறைந்து விட்டதால், மும்பையில் பல நிறுவனங்கள் ''லே-ஆப்'' அறிவித்துள்ளன. ஏறத்தாழ 70,000 ஒப்பந்தத் தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர். திருப்பூரில் ஏற்கெனவே 10,000 பேர் வேலையிழந்து, மேலும் 50,000 பேர் வேலையிழக்கும் அபாயத்தில் உள்ளனர். ஜவுளித் தொழிலில் மட்டும் பல்லாயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. டாலர் மதிப்புச் சரிவானது, நாடெங்கும் 80 லட்சம் பேரின் வேலையைப் பறித்துவிடும் என்று அஞ்சப்படுகிறது.

தமிழகத்தையும் நாட்டையும் மறுகாலனியாக்கம் எனும் கொள்ளை நோய் சூறையாடிக் கொண்டிருக்கும் நிலையில், எதிர்க்கட்சிகளோ மின் வெட்டினால் ஏற்பட்டுள்ள பாதிப்பை வைத்து போராட்டங்களை நடத்தி மக்கள் பிரச்சினைகளுக்குப் போராடுவதைப் போல நாடகமாடுகின்றன. மறுகாலனியாக்கம் எனும் மையமான விவகாரத்தை விட்டுப் பக்கவாட்டில் ஒதுங்கிக் கொண்டு சூரத்தனம் காட்டும் இந்த ஓட்டுக் கட்சிகள், தலைக்கே பேராபத்து வந்துள்ளபோது தலைவலிக்கு மருந்து கேட்கின்றன.

● தனபால்


படிப்பகம்

www.padippakam.com

# மக்களின் போராட்டமே அரசு பயங்கரவாதிகளைத் தண்டிக்கும்

## காக்கிச் சட்டை கிரிமினலைத் தண்டிக்கக் கோரி தஞ்சை நகர மக்கள் நடத்திய போராட்டம் உணர்த்தும் உண்மை.

விசாரணைக்காக கோவையிலிருந்து தஞ்சைக்கு அழைத்து வரப்பட்ட அகிலாண்டேஸ்வரி என்ற பெண், போலீசு இன்ஸ்பெக்டர் சேதுமணி மாதவனின் பாலியல் பலாத்காரம் - சித்திரவதையால் கொல்லப்பட்டு, ஓட்டல் அறையில் பிணமாகத் தூக்கில் தொங்கிய சம்பவம், கடந்த நவம்பர் மாதத்தில் தஞ்சை நகரையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

வேலை வாங்கித் தருவதாகக் கூறி பணமோசடி செய்ததாக கார்த்திக் என்பவர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தஞ்சையைச் சேர்ந்த ஜானகிராமன், இளையராஜா, கோவையைச் சேர்ந்த கணினிப் பொறியாளர் அகிலாண்டேஸ்வரி ஆகியோர் மீது வழக்குப் பதிவு செய்தார், தஞ்சை மருத்துவக் கல்லூரி போலீசு நிலைய ஆய்வாளரான சேதுமணி மாதவன். ஏற்கெனவே அதிகார போதைத் தலைக்கேறி ஆட்டம் போட்டு வந்த சேதுமணி மாதவன், வழக்கில் உள்ளவர்களைக் கைது(!) செய்து திருச்சியிலுள்ள குரு லாட்ஜ், கஜப்பிரியா ஓட்டல் ஆகிய இடங்களில் சட்டவிரோதமாக அடைத்து வைத்து, அடித்து உதைத்து மிரட்டி அவர்களிடம் இலட்சக்கணக்கில் பணம் பறித்துள்ளார். அகிலாவிடமும் அவரது பெற்றோரிடமும் பல லட்சங்களைக் கறந்த சேதுமணி மாதவன், அவர்களைத் தஞ்சையில் மேட்டுக்குடி கும்பல்களின் களிவெறியாட்ட விடுதியான "டெம்பிள் டவர்" ஓட்டலில் அடைத்து வைத்துச் சித்திரவதை செய்துள்ளார்.



காக்கிச்சட்டை கிரிமினல்களின் பாலியல் பலாத்காரத்தால் கொல்லப்பட்ட அகிலாண்டேஸ்வரி.

மேலும் பணம் கொண்டுவரச் சொல்லி அவர்களை அனுப்பி விட்டு, அகிலாவை மட்டும் உடனே திரும்பி வரச் சொல்லி மிரட்டி, அச்சுறுத்தியுள்ளார். 16.11.07 அன்று தஞ்சை வந்த அகிலாவை பேருந்து நிலையத்திலிருந்து போலீசு வாகனத்திலேயே ஏற்றிச் சென்று "டெம்பிள் டவர்" ஓட்டலில் அடைத்துத் தொடர்ந்து பாலியல் வன்முறையை ஏவியுள்ளார். சேதுமணி மாதவனோடு விபச்சார புரோக்கரும் முன்னாள் அரசு ஊழியருமான பாலு, ஏட்டு கணேசன் ஆகியோர் கூட்டுச் சேர்ந்து இந்த அயோக்கியத்தனத்தைச் செய்துள்ளனர். இதற்கு ஜெயலட்சுமி என்ற பெண் போலீசு இன்ஸ்பெக்டர் உதவி செய்திருக்கிறார்.

தனக்கு நேர்ந்த கொடுமையை மரண வாக்குமூலம் போல தனது அம்மாவுக்கு 19.11.07 அன்று கடிதமாக எழுதி அனுப்பியுள்ளார், அகிலா. அதே நாளில் சேதுமணி மாதவனின் தொடர் பாலியல் வன்முறையால் கொல்லப்பட்டுள்ளார். அகிலாவின் பெற்றோரை அவசரமாகத் தொலைபேசியில் அழைத்த சேதுமணி மாதவன், அகிலா அளவுக்கதிகமாக தூக்க மாத்திரை சாப்பிட்டு விட்டதாகக் கூறி, உடனே புறப்பட்டு வரச் சொல்லிவிட்டு, அகிலா தூக்குமாட்டித் தற்கொலை செய்து கொண்டதாக ஜோடித்தார்.

அகிலாவின் பெற்றோரிடம் பிணத்தை ஒப்படைக்காமல், ஒப்படைத்து விட்டதாக மிரட்டிக் கையெழுத்துப் பெற்றுக் கொண்டு, தஞ்சை ரெட்டிப்பாளையம் சுடுகாட்டில் வைத்து போலீசே முன்னின்று பிணத்தை எரித்துள்ளது. பாலியல் வன்முறையை ஏவிக் கொலை செய்துள்ள தடயங்களை அதிகார பலத்தைக் கொண்டு அழித்துவிட்ட போலீசு கும்பல், அகிலாவின் பெற்றோரை மிரட்டி, "என் மகள் தற்கொலைதான் செய்து கொண்டாள்; என் மகள் சாவுக்குப் போலீசு காரணம் இல்லை" என்று வாக்குமூலம் பெற்றுள்ளது.

சேதுமணி மாதவன், சீருடை அணிந்த ஒரு ரௌடி. மனித உரிமை மீறல் குற்றவாளி என மதுரை உயர்நீதி மன்றத்தால் தண்டிக்கப்பட்டு, தமிழக அரசால் பதவி நீக்கம் செய்யப்



படிப்பகம்

www.padippakam.com

பட்டுள்ள முன்னாள் போலீசு எஸ்.பி.யான பிரேம்குமார் தஞ்சையில் பணியாற்றிய போது, அவருடன் சேர்ந்து சேதுமணி மாதவன் நடத்திய 'மோதல்' படுகொலைகள் ஏராளம். சிவில் வழக்குகளில் தலையிட்டுக் கட்டப்பஞ்சாயத்து செய்து பணம் பறிப்பது, பெண் கைதிகளை மிரட்டிப் பாலியல் வன்முறையை ஏவுவது, விசாரணைக் கைதிகளை அடித்துக் கொட்டடியிலேயே கொல்வது, கைத்துப்பாக்கியை இடுப்பில் சொருகிக் கொண்டு சுட்டு விடுவேன் என்று அதிகாரத் திமிரோடு மக்களை மிரட்டுவது என்பதாக இந்தக் காக்கிச் சட்டை கிரிமினலின் கொட்டம் தலைவிரித்தாடியது. அதிலும், திருவாரூர், தி.மு.க. செயலாளர் பூண்டி கலைச்செல்வன் கொலை வழக்கு விசாரணைக் குழு, திருச்சி தீவிரவாத எதிர்ப்புப் படைக்குழு ஆகியவற்றில் சேதுமணி மாதவன் அங்கம் வகிப்பதால், உயரதிகாரிகளுடன் நெருக்கம் காரணமாக அதிகார போதையில் ஆட்டம் போட்டு வந்தார்.



சேதுமணி மாதவன் உள்ளிட்ட குற்றவாளிகளைத் தண்டிக்கக் கோரி, "கோவை அகிலா காவல் கொலைக்கு நீதிகோரும் கூட்டமைப்பு" சார்பாக தஞ்சையில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம்.

இருப்பினும், மனோகரன் என்பவர் மீது பொய் வழக்குப் போட்டு பணம் பறித்த சேதுமணி மாதவனுக்கு மனித உரிமை ஆணையம் ரூ. 25,000 அபராதம் விதித்துள்ள விவகாரம் உள்ளிட்டு, அவரது கொலைகளும் அத்துமீறல்களும் ஏற்கெனவே அம்பலமாகியுள்ளதாலும், அகிலா கொலையில் அவர் சிக்கியிருப்பது மெதுவாகக் கசியத் தொடங்கியதாலும், வேறு வழியின்றி அவர் மீது, அகிலாவைத் தற்கொலைக்குத் தூண்டியதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் சேதுமணி மாதவனோ, கைது செய்யப்படுவதிலிருந்து தப்பிக்க நெஞ்சுவலி என்று மருத்துவமனையில் படுத்துக் கொண்டார். போலீசு கும்பலோ புலன் விசாரணை முடிந்துவிட்டதாகக் கூறி அவருக்குப் பிணை வாங்க முயற்சித்தது.

தண்டனையின்றித் தப்பிக்க கொலைகார சேதுமணி மாதவனும் போலீசு கும்பலும் தகிடுதத்தங்களில் இறங்கத் தொடங்கியதும், தஞ்சையில் இயங்கும் ம.க.இ.க., பு.மா.இ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள், இக்கொலைகார போலீசின் ஆள் கடத்தல், சட்டவிரோதமாக அடைத்து வைத்துச் சித்திரவதை, பணம் பறிப்பு, பாலியல் வன்முறை ஆகிய கொடிய குற்றங்களுக்காகக் கைது செய்து தண்டிக்கக் கோரி நகரெங்கும் விரிவான பிரச்சாரத்தை மேற்கொண்டன. அகிலாவின் கடைசி கடிதத்தைச் சுவரொட்டியாக அச்சிட்டு ஒட்டி, கொலைக் குற்றவாளி சேதுமணி மாதவன்தான் என்பதை ஆதாரத்துடன் அம்பலப்படுத்திக் காட்டியது.

காக்கிச் சட்டை கிரிமினல் போர்வழி சேதுமணி மாதவன்.



இதைத் தொடர்ந்து, ம.க.இ.க., பு.மா.இ.மு., மனித உரிமை பாதுகாப்பு மையம், ஆதித் தமிழர் பேரவை, தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சி, தமிழக இளைஞர் முன்னணி, விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகளும் அமைப்புகளும் இணைந்து "கோவை அகிலா காவல் கொலைக்கு நீதிகோரும் கூட்டமைப்பு" நிறுவப்பட்டு, அக்கூட்டமைப்பின் சார்பில் பிரசுரம், சுவரொட்டி, தெருமுனைக் கூட்டங்கள் வாயிலாக நகரெங்கும் வீச்சாகப் பிரச்சாரமும் அதன் தொடர்ச்சியாக கண்டன ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டன.

மனித உரிமை பாதுகாப்பு மையம், கீழமை நீதிமன்றத்தில் இக்கொலைகாரனுக்குப் பிணை வழங்கக் கூடாது என்று மனு செய்ததோடு, உயர்நீதி மன்றத்தில் இக்குற்றவாளியைத் தப்புவிக்கும் வகையில் நடக்கும் போலீசு விசாரணைக்குத் தடை கோரியும், மையப்புலனாய்வுத் துறை மூலம் விசாரணை நடத்தக் கோரியும் மனு செய்தது. அதன்படி, கொலைகார சேதுமணி மாதவனுக்குப் பிணை மறுக்கப்பட்டு, மருத்துவமனையிலிருந்து சிறைக்கு அனுப்பப்பட்டுள்ளார். போலீசு விசாரணைக்குத் தடை விதித்துள்ள மதுரை உயர்நீதி மன்றம், நீதித்துறை மூலம் விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளது.

உழைக்கும் மக்களை அணிதிரட்டி இக்கூட்டமைப்பும் இதர ஜனநாயக சக்திகளும் தொடர்ச்சியாக மேற்கொண்ட பிரச்சாரம் மற்றும் போராட்டங்களால்தான் சீருடை அணிந்த கிரிமினல் சேதுமணி மாதவன் இப்போது கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளாரே தவிர, அரசின் நடுநிலையான சட்டம் - நீதியினால் அல்ல. இது தஞ்சை மக்களின் போராட்டத்திற்குக் கிடைத்த் முதற்கட்ட வெற்றி. முன்னுதாரணமிக்க இப்போராட்ட வெற்றியைச் சாதகமாக்கிக் கொண்டு, கொலைகார சேதுமணி மாதவனின் கூட்டாளிகளான சாதிவெறியர்கள், சமூக விரோதிகள், ஓட்டுக்கட்சி கிரிமினல்கள், ஓட்டல் அதிபர்கள், போலீசு அதிகாரிகள் உள்ளிட்டு அனைவரையும் தண்டிக்கக் கோரி, மனித உரிமை - ஜனநாயக உரிமைகளுக்காக உழைக்கும் மக்கள் வீதியில் இறங்கிப் போராடுவதன் மூலமே, போலீசு பயங்கரவாதிகளின் கொட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர முடியும்.

– பு.ஜ. செய்தியாளர்கள், தஞ்சை.


படிப்பகம்

www.padippakam.com

# ராமன் பாலம் என்பது புராணப் புரட்டு! பார்ப்பன மதவெறிக் கும்பலை விரட்டு!

## – தமிழகமெங்கும் புரட்சிகர அமைப்புகளின் தொடர் பிரச்சாரம்

**ரா**மன் பாலம் எனும் புராணப்புரட்டை வைத்து தமிழகத்தில் காலூன்றத் துடிக்கும் பார்ப்பன மதவெறி பாசிச கும்பலுக்கு எதிராக ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் தமக்கே உரித்தான போர்க்குணத்துடன் தமிழகமெங்கும் வீச்சாகப் பிரச்சார இயக்கத்தை நடத்தி வருகின்றன. பெருமழை காரணமாகவும் போலீசின் அனுமதி மறுப்பாலும் தற்காலிகமாக தடைபட்ட இப்பிரச்சார இயக்கம் மீண்டும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

திருவாரூரில், கடந்த 30.11.07 அன்று பு.மா.இ.மு. சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய ம.க.இ.க. மாநில இணைச்செயலர் தோழர் காளியப்பன், பார்ப்பன-பாசிச கும்பலின் சூழ்ச்சிகள், சதிகளைத் தோலுரித்துக் காட்டினார். அதைத் தொடர்ந்து ம.க.இ.க. மையக் கலைக் குழுவினர் நடத்திய புரட்சிகர கலைநிகழ்ச்சி மற்றும் கதா காலட்சேபம், கூட்டத்திற்குத் திரளாக வந்திருந்த உழைக்கும் மக்களிடமும் பார்ப்பன எதிர்ப்பாளர்களிடமும் உற்சாகமானதொரு வரவேற்பைப் பெற்றது.

தருமபுரியில், கடந்த நவம்பரில் வி.வி.மு.வினரால் ஏற்பாடு செய்யப்பட்ட பொதுக்கூட்டம் போலீசு அனுமதி மறுப்பால் தடைபட்டு, உயர்நீதிமன்றத்தில் இவ்வமைப்பினர் முறையிட்டு அனுமதி பெற்று 9.12.07 அன்று பெருத்த வரவேற்புடன் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்புரையாற்றிய ம.க.இ.க. மாநில பொதுச்செயலர் தோழர் மருதையன், ராமாயணத்தில் உள்ள பார்ப்பன சாதிவெறியையும், ராமன் பாலத்துக்காக உத்தரவு போடும், உச்சநீதிமன்றத்தின் உச்சிக்குடுமித்தனத்தையும் அங்குலம் அங்குலமாகத் திரைகிழித்துக் காட்டினார். ஓசூர் பகுதியைச் சேர்ந்த இளந்தோழர்கள் நடத்திய ''ராமனுக்குத் தூக்கு!'' எனும் ஓரங்க நாடகமும், ம.க.இ.க. மையக் கலைக்குழுவினர் நடத்திய புரட்சிகர கலைநிகழ்ச்சி மற்றும் கதாகாலட்சேபமும் உழைக்கும் மக்களிடம் சிறப்பானதொரு வரவேற்பைப் பெற்றது. இதே தருமபுரியில், இல்லாத ராமன் பாலத்தை இடிக்கக் கூடாதென்று இந்து வெறிகும்பல் நடத்திய 'மாபெரும்' பொதுக்கூட்டத்துக்கு 50 பேர் கூடத் திரளாத நிலையில், புரட்சிகர அமைப்புகள் நடத்திய இப்பொதுக்கூட்டத்துக்கு ஆயிரக்கணக்கில் உழைக்கும் மக்கள் திரண்டு வந்ததே, இப்பிரச்சார இயக்கத்தின் வெற்றியைப் பறைசாற்றுகிறது.




– பு.ஜ.செய்தியாளர்கள்.

# மனித உரிமை பாதுகாப்பு மையத்தின் சேலம் கிளை தொடக்க விழா: நம்பிக்கையின் ஒளிக்கீற்று!

**தி**ருச்சி, மதுரை, கடலூர், கோவை மாவட்டங்களில் செயல்பட்டு வரும் மனித உரிமை பாதுகாப்பு மையம் (HRPC) ''மனித உரிமை காப்போம்! மக்கள் விடுதலைக்கு அணி வகுப்போம்!'' என்ற முழக்கத்துடன் தனது சேலம் மாவட்டக் கிளை தொடக்க விழாவை கடந்த டிசம்பர் 1-ஆம் தேதியன்று சேலம் தமிழ்ச்சங்கம் அரங்கில் நடத்தியது.

வழக்குரைஞர் மாயன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மனித உரிமைப் போராளியும் ம.உ.பா.மையத்தின் மதுரை மாவட்டக்கிளை தலைவருமான நல்லகாமன், சேலம் மாவட்ட குற்றவியல் வழக்குரைஞர் சங்கத் தலைவர் சந்திரசேகரன், செயலர் மூர்த்தி, திராவிடர் கழக மாவட்ட அமைப்பாளர் கௌதம பூபாலன், புதிய பண்பாட்டு இயக்கத்தைச் சேர்ந்த வழக்குரைஞர் செந்தில், புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் நேசன் மற்றும் மூத்த வழக்குரைஞர்கள் பலர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். இவ்விழாவில் ''எட்டிப்பார்த்தால் பீனல் கோடு; தொட்டுப்பார்த்தால் பூணூல் கோடு'' என்ற தலைப்பில் உரையாற்றிய ம.உ.பா. மையத்தின் மாநில






படிப்பகம்

www.padippakam.com

ஒருங்கிணைப்பாளர் ராஜு, நீதிமன்றங்கள் மனுநீதி மன்றங்களாகச் செயல்பட்டு வருவதை பல்வேறு தீர்ப்புகளிலிருந்து எடுத்துரைத்தார். "மறுகாலனியாதிக்கமும் நீதிமன்றச் சர்வாதிகாரமும்" என்ற தலைப்பில் உரையாற்றிய பெங்களூரு உயர்நீதிமன்ற வழக்குரைஞர் பாலன், போராடும் மக்களை ஒடுக்கி வரும் பல்வேறு நீதிமன்றத் தீர்ப்புகளை அடுக்கடுக்காக விளக்கி, இந்த அடக்குமுறைக்கு எதிராக போராட அறைகூவினார்.

சேலம் ம.உ.பா. மையத்தின் தலைவர் வழக்குரைஞர் ஞானசேகரன், செயலாளர் மாயன், பொருளாளர் இராசேந்திரன் உள்ளிட்ட புதிய நிர்வாகிகளை ம.உ.பா.மையத்தின் மாநில ஒருங்கிணைப்பாளரான ராஜு அறிமுகப்படுத்தினார்.

பாசிச இருள் சூழ்ந்து வரும் இன்றைய நிலையில், குறிப்பாக கந்துவட்டிக் கொள்ளையர்களும் கட்டப் பஞ்சாயத்து செய்து பணம் பறிக்கும் போலீசு கும்பலும் கூட்டுச் சேர்ந்து மக்களை வதைக்கும் சேலம் மாவட்டத்தில், இத்தகைய மனித உரிமை-ஜனநாயக உரிமைகளுக்கான அமைப்புகளும் போராட்டங்களும் மிக அவசியமானவை என்பதை உணர்த்தி, மக்கள் உரிமைகளுக்காகப் போராடாமல் ஒதுங்கிக் கொள்ளும் பெயர்ப்பலகை மனித உரிமை அமைப்புகளை அம்பலப்படுத்தி, திரளான ஜனநாயக சக்திகளின் பங்கேற்புடன் நடந்த இந்த விழா, உழைக்கும் மக்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

**- பு.ஜ.செய்தியாளர், சேலம்.**

# அதிகார வர்க்கத்தைப் பணிய வைத்த மக்கள் போராட்டம்

தஞ்சாவூரில், மருத்துவக் கல்லூரி சாலையிலிருந்து மானோஜிப்பட்டி, ஈஸ்வரி நகருக்குச் செல்லும் அனைத்து சாலைகளும் பாதாள சாக்கடைத் திட்டத்திற்காகத் தோண்டப்பட்டு கடந்த மூன்றரை ஆண்டுகளாகச் சீரமைக்கப்படாமல் குண்டும் குழியுமாகிக் கிடக்கின்றன. அடித்தள உழைக்கும் மக்கள் வாழும் இப்பகுதியிலிருந்து வேலைக்குச் செல்வோர், வியாபாரத்துக்குச் செல்வோர், பள்ளி-கல்லூரிகளுக்குச் செல்வோர், "மினி" பேருந்துகள், ஆட்டோக்கள் என எப்போதும் பரபரப்பாகக் காணப்பட்ட இச்சாலைகள் இப்போது வெறிச்சோடிக் கிடக்கின்றன. மழைக்காலங்களில் வெளியுலகத் தொடர்பின்றி இப்பகுதி தனித்தீவாகத் தத்தளிக்கிறது.

உலக வங்கியிடம் கடன் பெற்று செயல்படுத்தப்படும் இப்பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவடைந்து விட்டதாக அறிவித்து அமைச்சர் ஸ்டாலினை வைத்து திறப்பு விழாவும் நடத்தி விட்டது, தஞ்சை நகராட்சி. ஆனால், மேட்டுக்குடியினர் வாழும் பகுதிகளில் மட்டும் சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளனவே தவிர, அடித்தள மக்கள் வாழும் பகுதிகள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகின்றன.

சாலை சீரமைக்கப்படாததால் இரண்டு கி.மீ. தூரம் சுற்றிச் சென்று அல்லலுற்ற மானோஜிப்பட்டி மக்கள், கையெழுத்து இயக்கம் நடத்தி மாவட்ட ஆட்சியர், நகராட்சி ஆணையர், அமைச்சர்கள் என அனைவருக்கும் மனு கொடுத்து ஓய்ந்து போயினர். பின்னர் அதிரடியாக நாற்று நடும் போராட்டத்தை நடத்தி, கவனத்தை ஈர்த்துப் பார்த்தனர். அதிகாரிகளோ போதிய நிதியில்லை என்று சொல்லியே தொடர்ந்து இழுத்தடித்து வந்தனர். இப்பகுதியில் இயங்கும் ம.க.இ.க; பு.மா.இ.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள், இளைஞர்களை அணிதிரட்டி சாலை மறியல் போராட்டம் நடத்த ஏற்பாடுகளைச் செய்து வந்த நிலையில், விடுதலைச் சிறுத்தைகளும் இதர அமைப்புகளும் இதில் இணைந்து கூட்டியக்கமாக முன்னேறியது.

இக்கூட்டியக்கத்தின் மூலம் தெருமுனைக் கூட்டங்கள், துண்டுப் பிரசுரம்-சுவரொட்டிகள் , ஆட்டோ பிரச்சாரம் என முழுவீச்சில் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு சாலை மறியல் போராட்டத்துக்கு மக்கள் அணிதிரட்டப்பட்டனர். இப்பிரச்சார இயக்கத்தின் வீச்சையும் மக்களின் பேராதரவையும் கண்டு அரண்டு போன மாவட்ட போலீசு கண்காணிப்பாளர், சாலைமறியல் செய்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்ளூர் தொலைக்காட்சிகள் மூலம் எச்சரித்தார். உளவுத்துறை போலீசார் போராட்டத்தை நிறுத்தச் சொல்லி முன்னணியாளர்களை மிரட்டிப் பார்த்தனர்.

இவற்றையெல்லாம் துச்சமாக மதித்து, திட்டமிட்டபடி 19.1107 அன்று சாலை மறியலுக்காக உழைக்கும் மக்கள் பேரணியாகப் புறப்பட்டு முன்னேறியதும், கைது செய்ய வந்த போலீசு, பெரும் மக்கள் திரளைக் கண்டு பீதியடைந்து, அதிகாரிகளை அழைத்து வந்து பேச்சு வார்த்தை நடத்தியது. விண்ணதிரும் முழக்கங்களுடன் போர்க்குணத்தோடு அணி



திரண்ட மக்கள்திரளிடம் மண்டியிட்ட அதிகார வர்க்கம், உடனடியாக கிராவல் மண்கொட்டி சாலைகளைச் சீரமைப்பதாகவும், ஜனவரி 30-ஆம் தேதிக்குள் தார்ச்சாலைகளை அமைப்பதாகவும் போராட்டக் குழுவினரிடம் எழுத்துபூர்வமாக உறுதியளித்தது. அதன்படி நகராட்சி, மறுநாளே சாலை சீரமைப்புப் பணிகளை தொடங்கியது.

மக்கள் திரளின் போர்க்குணமிக்க போராட்டங்களின் மூலமே எருமைத் தோல் அதிகார வர்க்கத்தை அடிபணிய வைக்க முடியும் என்பதை மானோஜிப்பட்டி மக்களின் போராட்ட வெற்றி மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.

**- பு.ஜ. செய்தியாளர்கள், தஞ்சை.**


படிப்பகம்

www.padippakam.com

## பழங்குடி இனப் பெண்கள் மீது பாலியல் வன்முறை

# தமிழகத்துக்குச் சிறப்பு அதிரடிப்படை
# ஆந்திராவுக்கு வேட்டை நாய்ப்படை

ஆந்திரப் பிரதேச மாநிலத்தில், விசாகப்பட்டினம் நகரில் இருந்து 150 கி.மீ. தொலைவில், கிழக்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள வாகப்பள்ளி, கோண்ட் பழங்குடியினர் வசித்து வரும் மலைக் கிராமம். நேற்று வரை வெளியுலகம் அறிந்திராத சாதாரண கிராமமாக இருந்த வாகப்பள்ளி, இன்று ஆந்திரப் போலீசாரின் ரவுடித்தனத்தையும், பொறுக்கித்தனத்தையும் எதிர்த்து நிற்கும் போராட்ட மையமாக மாறியிருக்கிறது.

ஆந்திர மாநில அரசால், நக்சல்பாரிப் போராளிகளை வேட்டையாடுவதற்காகவே உருவாக்கப்பட்டுள்ள சிறப்புப் போலீசுப் படைப்பிரிவான ''வேட்டை நாய்'' (Greyhounds) போலீசார் கடந்த ஆகஸ்டு 20 அன்று, வாகப்பள்ளிக் கிராமத்திற்குள் நுழைந்தனர். கணேஷ் என்ற பெயர் கொண்ட மாவோயிஸ்டு 'தீவிரவாதியை'த் தேடுவது என்ற பெயரில், அக்கிராமத்திற்குள் நுழைந்த இந்த ''வேட்டை நாய்கள்'', அப்பழங்குடியினரின் வீடுகளுக்குள் அத்து மீறிப் புகுந்து துவம்சம் செய்ததோடு, 11 பெண்களைக் கும்பலாகப் பாலியல் பலாத்காரப்படுத்தினர். சமீபத்தில் குழந்தையை ஈன்றெடுத்த ஒரு இளம் தாய்கூட, இம்மிருகங்களின் பாலியல் வேட்டைக்குப் பலியாகியுள்ளார்.

அப்பெண்களும் பழங்குடியினரும் அவமானத்திற்குப் பயந்து, இப்பாலியல் பலாத்காரத் தாக்குதலை வெளியே சொல்ல முடியாமல், வீட்டிற்குள்ளேயே முடங்கிப் போய் விடுவார்கள் என ஆந்திர போலீசு இறுமாந்து கிடந்தது. ஆனால், அவர்களோ இவ்வேட்டை நாய்களால் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கும், அவமானத்திற்கும் நீதி பெறாமல் விடப்போவதில்லை என்ற முடிவோடு போராட்டத்தில் குதித்து விட்டனர்.

பாலியல் வன்புணர்ச்சிக்கு ஆளான பெண்கள் சம்பவம் நடந்த அன்றே, வாகப்பள்ளிக்கு அருகேயுள்ள நுர்மதி கிராமத் தலைவரிடம் சென்று உதவி கோரினர்; பிறகு, வாகப்பள்ளி, நுர்மதி கிராமங்களைச் சேர்ந்த பழங்குடி இன மக்கள் அணிதிரண்டு சென்று, குற்றவாளிகள் மீது வழக்குப் பதிவு செய்யுமாறு பதேரு போலீசு நிலையத்தில் முறையிட்டனர். அங்கிருந்த போலீசு அதிகாரிகள் வழக்குப் பதிவு செய்யாமல், இப்பாலியல் வன்கொடுமையை மூடிமறைத்து விடும் சதித்தனத்தில் இறங்கிய பொழுது, பகுஜன் சமாஜ் கட்சியைச் சேர்ந்த அப்பகுதி சட்டமன்ற உறுப்பினர் லேக் ராஜாராவ் இப்பிரச்சினையில் தலையிட்டு, முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்ய வைத்தார்.

ஆந்திரப் போலீசின் இந்த அத்துமீறல் வெளியே தெரிய ஆரம்பித்தவுடனேயே, மாவட்ட போலீசு கண்காணிப்பாளர், அகுன் சபர்லால், ''வேட்டை நாய் போலீசுப் படைப் பிரிவு அக்கிராமத்தின் பக்கம் தலை வைத்துக் கூடப் படுக்கவில்லை'' எனத் தடாலடியாக மறுத்தார். வேட்டை நாய் படையைச் சேர்ந்த போலீசார் எங்கே -

ஆந்திரப் போலீசின் பொறுக்கித்தனத்தையும், ரவுடித்தனத்தையும் எதிர்த்துச் சமரசமின்றிப் போராடி வரும் வாகப்பள்ளியைச் சேர்ந்த பழங்குடியினப் பெண்கள்.





படிப்பகம்

www.padippakam.com

போகிறார்கள், என்ன செய்கிறார்கள் - என்ற விவரங்கள் ஒரு சில உயர் போலீசு அதிகாரிகளைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. அப்படையைச் சேர்ந்த போலீசார் சீருடை அணியத் தேவையில்லை; பெயர் மற்றும் பதவியைக் குறிக்கும் பட்டைகளை (badge) அணிந்திருக்கத் தேவையில்லை. அவர்கள் தேடுதல் வேட்டைக்குச் செல்லும் வாகனங்களில் பதிவு எண் இருக்க வேண்டிய அவசியமில்லை; அப்படையின் நடமாட்டம் குறித்து எந்த ஆவணத்திலும் பதிவு செய்ய வேண்டியதில்லை என அப்படையின் நடவடிக்கைகள் அனைத்தும் இரகசியமாகப் பாதுகாக்கப்படுவதால், வாகப்பள்ளி கிராமத்தில் அவர்கள் நடத்திய பாலியல் வேட்டையை எளிதாக மறைத்து விட முடியும் என ஆந்திர உயர் போலீசு அதிகாரிகள் மட்டுமின்றி, ஆந்திர முதலமைச்சர், உள்துறை அமைச்சரும் கூட நம்பினார்கள்.

எனினும், ''ஒரு குற்றச்சாட்டு பற்றி ஆரம்ப கட்ட விசாரணை கூட நடத்தாமல், அதனை எப்படி மறுக்க முடியும்?'' எனப் பல்வேறு ஜனநாயக அமைப்புகளும், அறிவுலகத் துறையினரும் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்க முடியாமல், போலீசு அதிகாரிகள் திணறிப் போனார்கள். பிறகு, நிலைமையைச் சமாளிக்கும் விதமாக, ''அப்படையினர் வாகப்பள்ளிக் கிராமத்திற்குப் போனார்களே தவிர, எவ்வித அத்துமீறலிலும் ஈடுபடவில்லை'' என அரை உண்மையைக் கக்கினார், அகுன்சபர்லால்.

அம்மாவட்டக் கூடுதல் போலீசு கண்காணிப்பாளர் ஐந்து இலட்ச ரூபாய் பணத்தைக் கொடுத்து, அப்பெண்களின் வாயை அடைக்க முயற்சி செய்தார். அப்பெண்களோ, ''குற்றவாளிகளைத் தண்டியுங்கள்; இதைவிட அதிகமான பணத்தை உங்களுக்குத் தருகிறோம்'' எனப் பதிலடி கொடுத்து, போலீசின் முகத்தில் கரியைப் பூசினார்கள்.

தங்களை அவமானப்படுத்திய பெண்களைப் பழிவாங்கும் விதமாக, ஆந்திர மாநில போலீசு இயக்குநர் பஸ்தி, ''ஆந்திர போலீசாரின் தேடுதல் வேட்டையைத் தடுக்கும் நோக்கத்தோடுதான், அப்பெண்கள் இப்படிப்பட்ட அபாண்டமான குற்றச்சாட்டைக் கூறுகிறார்கள்; இதன் மூலம், அவர்கள் மாவோயிஸ்டுகளுக்கு உதவுகிறார்கள்'' எனக்கூறி அப்பெண்களை இரண்டாம் முறையாக அவமானப்படுத்தினார். அதேசமயம் ஆந்திர அரசோ, பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பத்து கிலோ அரிசியும், ஒரு பாட்டில் மண்ணெண்ணெயும் கொடுப்பதாகக் கூறி, பழங்குடி இனப் பெண்களின் ''கற்புக்கு'' விலை நிர்ணயித்தது.



**விசாரணையை முறையாக நடத்தக் கோரி, பாதிக்கப்பட்ட பழங்குடியினப் பெண்கள் பதேருவில் எட்டு நாட்கள் நடத்திய உண்ணாவிரதப் போராட்டம்.**

காங்கிரசு அரசின், போலீசு அதிகாரியின் இந்த பாசிசக் கொழுப்பிற்குப் பொதுமக்கள் பதிலடி கொடுத்தார்கள். புரட்சிகர-ஜனநாயக இயக்கங்களும், மகளிர் அமைப்புகளும் மட்டுமின்றி, காங்கிரசைத் தவிர பிற ஓட்டுக்கட்சிகளும் குற்றவாளிகளைத் தண்டிக்கக் கோரிப் போராட்டத்தில் குதித்தன. பழங்குடி இன மாணவர் அமைப்புகள், ஆசிரியர் சங்கங்கள், தொழிற்சங்கங்கள் எதிர்க்கட்சிகளோடு இணைந்து, ''குற்றவாளிகளைப் பணி இடை நீக்கம் செய்யக்கோரி'' ஆக.22 அன்று விசாகப்பட்டினம் மாவட்டத்தில் கதவடைப்புப் போராட்டம் நடத்தின; மாவோயிஸ்டு அமைப்பினர் ஆகஸ்டு 27 அன்று விசாகப்பட்டினத்தின் கிழக்கு மண்டலத்திலும், மல்காகிரி மாவட்டத்திலும் கதவடைப்புப் போராட்டம் நடத்தினார்கள். இதனால் அரண்டு போன காங்கிரசு அரசு, ''குற்றம் நிரூபிக்கப் பட்டால், தண்டிப்போம்'' என நடுநிலையாளனைப் போலப் பேசத் தொடங்கியது.

குற்றத்தை விசாரிக்கும் பொறுப்பில் உள்ள போலீசோ, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, விசாரணையின் தொடக்க நிலையிலேயே குற்றத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் சதி வேலைகளில் இறங்கியது. பதேரு போலீசு நிலையத்திற்கு அருகில் உள்ள அங்கப்பள்ளி அரசு மருத்துவமனையில், பாதிக்கப்பட்ட பெண்களை மருத்துவப் பரிசோதனை செய்யும் ஆய்வக வசதி கிடையாது எனத் தெரிந்திருந்தும், அப்பெண்களை அம்மருத்துவமனைக்கே போலீசார் அனுப்பி வைத்துள்ளனர். போலீசாரின் சதித்தனத்தைக் கண்டித்துப் பல்வேறு அமைப்புகளும் போராடிய பிறகுதான், அப்பெண்கள் விசாகப்பட்டினம் அரசு மருத்துவமனைக்கு ஆக.21 அன்று அனுப்பி வைக்கப்பட்டனர்.

சம்பவம் நடந்த ஆகஸ்டு 20 அன்றே மருத்துவப் பரிசோதனையை நடத்தாமல், வேண்டுமென்றே ஒரு நாள் தாமதித்ததன் மூலம் முக்கியமான சாட்சியத்தை போலீசார் திட்டமிட்டே அழித்தனர். போலீசார் எதிர்பார்த்தபடியே, ஆந்திர அரசின் தடய அறிவியல் துறையும் அப்பெண்கள் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை என மருத்துவ அறிக்கை கொடுத்துவிட்டது. இதனைக்காட்டி, அப்பெண்கள் புளுகி வருவதாக போலீசார் பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

ஒரு பெண், தான் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டதாக போலீசு நிலையத்தில் புகார் செய்தால், போலீசார் அப்புகாரை உடனே பதிவு செய்ய வேண்டும் என இந்தியக் குற்றவியல் சட்டத்தின் 376-ஆம் பிரிவு கூறுகிறது; அப்பெண் தரும் புகாரின் அடிப்படையிலேயே நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடத்தலாம் என இந்தியச் சாட்சியச் சட்டப் பிரிவுகள் கூறுகின்றன. பாதிக்கப்பட்ட பெண் தாழ்த்தப்பட்டவராகவோ / பழங்குடியினராகவோ இருந்தால், குற்றம் சாட்டப்பட்டவரை உடனடியாகக் கைது செய்து, வழக்குப் பதிவு செய்ய வேண்டும் என வன்கொடுமை தடுப்புச் சட்டம் கூறுகிறது; போலீசாரோ, இவ்வழக்கில் சட்டப்படி நடக்கவே மறுத்து வருகின்றனர்.

ஆந்திர அரசும், போலீசாரும் கூட்டுச் சேர்ந்து கொண்டு, இச்சம்பவத்தைக் குழி தோண்டி புதைத்துவிட எடுத்துவரும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் எதிராகவும் போராட்டங்கள் கூர்மையடையவே, இப்பிரச்சினையில் தலையிட்ட ஆந்திர உயர்நீதி மன்றம், ''இக்குற்றச்சாட்டு பற்றி ஆந்திர மாநில இரகசியப் போலீசார் விசாரிக்க வேண்டும்'' என உத்தரவிட்டது. உயர்நீதி மன்றத்தின் உத்தரவு வெளியாகி ஏழு வாரங்கள் கழிந்த பிறகும் விசாரணை தொடங்காததால், பாதிக்கப்பட்ட பழங்குடியினப் பெண்கள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர். பங்கி சிறீதேவி, ஜனகாம்மா


படிப்பகம்

www.padippakam.com



**வடக்கு ஆந்திராவின் வனப்பகுதிகளில் கிடைக்கும் கனிம வளங்களைத் தரகு முதலாளிகளுக்கு பட்டா போட்டுக் கொடுக்க வேண்டும் என்றால், வனப்பகுதிகளில் இருந்து பழங்குடி இன மக்களை அப்புறப்படுத்த வேண்டும். அதற்கானஅரங்கேற்றம்தான் வாகப்பள்ளி மக்களின் மீது நடத்தப்பட்டுள்ள பாலியல் பலாத்காரத் தாக்குதல்.**

என்ற இரு பெண்கள் தீக்குளிக்கப் போவதாக அறிவித்தனர். இதன்பின், இப் பிரச்சினையில் மீண்டும் தலையிட்ட உயர்நீதி மன்றம், ''ஏதாவது நிவாரண உதவி வழங்குமாறு'' கூறியதே தவிர, தனது உத்தரவு போலீசாரால் குப்பைக் கூடைக்கு அனுப்பப்பட்டதைக் கண்டு கொள்ளாமல் ஒதுங்கிக் கொண்டது.

வேட்டை நாய் போலீசுப் படையின் கடந்த கால வரலாறை புரட்டிப் பார்த்தாலே, இச்சட்டப்பூர்வ சமூக விரோதக் கும்பலை விசாரணையின்றித் தண்டிக்கக் கோர முடியும். நக்சலைட்டு ஒழிப்பு என்ற போர்வையில், 1987-ஆம் ஆண்டு 45 பழங்குடியினக் கிராமங்களைத் தீயிட்டுக் கொளுத்தியது, இப்படை. 1993-ஆம் ஆண்டு இன்னிகருவு கிராமத்தைச் சேர்ந்த பழங்குடி இனப் பெண்கள், வேட்டை நாய்களால் கும்பலாகப் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டனர். சின்ன புல்லக்கா, ருப்பி, துப்ரி உள்ளிட்டு, நூற்றுக்கணக்கான பழங்குடி இனப் பெண்கள், மாவோயிஸ்டு அமைப்பில் இணைந்து பணியாற்றிய ஒரே காரணத்திற்காகப் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆந்திரப் புரட்சிக் கலைஞர் கத்தாரைக் கொல்ல முயற்சித்தது மட்டுமின்றி, இப்படையினரால் இரகசியமாகக் கொன்றொழிக்கப்பட்ட புரட்சியாளர்கள்-மனித உரிமைப் போராளிகளின் எண்ணிக்கையைப் பட்டியல் போட்டு மாள முடியாது.

இச்சம்பவத்தைப் பொறுத்தவரை, பழங்குடி இன நலத்துறையின் செயலர் நாகிரெட்டி, இந்த அத்துமீறல் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தியிருப்பதோடு, பதேரு போலீசு நிலைய துணை ஆய்வாளர் உள்ளிட்ட 21போலீசாரைக் குற்றவாளிகள் எனக் குறிப்பிட்டுத் தக்க ஆதாரங்களோடு அரசுக்கு அறிக்கை அளித்திருக்கிறார். உயர்நீதி மன்றம் கேட்டுக் கொண்ட பிறகும், இந்த அறிக்கையை வெளியிட மறுத்து வருகிறது, ஆந்திர அரசு.

வேட்டை நாய்கள் படைப் பிரிவு இந்தக் குற்றத்தில் ஈடுபட்டிருப்பதை நிரூபிப்பதற்கு வேறு சில சாட்சியங்களும் உள்ளன. பாதிக்கப்பட்ட பெண்கள் மட்டுமின்றி, பல்வேறு அமைப்புகளும் குற்றவாளிகளை அடையாளம் காட்டுவதற்கு வசதியாக, அடையாள அணிவகுப்பு நடத்த வேண்டும் எனக் கோரி வருகிறார்கள். குட்டு அம்பலப் பட்டுப் போய் விடும் என்ற பயம் காரணமாக, அடையாள அணிவகுப்பு நடத்த மறுத்து வருகிறது, ஆந்திர அரசு.

பாதிக்கப்பட்ட பெண்களுள் ஒருவரான பங்கி சிறீதேவியை, ''உண்மையைச் சொன்னால், உன் கணவரைக் கொன்று விடுவோம்'' என மிரட்டியிருக்கிறது, ஆந்திர போலீசு. பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டுவரும் சட்டமன்ற உறுப்பினர் லேக் ராஜாராவின் மீது, ''போலீசுக்கு எதிராகப் பழங்குடி இனப் பெண்களைத் தூண்டிவிடுவதாக''ப் பொய் வழக்குப் போட்டு, அவரின் செயல்பாடுகளை முடக்க எத்தணிக்கிறது.

பழங்குடி இன மக்கள் நக்சல்பாரி போராளிகளுக்கு உதவக் கூடாது; அவர்களோடு எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ளக் கூடாது என்பதற்காகவே, இப்படிப்பட்ட அரசு பயங்கரவாதத் தாக்குதல்கள் கடந்த இருபது ஆண்டுகளாக அவர்கள் மீது ஏவிவிடப்படுகின்றன. எனினும், வாகப்பள்ளி பழங்குடி இனப் பெண்களின் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு இன்னொரு நோக்கமும் உண்டு எனக் கூறப்படுகிறது.

வடக்கு ஆந்திராவின் வனப் பகுதிகளில் இரும்பு, நிலக்கரி, பாக்சைட் போன்ற கனிமவளங்கள் கொட்டிக் கிடக்கின்றன. இச்செல்வங்களை ஜிண்டால், எஸ்ஸார் போன்ற தரகு முதலாளிகளுக்குப் பட்டா போட்டுக் கொடுக்கத் திட்டமிட்டு வருகிறது, அரசு. இதனைச் செயல்படுத்த வேண்டும் என்றால், அப்பகுதிகளில் வாழும் பழங்குடி இன மக்களை அப்புறப்படுத்த வேண்டும். அதற்கான அரங்கேற்றம் தான் வாகப்பள்ளியில் நடந்திருக்கிறது. 200-க்கும் குறைவான பழங்குடி இன மக்கள் வாழும் வாகப்பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கிராமத்து ஆண்கள் வேலைக்குச் சென்ற நேரமாகப் பார்த்து இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது, அரசின் இந்த நோக்கத்தை வெட்ட வெளிச்சமாக்கி விட்டது.

பழங்குடி இனப் பெண்களைப் பாலியல் பலாத்காரப்படுத்தியதன் மூலம், போலீசு வேட்டை நாய்கள் அம்பலமாகி நிற்கின்றன; ஆனால், நாட்டின் செல்வங்களைக் கூறு போட்டு விற்கும் மன்மோகன்சிங், ப.சிதம்பரம் போன்ற வேட்டை நாய்களோ, 'வளர்ச்சி' என்ற பெயரில் தங்களின் அத்துமீறல்களை மூடி மறைத்துக் கொள்கின்றன.

• செல்வம்



படிப்பகம்

www.padippakam.com

## தனியார் கல்வி முதலாளிகளின் சட்டவிரோத அடக்குமுறை

# போராட்டப் பாதையில் வாகன ஓட்டுநர்கள்

மாணவர்களிடம் பல லட்ச ரூபாய்களைக் கறந்து கல்வி வியாபாரம் நடத்தும் ஜேப்பியார், எஸ்.ஆர்.எம். மருத்துவ மற்றும் பொறியியல் கல்லூரிகளின் முதலாளி பச்சைமுத்து, ஓம்சக்தி டிராவல்ஸ் முதலாளி சரவணன் ஆகியோரின் சட்டவிரோத நடவடிக்கைகளால் இவர்களது நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களும் வாகன ஓட்டுநர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். தொழிலாளர்களை அடிமைகளாக நடத்தி வரும் இம்முதலாளிகள், சட்டப்படி தொழிலாளர்களுக்குத் தரவேண்டிய சலுகைகள் - உரிமைகள் அனைத்தையும் மறுத்துக் கொக்கரிக்கிறார்கள்.

சேமநல நிதியை தொழிலாளர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்து அதை அரசுக்குச் செலுத்தாமல் கொள்ளையடிப்பது, தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவ வசதிகளைச் செய்துதர மறுப்பது, சட்டப்படி போனசு தராமல் ஏய்ப்பது, 8 மணி நேரத்திற்குப் பதிலாக 10-12 மணி நேரம் கட்டாயமாக வேலை வாங்குவது, கூடுதல் உழைப்பு நேரத்திற்கேற்ப கூடுதல் சம்பளம் தர மறுப்பது என இம்முதலாளிகளின் அட்டூழியங்கள் கேள்விமுறையின்றித் தொடர்கின்றன. குறிப்பாக, இந்நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காக "புதிய ஜனநாயக வாகன ஓட்டுநர்கள் மற்றும் டெக்னீஷியன்கள் சங்க"த்தைத் தொடங்கிப் போராடியதும், ஆத்திரமடைந்த இம்முதலாளிகள் பழிவாங்குதலையும் அடக்குமுறைகளையும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.



தொழிற்சங்கம் தொடங்கியதற்காக, வாகன ஓட்டுநர்களுக்குச் சட்டப்படி உணவு தருவதை ஜேப்பியார் கல்லூரி நிர்வாகம் நிறுத்திவிட்டது. ஜேப்பியார் ஸ்டீல் நிறுவனம் 30 தொழிலாளர்களைச் சட்டவிரோதமாக வேலை நீக்கம் செய்துள்ளது. எஸ்.ஆர்.எம். கல்லூரி நிர்வாகமோ சங்க நிர்வாகிகள் அனைவரையும் தனது கல்லூரியே இல்லாத உ.பி. மாநிலத்துக்குத் தூக்கியடித்துள்ளது. தொழிற்சங்கத்தைக் கலைத்து விடுமாறு இந்நிறுவனங்களின் தொழிலாளர்கள் மிரட்டப்படுவதோடு, சித்திரவதை செய்யப்படுகிறார்கள். போலீசோ, இம்முதலாளிகள் விட்டெறியும் எலும்புத் துண்டுகளுக்கு விசுவாசமாக வாலாட்டுகிறது.

இம்முதலாளிகளின் சட்டவிரோத அடக்குமுறைகளுக்கும், பழிவாங்குதலுக்கும் எதிராகக் குமுறிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் கடந்த 25.11.07 அன்று சென்னை - சைதை பனகல் மாளிகை அருகே, பொதுச் செயலர் வெற்றிவேல் செழியன் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர். சட்டவிரோதக் கொள்ளையர்களான இம்முதலாளிகளைக் கைது செய்து தண்டிக்கக் கோரியும், சட்டப்படி தொழிலாளர் உரிமைகளை நிலைநாட்டக்கோரியும் செங்கொடி ஏந்தி 300-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் குடும்பத்தோடு அணிதிரண்டு நடத்திய இந்த எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தில் சங்க முன்னோடிகளும் தோழமை அமைப்பின் பிரதிநிதிகளும் கண்டன உரையாற்றினர். கல்வி வள்ளல்களாகவும் கனதனவான்களாகவும் உலாவரும் இக்கொடிய முதலாளிகளின் முகத்திரையைக் கிழித்து, வர்க்க உணர்வோடு நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டம், உழைக்கும் மக்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

— பு.ஜ. செய்தியாளர்கள்


படிப்பகம்

www.padippakam.com

# சாதிவெறியர்களைக் காக்கும் போலீசு

சிவகங்கை மாவட்டம், மானா மதுரை வட்டம் - பெரியகோட்டை கிராமத்தைச் சேர்ந்தவர், மலைச்சாமி. தாழ்த்தப்பட்டவரான இம்முதியவர் கடந்த அக்டோபர் மாதம் 10-ஆம் தேதியன்று இரவு 7.30 மணியளவில் சிவகங்கை பேருந்து நிலையத்திலி ருந்து திருப்புவனம் செல்லும் பி.எல்.எஸ். எனும் தனியார் பேருந்தில் பெரியகோட்டை செல்வதற்காக ஏறி அமர்ந்துள்ளார். அதே பேருந்தில் எறும்புக்குடியைச் சேர்ந்த தி.மு.க. மாவட்டப் பிரதிநிதியான பாண்டி என்பவரும் அவரது தம்பி ஜெயராமனும் கூட்ட நெரிசல் காரணமாக நின்று கொண்டு பயணித்தனர். இவர்கள் சேர்வை சாதியைச் சேர்ந்தவர் கள். கந்துவட்டி - கட்டப் பஞ் சாயத்து நடத்திவரும் சாதி வெறியர்கள்.

தாழ்த்தப்பட்டவரான மலைச்சாமி உட்கார்ந்து கொண்டு பயணம் செய்ய, தாங்கள் நின்று கொண்டு பய ணம் செய்வதா என்று சாதித் திமிர் தலைக்கேறிய இவ்விரு வரும், ''ஏண்டா... நாயே! நாங்க நிற்கிறோம்; நீ உட் கார்ந்துகிட்டு வர்றே!'' என்று ஆபாசமாகத் திட்டியதோடு, அம்முதியவரை பேருந்தி லேயே செருப்பால் அடித் துள்ளனர். அடி தாங்க முடியா மல் அவர்கள் பிடியிலிருந்து தப்பி அடுத்த நிறுத்தத்தில் அம்முதிய வர் பேருந்திலிருந்து இறங்கி விட்டார். இறங்கியவரைப் பிடித்து அடித்து, ''ஏறுடா பஸ்சுக்குள்ள'' என்று இழுத்து உள்ளே போட்டு அடித்துள்ளனர். இக் கொடுஞ்செயலைக் கண்டு ஓட்டுநர் பேருந்தை நிறுத்திவிட, ''வண்டியை எடுடா; இல்லைன்னா உன்னையும் கொன்னுடுவேன்'' என்று இச்சாதி வெறியர்கள் மிரட்டியதால், அவரும் பயந்து பேருந்தை ஓட்டிச் சென் றுள்ளார். இச்சாதிவெறியர்களின் ஊரான எறும்புக்குடி செல்லும் வரை, பேருந்தில் வைத்து அம்முதியவரை அவ்விருவரும் காட்டுத்தனமாகச் செருப்பால் அடித்துள்ளனர்.

காயமடைந்த மலைச்சாமி, அன்றி ரவே தனது தம்பியை உடனழைத்துக் கொண்டு மானாமதுரை சிப்காட் போலீசு நிலையத்தில் புகார் மனு கொடுத்தார். மானாமதுரை அரசு மருத் துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், சாதிவெறியர்களின் தாக்கு தலால் கண்கள் கடுமையாகப் பாதிக் கப்பட்டிருந்ததால் மருத்துவர்களால் மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

புகார் மனு கொடுக்கப்பட் டுள்ளதை அறிந்த பாண்டி, கைது நட வடிக்கையிலிருந்து தப்பிக்க தனது ஓட்டுக்கட்சி செல்வாக்கைப் பயன் படுத்தி, அரசு மருத்துவரைக் கொண்டு தனக்கு மூல வியாதி உள்ளதாகக் காட்டி, சிவகங்கை அரசு மருத்துவம னையில் படுத்துக் கொண்டார். அவரது தம்பி ஜெயராமனோ போலீசு அனுமதி யோடு ஊரிலேயே ஒளிந்து கொண்டு மலைச்சாமி குடும்பத்தை மிரட்டி வந் தார். போலீசோ அவர் தலைமறைவாகி விட்டதாகப் புளுகியது. இச்சாதிவெறி யர்கள் ஊருக்குள் தமது சாதியப் பலத் தைக் காட்டி மலைச்சாமியை அச் சுறுத்தி வந்தனர். பீதியடைந்த மலைச் சாமி, தனது உயிருக்கு ஏற்பட்டுள்ள பேராபத்திலிருந்து மீள சிவகங்கை மனித உரிமைப் பாதுகாப்பு மையத் தில் தஞ்சமடைந்து புகார் கொடுத்தார்.

மனித உரிமைப் பாதுகாப்பு மையத்தினர் சாதிவெறியர்களின் வன் கொடுமைக்கு எதிராகவும், புகார் கொடுத்தும் குற்றவாளிகளைக் கைது செய்யாத போலீசையும், உடந்தையாக செயல்படும் அரசு மருத்துவரையும் கண்டித்துப் பிரசுரம் - சுவரொட்டிகள் மூலம் பிரச்சாரம் செய்ததோடு, 18.10.07 அன்று கண்டன ஆர்ப்பாட் டத்துக்கும் ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால், சாதிவெறியர்களின் கூட்டா ளியாகச் செயல்படும் போலீசோ, மூவேந்தர் முன்னேற்றக் கழகம் எனும் அமைப்பு சாதிவெறியர்களுக்கு ஆதர வாகச் சுவரொட்டி வெளியிட்டு எதிர்ப் பிரச்சாரம் செய்வதைக் காட்டி ஆர்ப் பாட்டத்திற்கு அனுமதி மறுத்தது.




5.11.07 அன்று மீண்டும் ஆர்ப் பாட்டம் நடத்த போலீசிடம் மீண்டும் விண்ணப்பித்து, மதுரை உயர்நீதி மன் றத்திலும் மனித உரிமை பாதுகாப்பு மையம் மனு செய்தது. இந்த ஆர்ப்பாட் டத்திற்காக வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் ''ஆதிக்க சாதிவெறி நாய் கள்'' என்ற வாசகம் சாதிக் கலவரத் தைத் தூண்டுவதாக உள்ளதெனக் கூறிப் புதிய விண்ணப்பம் தருமாறு


படிப்பகம்

www.padippakam.com

உயர்நீதி மன்றத்தில் போலீசு எதிர் நடவடிக்கையில் இறங்கியது. மீண்டும் புதிய விண்ணப்பம் கொடுத்தபோதிலும், இந்த ஆர்ப்பாட்டம் குறிப்பிட்ட சாதியினரை இழிவுபடுத்துவதாக உள்ளதெனக் கூறி மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் ஆர்ப்பாட்டத்துக்குத் தடை விதித்தார்.

4.11.07 அன்று இத்தடையுத்தரவு வெளியானதும், சாதிவெறியர்களைப் பாதுகாக்கும் போலீசின் மனித உரிமை மீறல் - அடாவடித்தனத்தை எதிர்த்து, சிவகங்கை யூனியன் ஆபீசிலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்ட ம.உ.பா. மையத்தின் முன்னணியாளர்களும் ஜனநாயக சக்திகளும் முழக்கமிட்டபடியே பேருந்து நிலையம் அருகே ஆர்ப்பாட்டம் நடத்த முற்பட்டனர். தடையை மீறி ஊர்வலம் நடத்தியதாக மதுரை உயர்நீதி மன்ற வழக்குரைஞர்கள் உள்ளிட்ட 130 பேரைக் கைது செய்த போலீசு, பின்னர் விடுவித்தது.

மனித உரிமைப் போராளிகளைக் கைது செய்த இந்த விவகாரம், சாதி வெறியர்களுக்கு ஆதரவாகச் செயல்படும் போலீசின் யோக்கியதையை இப்பகுதியெங்கும் சந்தி சிரிக்க வைத்தது. சாதிவெறியர்களுக்கு எதிராகத் தொடர்ந்து பிரச்சார இயக்கத்தை மேற்கொண்ட ம.உ.பா. மையம், நீதிமன்ற படிக்கட்டுகளில் பலமுறை ஏறி இறங்கி, 28.11.07 அன்று சிவகங்கை அரண்மனை வாயில் முன்பு இதர அமைப்புகள், ஜனநாயக சக்திகளை அணிதிரட்டி எழுச்சிமிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தியது. விண்ணதிரும் முழக்கங்களுடன் 300-க்கும் மேற்பட்ட உழைக்கும் மக்களும் வழக்குரைஞர்களும் பங்கேற்ற இந்த ஆர்ப்பாட்டம் சாதிவெறி கும்பலையும் அதற்கு ஆதரவாக நிற்கும் அதிகார வர்க்க - போலீசு கும்பலையும் திரை கிழித்துக் காட்டுவதாக அமைந்தது. சாதி வெறிக்கு எதிரான போராட்டம், சாதி-மத வெறியர்களைப் பாதுகாக்கும் சட்டம்-நீதி-போலீசு-அதிகாரவர்க்கம் அடங்கிய இன்றைய அரசியலமைப்பு முறைக்கு எதிரான போராட்டமாக அமைய வேண்டிய அவசியத்தை இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் உணர்த்திய மனித உரிமை பாதுகாப்பு மையத்தினர், மலைச்சாமி மீது வன்கொடுமையை ஏவிய சாதிவெறியர்களைக் கைது செய்து தண்டிக்கும் வரை போராட்டம் ஓயாது என்று உறுதியேற்றுள்ளனர்.

– பு.ஜ. செய்தியாளர்.



## தி.க. கம்பெனியின்

# 'நாட்டாமை'க்குப் பவள விழா பெரியார் கொள்கைக்கு மூடு விழா

இன உணர்வுத் திருவிழா ஒன்றை சென்னையில் நடத்தப் போவதாக கி.வீரமணியின் திராவிடர் கழகம் அறிவித்தவுடனே, பரவாயில்லையே; தொய்வாகிக் கிடந்த பெரியாரின் தொண்டர்கள் பார்ப்பன மதவெறிக்கு எதிராகக் கிளம்பி எழப்போகிறார்கள் போலும்! அதைப் பார்க்காமல் விட்டுவிட்டால் நாளைய வரலாறு நம்மைப் பழித்துவிடுமே எனும் அச்சத்தில் 'இன உணர்வைத் தட்டி எழுப்பும்' டிசம்பர் 2-ஆம் தேதியன்று பெரியார் திடலுக்குள் எட்டிப் பார்த்தோம்.

சென்னை மாநகரம் முழுக்க பளபளக்கும் டிஜிட்டல் பேனர்களில் 'ஓய்வறியாதவராகவும்', 'அசுரர் குலத் தலைவராகவும்','தமிழர் தலைவராகவும்' எழுந்தருளியிருந்த வீரமணியாரின் 75 ஆவது பிறந்த நாளைத்தான் கருஞ்சட்டைப் படையினர் 'இன உணர்வுத் திருவிழா'வாக இரண்டு நாட்களாகக் கொண்டாடும் விசயம் நமக்குப் புரிபட்டது. இருக்கட்டும். பிறந்த நாளை முன்வைத்து பெரியாரின் சுயமரியாதைக்கு புதுப்பாணியில் தெம்பூட்டப் போகிறார்கள் போலும் என்று எண்ணிக்கொண்டோம்.

பிறந்தநாள் விழாவுக்கு அச்சிட்ட அழைப்பிதழைப் பார்த்தவுடன் நமக்கு ஒன்றும் புரியவில்லை. சினிமா பட 'பூஜை' ஏதும் நடத்தப் போகிறார்களோ எனும் ஐயம் ஏற்பட்டது. அழைப்பிதழ் செலவு மட்டுமே 100 ரூபாய்க்கு மேல் இருக்கும். வழக்கமாக கோடம்பாக்கத்தில்தான் இப்படி வக்கிரக் கூத்துகள் நடக்கும். 'தமிழர் தலைவராகி' பெரியாரை பன்னாட்டு நிறுவனமாக்கி ஜோராக வியாபாரம் செய்பவர், இதைக் கூட செய்யாவிட்டால் எப்படி?

உள்ளே கல்வியாளர் அரங்கம் ஒன்று நடந்து கொண்டிருந்தது. பவள விழா நாயகரை ஒரு பல்கலைக்கழகத் துணைவேந்தர் ''சாக்ரடீசுக்கு கிடைத்த மாணவர் பிளாட்டோ போல பெரியாருக்கு ஒரு தமிழர் தலைவர்'' என்று முழங்கிக் கொண்டிருந்தார். இரண்டு மணிநேரம் வரை இந்தக் கூட்டம் நடக்கும் என்பதனாலும் அக்கூட்டத்தில் வீரமணி அடுத்தடுத்து மார்க்ஸ், ஏங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ, சேகுவேரா என பல அவதாரங்களை எடுக்கும் பேராபத்து இருந்ததாலும் அங்கிருந்து தப்பித்து எங்காவது சுயமரியாதையை ஒளித்து வைத்திருப்பார்களோ எனத் தேடிக்கொண்டிருக்கும்போது, ஆம்பூர் ஆட்டுக்கறிப் பிரியாணியை 5000 பேருக்கு வழங்கிக் கொண்டிருந்தார்கள். தலைவருடன்


படிப்பகம்

சேர்ந்து போட்டோ எடுத்துக் கொள்பவர்கள் 75 ரூபாய் கொடுத்து படத்தை வாங்கிக் கொண்டு வீரமணியின் பிரியாணிப் பொட்டலத்தில் பகுத்தறிவைக் கிளறிக் கொண்டிருந்தார்கள். சுயமரியாதைப் பிரியாணி தொண்டைக்குள் விக்காமல் இருக்க அனைவருக்கும் 15 ரூபாய் தண்ணீர் பாட்டிலை இலவசமாக வழங்கினார்கள்.

கல்வியாளர்கள் பாராட்டு மழையை ஒரு பக்கம் பொழிந்தால், அரசியல் கட்சிப் பிரமுகர்களும் தி.க. பொறுப்பாளர்களும் ''பெரியார் 95 வயது வரை வாழ்ந்தார். தலைவர் இன்னும் கூடுதலாக வாழவேண்டும்'' என்று வாழ்த்தினார்கள். பெரியாரின் தொண்டர்களை எண்ணிப் பார்த்து பரிதாபப்பட்டுக் கொண்டோம். தி.க.வின் ஒவ்வொரு விழாவிற்கும் 10 சதவீதத்தில் இருந்து 15 சதவீதம் வரை ஆயிரம், இரண்டாயிரம் எனக் கட்டாய நன்கொடையாக தங்கள் சம்பளத்தில் பறிகொடுக்கும் வல்லம், திருச்சி பெரியார் கல்வி நிறுவன ஊழியர்களோ ''இன்னும் 20 ஆண்டுகளா'' எனப் பதறியதைக் காண முடிந்தது.



மலர்மாலைக்குப் பதிலாகப் பணமாலை: கருப்பு வெள்ளையாகும் அற்புதமா?

பெரியார் உயிருடன் இருந்த காலத்தில் அவருடைய பிறந்தநாளை முன்னிட்டு சுயமரியாதைப் பிரச்சாரக் கூட்டங்களும் நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. அதேபோன்று பிரச்சாரம் ஏதாவது ஒன்றை இவர்கள் செய்யக்கூடும் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தோம். ஒரு ஆடியோ சி.டி. வெளியிட்டார்கள். தொழில்முறைக் கலைஞர்களை வைத்து தயாரிக்கப்பட்ட அந்த சிடியோ 'தமிழர் தலைவரின்' புகழை மட்டும் பாடிக் கொண்டிருந்தது. தி.க. தொண்டர் ஒருவர் வீரமணியின் முழு வாழ்க்கை வரலாற்றைப் பல தொகுதிகளாகத் தயாரித்துக் கொண்டிருக்கிறாராம். அதில் அவர் பிறந்ததில் இருந்து முதல் 20 வருடங்களின் 'வரலாற்றினை'க் கூறும் முதல் தொகுதியினை விலைக்கு வைத்திருந்தார். விலை ரூ.1500 என்றார்கள்.

தலைவரின் பிறந்தநாளுக்காக பத்து லட்சம் ரூபாயை அமெரிக்க நண்பர்கள் கொடுத்தார்கள். வீரமணியின் இடுப்பு உயரத்திற்கு ஒரு உண்டியல் வைக்கப்பட்டு மொய் வசூல் ஜோராகப் போய்க் கொண்டிருந்தது. ''விடுதலை'' பத்திரிகைக்கு சந்தாவாக 50 இலட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டிருந்தது. திருவாரூர் மாவட்டத்தில் இருந்து 75 தங்கக் காசுகளை மாலையாக்கி அணிவித்தார்கள். ரூபாய் நோட்டு மாலையுடன் 'வசூல்ராஜா வீரமணி எம்.ஏ., பி.எல்.,' தி.க. பக்தர்களுக்கு காட்சி அளித்து மகிழ்ந்தார்.

வீரமணியின் கொத்தடிமைகளாலும் பல காக்கைகளாலும் தயாரிக்கப்பட்ட வீரமணியாரின் பிறந்தநாள் மலரை ரூ.100-க்கு விற்பனைக்கு வைத்திருந்தார்கள். ஒரு கோடிக்கும் அதிகமாய் செலவு செய்து கொண்டாடப்பட்டுள்ள 'இன உணர்வுத் திருவிழா'வை ''விடுதலை'' நாளிதழ் ஒரு வாரமாகக் கொண்டாடியது. இக்கொண்டாட்டத்திற்கு மட்டும் 3 தலையங்கங்களை எழுதித் தள்ளியது. ஒரு பத்திரிக்கையின் ஆசிரியர் தனது பிறந்தநாளைக் கொண்டாடுவதற்கு மட்டும் தலையங்கம் எழுதியது பத்திரிக்கை உலகில் நிச்சயமாக ''சாதனைகல்'' தான்.

கொண்டாட்டத்தின் இறுதிக்காட்சியாக கருணாநிதி தலைமையில் வள்ளுவர் கோட்டத்தில் ஒரு விழா. அங்கே வீரமணி நடத்திவரும் கல்வி நிறுவனத்தில் பயிலும் பெண்கள் வீரமணியின் அருமை பெருமைகளைப் பாடி ஆடி விளக்கினர். சினிமாக் கலை இயக்குநர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த மேடையில் 'வேந்தர்' வீரமணி டாக்டர் பட்ட கவுனுடன் கட் அவுட்டாகி இருந்தார். வள்ளுவர் கோட்ட மேடையில் பேசுபவர்கள் கருணாநிதியையும் வீரமணியையும் பாகுபாடின்றிப் புகழ வேண்டிய சிரமத்தால் தத்தளித்துக் கொண்டிருக்கையில் ''தாங்கள் சுட்டு விரலை நீட்டினால் எதிரிகளை நிர்மூலமாக்கக் காத்துக் கிடக்கிறது கருஞ்சட்டைப் பட்டாளம்'' என்று துரை.சந்திரசேகரன் எனும் கருஞ்சட்டை சீரியசாகப் பேசியது. வீரமணி என்றைக்கும் சுட்டு விரலை நீட்டப் போவதில்லை என்பதை அறியாமலா பேசி இருப்பார்? பாம்பறியும் பாம்பின் கால் அல்லவா?

அனைவரும் ஒரே மாதிரி ''பெரியார், ஓரிரண்டு நிறுவனங்களைத்தான் தொடங்கினார். அவற்றின் எண்ணிக்கையை 50 வரை உயர்த்திய உயர்ந்த உள்ளம்'' என்று வீரமணியின் வியாபார விரிவாக்கத்தை மட்டுமே புகழ்ந்து கொண்டிருந்தபோது, கருணாநிதி ஒரு குட்டிக்கதை சொல்லி வைத்தார். பெரியாரிடம் வீரமணி பேச்சாளராக வளர்ந்து கொண்டிருந்த காலத்தில் ஒருநாள் வீரமணியை, தான் வளர்க்கும் நாய்க்குட்டிக்குப் பால் வாங்கிவரச் சொன்னாராம் பெரியார். கடைக்குப் போன வீரமணி வெறும் செம்புடன் திரும்பி விட்டாராம். ''பிராமணாள் கபே'' மட்டும் திறந்திருந்ததால், அக்கடையில் பாலை வாங்காமல் வந்து விட்டதாக வீரமணி சொன்னாராம். நமக்கெல்லாம் சுயமரியாதை ஊட்ட பெரியார் ''பிராமணாள் கபே''யைப் புறக்கணிக்கச் சொல்லி இருந்த போதிலும், அக்கொள்கையை நாய்க்குட்டி விசயத்திலும் கடைப்பிடித்த கொள்கைக் குன்று நமது இளவல் என்று கருணாநிதி சொன்னதும் பலத்த கைதட்டல். ஆனால் இக்கதை எதற்காக சொல்லப்பட்டது என்பதை வீரமணி நிச்சயம் உணர்ந்திருப்பார். அப்பேற்பட்ட 'கொள்கைக் குன்று' போயஸ் தோட்டத்துப் பாப்பாத்தியின் நாய்க்குட்டியாகக் குரைக்கப் போனதை உள்ளுறையாக உணர்த்துவதுதான் அக்கதை என்பது தெரியாதவரா வீரமணி?

பெரியார் திடலில் இருந்து வள்ளுவர் கோட்டம் வரை தேடித்தேடிப் பார்த்தும் இவ்விழாவில் பெரியார்

www.padippakam.com

# தங்கத்தால் எடை போடப்பெற்ற தலைவர்!

கொள்கைகள் பேசப்படவே இல்லை. முழுக்க முழுக்க துதிப்பாடல்கள். தன்னைப் பெரியாரின் நம்பிக்கைக்குரிய தொண்டன் என்று சொல்லிக் கொள்ளும் வீரமணி, தனது பிறந்தநாளைக் கொண்டாடி தன்னை அனைவரையும் புகழ வைத்துக் கொண்ட அழகைப் பார்க்கையில் நம்மையும் அறியாமல் திருவாரூர் நீதிக்கட்சி மாநாடு நினைவுக்கு வருகிறது.



தங்கத்தால் எடை போடப் பெற்ற தலைவரைத் தமிழக மக்கள் எப்படி எடை போடுகிறார்கள் என்பதல்லவா முக்கியம்!

1940-இல் நடந்த அம்மாநாட்டில் பெரியாரைத் தலைமை தாங்கச் சொல்லி டாக்டர் தர்மாம்பாள், சவுந்திர பாண்டியன், சோமசுந்தரபாரதியார் உட்பட 15 பேர் உரையாற்றி முடித்த பிறகு பெரியார் பேசினார். ''என்னை நீங்கள் மக்களுக்காக அதிகம் கஷ்டப் பட்டதாக எடுத்துக் கூறி 15 பேரும் பேசினீர்கள். எனக்கு கஷ்டம் என்று படக்கூடிய காரியம் எதையும் நான் செய்தது கிடையாது. ஆனால், ஏதாவது கஷ்டப்பட்டேன் என்று சொல்ல வேண்டுமானால், என்னை பிரேரேபித்த (முன்மொழிந்த) 15 பேருடைய பேச்சையும் கேட்டுக் கொண்டிருந்தேனே; அதுதான் உண்மையில் பெரிய கஷ்டமாக இருந்தது'' என்றார். ஆனால் இரண்டுநாள் பஜனையை பெரியாரின் 'உண்மைச் சீடர்' வீரமணியோ மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு அமர்ந்திருந்தார்.

விழா முடிவில் கருணாநிதியிடம் அரசு சார்பாக சென்னையில் 95 அடி உயர பெரியார் சிலை அமைக்க வீரமணி கேட்டுக் கொண்டார். முதல்வரும் ஏற்றுக் கொண்டார். பெரியார் பொறியியற் கல்லூரி, பெரியார் மணியம்மை பல்கலைக் கழகம் போன்று 46 நிறுவனங்களைப் பெரியார் பேரில் வளர்த்த வீரமணி, பெரியார் சிலையை அரசின் பொறுப்பில் விட்டுவிட்டார். வருவாய் ஏதும் தந்து விடாத பெரியார் சிலையை விட, நன்கொடை தரும் நிறுவனங்களில் அல்லவா முதலீடு செய்ய வேண்டும் என்பதுதான் இந்த 'மான மிகு'வின் தந்திரம் போலும்.

எதற்காக வீரமணியின் பவள விழாவை இவ்வளவு ஆடம்பரமாகக் கொண்டாடினார்கள்? அதற்கு ''நடைபெற்றது தனிநபருக்கான விழா அல்ல; ஓர் இயக்கத்தின் உயிரோட்டத்துக்கான உரைகல்'' என்று வீரமணியின் விடுதலை ஏடு விளக்கம் தருகிறது.

ஓர் இயக்கம் செத்துப் போகாமல் மூச்சு இருக்கிறதா எனப் பார்க்க ஒரு கோடி ரூபாயைக் கரியாக்கி மகிழ்ந்த இயக்கம், அநேகமாக உலகிலேயே வேறு எங்கும் இருக்க முடியாது. உரசிப் பார்க்கத்தான் எதிரி சென்ற ஆண்டு சிறீரங்கம் பெரியார் சிலையை உடைத்து பைசா செலவில்லாமலே ஒரு நல்ல வாய்ப்பை வழங்கி இருந்தானே! அப்போது தி.க. என்ன செய்தது? கருணாநிதியின் ஆட்சியைக் காப்பாற்ற வேண்டும் என்று சாக்குப் போக்கு சொல்லி பெரியார் சிலை உடைப்பை அறிக்கை அக்கப்போரிலேயே முடக்கி வைத்தது. ம.க.இ.க. தோழர்கள் சிலை உடைப்பை மையப்படுத்தி தமிழ்நாடெங்கும் பார்ப்பன பயங்கரவாதத்தைத் திரைகிழித்த போதும் கூட தி.க. மவுனமாகிக் ''கோமா''வில் கிடந்ததே! அதற்கு உயிரூட்டி எழுப்பிட ஒரு கோடி செலவு. எழுந்து உட்கார்ந்த இயக்கமோ தனது முதலாளிக்கு முதுகு சொறிந்து விட்டு மறுபடியும் நீளாதுயிலுக்குச் சென்றிருக்கிறது.

ஊதாரித்தனமான பிறந்தநாள் கொண்டாட்டத்தின் மத்தியில் வீரமணி பகிரங்கமாக ஒன்றை சொல்லி இருக்கிறார். ''நாம் களத்திலே நின்று கொண்டிருக்கிறோம். அப்படிப் போராடிக்கொண்டிருக்கின்றபோது அதனுடைய கருவிகளை மாற்ற வேண்டும். காலத்துக்கேற்ப கருவிகளை மாற்றிக் கொள்ளும்போது கருத்துக்களையும் மாற்றிக்கொள்ள வேண்டும்.'' இந்த ஒப்புதல் வாக்குமூலத்திற்காக வீரமணியை நாம் பாராட்டியே தீரவேண்டும்.

ஆம். வீரமணியின் கருத்து இன்றைக்கு மாறி இருக்கிறது. அவரிடம் முன்னர் இருந்த பார்ப்பன எதிர்ப்பும், நாத்திகமும் மறைந்து விட்டன. நிறுவனங்களை விரிவுபடுத்தி, பெரியாரின் சொத்துக்களைப் பன்மடங்காக்கி ஆதாயம் அடைந்து கொண்டிருக்கும் 'தமிழர் தலைவர்' இன்று பார்ப்பனியத்தையும், கருத்துமுதல்வாதத்தையும் (ஆன்மீகம்) ஆதரித்து 'வாழ்வியல் சிந்தனை'களாக எழுதிப் பிரச்சாரம் செய்து வருவதைத்தான் அவரே ''கருத்துக்களையும் மாற்றிக்கொள்ள வேண்டும்'' என்று முடிவாகச் சொல்லி பெரியாரின் சிந்தனைகளைச் சவப்பெட்டியில் ஏற்றி இறுதி ஆணியை அறைந்திருக்கிறார்.

இன்னமும் பல பெரியார் தொண்டர்கள், வீரமணியின் அனைத்துப் பித்தலாட்டங்களையும் சகித்துக்கொண்டு, பெரியார் ஆரம்பித்த இயக்கம் என்கிற ஒரே காரணத்துக்காக தி.க.வில் இருக்கிறார்கள். பாட்டன் வெட்டிய கேணியே என்றாலும், அதில் ஊறுவது உப்புத் தண்ணீர் என்றால், அதனைக் குடித்துக் கொண்டா இருப்பது? பெரியாரியலுக்கு மூடுவிழா நடத்திவிட்ட வீரமணியின் தலைமையைத் துறந்து, பெரியாரின் கொள்கைகளை வீச்சோடு எடுத்துச் சென்று பார்ப்பனிய பயங்கரவாதத்தை எதிர்த்து களத்தில் நிற்கும் புரட்சிகர அமைப்புகளில் பகுத்தறிவாளர்கள் இணைவதைத் தவிர இனி வேறென்ன வழி இருக்கிறது?

● இளம்பிறை

www.padippakam.com

# இந்திய ஆறுகளுக்கு வந்தது பேராபத்து

**மகாராஷ்டிரா அரசு நீரா என்ற நதியைத் தனியாரிடம் விற்றுவிட முயலுவதைச் சாதாரண வர்த்தக நடவடிக்கையாகப் பார்க்க முடியாது.**

''இந்த ஆறு விற்பனைக்குத் தயார்! 1000 கோடி ரூபாய் வைத்துள்ள யாரும் இதனை விலைக்கு வாங்கிக் கொள்ளலாம்!'' - மகாராஷ்டிர மாநிலத்தில் புனே மற்றும் சத்தாரா மாவட்டங்களின் வழியாக ஓடும் ''நீரா'' எனும் ஆறைத்தான் இப்படிக் கூவிக்கூவி விற்கிறது அம்மாநில அரசு. ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, கடைசியில் மனிதனையே கடித்த கதையாக முதலில் ''நீரா'' ஆற்றின் தண்ணீரை விற்க அம்மாநில அரசு கிளம்பியது; பிறகு, ஆற்றுப் படுகைகளோடு நீரை விற்கப் புறப்பட்டது; இப்போது ஆறு மற்றும் அதனால் பயன்பெறும் பாசனப் பகுதிகள் அனைத்தையும் சேர்த்து விற்கத் தயாராகி விட்டது.

மகாராஷ்டிர மாநில நீர்வளத்துறை அமைச்சரான ராம்ராஜி நாயக் நிம்பல்கர், கிருஷ்ணா நதிப் பள்ளத்தாக்கு வளர்ச்சிக் கழகத் திட்டத்தைச் செயல்படுத்த போதிய நிதி இல்லாததால், இந்த ஆறை தனியாருக்கு விற்க முடிவு செய்துள்ளதாகக் கூறுகிறார். இக்கழகம் தான் ''நீரா'' ஆறை தனது பொறுப்பில் வைத்துள்ளது. இந்த ஆற்றின் குறுக்கே தியோகர் எனுமிடத்தில் அணை கட்டப்பட்டு முடிவடையும் தறுவாயில் உள்ளது. இன்னும் 5% கட்டுமான வேலைகளே எஞ்சியுள்ளன. அணை முழுமையாக கட்டப்பட்ட பிறகு, 164 கி.மீ. நீளத்துக்கு கிளைக் கால்வாய் வெட்டி சோலாப்பூர், சங்லி மாவட்டங்களுக்கு ஆற்று நீரைக் கொண்டு செல்ல வேண்டும்.

இத்திட்டம் கடந்த 7 ஆண்டுகளாகியும் நிறைவேறாததற்கு நிதிப் பற்றாக்குறையே காரணம் என்று கூறும் அமைச்சர், வறண்ட இப்பகுதிவாழ் மக்களுக்குத் தண்ணீர் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ''நீரா'' ஆறை தனியாருக்கு விற்க முடிவு செய்துள்ளதாகக் கூறுகிறார். இது மட்டுமின்றி, இந்த ஆறை ரூ. 1000 கோடி கொடுத்து விலைக்கு வாங்கினால் இந்த ஆற்றின் மீது கட்டப்பட்டு முடிவடையும் நிலையிலுள்ள தியோகர் அணையும் ஆயக்கட்டு பகுதிகளும் இலவச இணைப்பாகத் தரப்படும் என்று அறிவித்துள்ளார்.

ஏற்கெனவே கடந்த 2002-ஆம் ஆண்டில் சட்டிஸ்கர் மாநிலத்தில், சியோனாத் ஆறு 23 கி.மீ. தொலைவுக்கு தனியாருக்கு விற்கப்பட்டது. இப்போது மகாராஷ்டிராவின் ''நீரா'' ஆறு ஒட்டுமொத்தமாக விலை பேசப்படுகிறது. ''ஆற்றை தனியாருக்கு விற்று விட்டால், அவர்கள் அணையின் எஞ்சிய பகுதியைக் கட்டி முடித்து, கால்வாய்களையும் கட்டி




வறண்ட பகுதிகளிலுள்ள விவசாயிகளுக்கு குறைந்த விலையில் தண்ணீரை, விநியோகிப்பார்கள். விவசாயிகளின் நீண்டகாலக் கனவு நிறைவேறி, மகாராஷ்டிரா மாநிலம் தொழிலிலும் விவசாயத்திலும் மேலும் வளர்ச்சி பெறும்'' என்று நியாயவாதம் பேசுகிறது மகாராஷ்டிரா அரசு.

இந்த ஆறை விலை கொடுத்து வாங்கும் ஒரு தனியார் நிறுவனம், இந்த ஆறு பாய்ந்தோடும் 208 கி.மீ நீள பகுதியையும், இந்த ஆற்றின் கிளைக் கால்வாய்கள் மூலம் பயனடையப் போகும் புனே, சத்தாரா மாவட்டங்களின் 43,000 ஹெக்டேர் விளைநிலங்களையும், அடுத்துள்ள சோனாபூர் - சங்லி மாவட்ட குடிநீர் விநியோகத்தையும், இவ்வட்டாரத்திலுள்ள ஆலைகளுக்கான தண்ணீர் விநியோகத்தையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிடும். மேலும், ஆற்றை வாங்கும் நிறுவனம் தான்போட்ட முதலைத் திரும்ப எடுக்கவும் இலாபமடையவும் எந்த வகையிலான தொழிலையும் தொடங்கலாம் என்று அரசு தாராள அனுமதியளித்துள்ளது. இதுதவிர இந்த ஆறு மற்றும் கிளைக் கால்வாய்கள் மூலம் பாசன வசதி பெறும் பல்லாயிரக்கணக்கான ஹெக்டேர் விளைநிலங்களில் ஒப்பந்த விவசாயத்தைச் செயல்படுத்துவதன் மூலம் இலாபத்தை உறுதி செய்து கொள்ளவும் பச்சைக் கொடி காட்டப்பட்டுள்ளது.

ஏற்கெனவே வறண்ட பிரதேசமான இம்மாவட்டங்களில் விவசாயத்திற்காகவும் குடிநீருக்காகவுமே ''நீரா'' ஆற்றில் தியோகர் அணைகட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால், இப்போது அணை கட்ட போதிய நிதியில்லை என்பதையே சாக்காக வைத்து ஆற்றையே விற்கிறது மகாராஷ்டிர அரசு. விலை பேசப்படுவது ஆறு அல்ல; அந்த ஆற்றை நம்பியுள்ள பல லட்சக்கணக்கான உழைக்கும் மக்களின் வாழ்வுரிமை!

www.padippakam.com

நீரா ஆறு தனியார் நிறுவனத்தின் சொத்தாகி விட்டால், இப்பகுதிவாழ் விவசாயிகள் பாசன நீருக்காக அந்நிறு வனத்துக்கு மிக அதிக கட்டணத்தைக் கொட்டியழ வேண்டும். அப்படி யொரு விவசாயியால் கட்டணத்தைச் செலுத்த முடியவில்லை என்றால், தனது நிலத்தை அந்நிறுவனத்திடம் ஒப் பந்த விவசாயத்துக்குக் கையளித்து விட்டு, தனது சொந்த நிலத்திலேயே அந்நிறுவனத்தின் கூலி விவசாயியாக வேலை செய்ய நேரிடும். நிலத்தை இழந்து வாழ்வை இழந்து குடும்பத் தோடு நாடோடியாக அலைய நேரி டும்.

விவசாயிகள் மட்டுமல்ல, இதர பிரிவு உழைக்கும் மக்களும் குடிநீருக் காக அதிக கட்டணம் செலுத்த நேரி டும். கோக்-பெப்சி நிறுவனங்களைப் போல, ஆற்றுநீரைக் குடுவையில் அடைத்து ஒரு லிட்டர் 12 ரூபாய் என்று இப்பகுதிவாழ் மக்களிடம் அந்நிறுவ னம் விற்றாலும், அதை யாரும் தட்டிக் கேட்க முடியாது. ஏன், ஆற்று நீர் அனைத்தையும் ஆலைப் பயன்பாட் டுக்குத் திருப்பிவிட்டு, விவசாயத் துக்கோ, குடிநீருக்கோ ஆற்று நீரை அந் நிறுவனம் தர மறுத்தாலும் இக்கொடுஞ் செயலை எதிர்த்து வாய் திறக்கவும் முடியாது. இந்த ஆற்றில் இப்பகுதி வாழ் மக்கள் கை-கால்களைக் கழு வவோ, குளிக்கவோ, துணி துவைக் கவோ, கால்நடைகளுக்குத் தண்ணீர் காட்டவோ கூட முடியாது.

கடந்த நவம்பர் 17-ஆம் தேதி யன்று மகாராஷ்டிரா அரசு நீரா ஆற்றை விற்கப் போவதாக அறிவித்தவுடன், நாக்கில் எச்சில் ஊற 5 பெரும் நிறுவ னங்கள் ஆற்றை விலைக்கு வாங்க ஆர் வம் காட்டியுள்ளன. யார் இந்த முதலா ளிகள்? இம்முதலாளிகளுக்கு பாசனத் திலோ, விவசாயத்திலோ முன் அனுப வம் உள்ளதா? "அப்படியெல்லாம் கேள்வி கேட்கக் கூடாது; முன் அனுப வம் தேவை என்பதை நிபந்தனையாக் கினால் அப்புறம் ஆற்றை விற்க முடி யாமல் போய்விடும்" என்கிறது மகா ராஷ்டிர அரசு. மராமத்து, அணைக் கட்டு பராமரிப்பு, வெள்ளக் கட்டுப் பாடு, பாசனக் கால்வாய் பராமரிப்பு, தூர்வாருதல், மீன்வளப் பராமரிப்பு, குடிநீர் சுத்திகரிப்பு - விநியோகம் முத லான எதிலுமே பயிற்சியோ, அனுப வமோ இல்லாத ஒரு நிறுவனம், பாச னத்தையும் குடிநீர் விநியோகத்தையும் கட்டுப்படுத்தக் கிளம்பினால் அதன் விளைவு என்னவாகும்? அதிலும்



"நீரா" ஆறு தனியார்மயமாக்கப்படும் அபாயத்தை எதிர்த்துப் போராடிவரும் லோனந்த் வட்ட விவசாயிகள்.

1000 கோடி ரூபாயை மடியில் கட்டிக் கொண்டு சில திடீர் முதலாளிகள் நீரா ஆற்றை விலை பேச கிளம்பியுள்ளார் கள் என்றால், அவர்களுக்கு எப்படி இவ்வளவு பணம் கிடைத்தது?

இவையெல்லாம் ஏதோ சிதம்பர ரகசியம் அல்ல. உண்மையில் உலக வங்கிதான் இத்தனியார்மயத் திட் டத்தை பின்னணியில் இருந்து கொண்டு இயக்குகிறது. "நீர்வளத் துறையை மேம்படுத்துவது" என்ற பெயரில் மகாராஷ்டிர அரசுக்கு ஏறத் தாழ 1300 கோடி ரூபாயை உலகவங்கி கடனாக அளித்துள்ளது. அதன் உத்தர வுப்படியே நீரா ஆறு தனியாருக்கு தாரை வார்க்கப்படுகிறது; ஏகாதிபத் திய நிதிநிறுவனங்களிடம் கடன் உத்தி ரவாதப் பத்திரம் பெறப் போவதாகக் கூறி, சில திடீர் முதலாளிகள் நீரா ஆறை விலைக்கு வாங்க ஆர்வம் காட்டுகின்றனர்.

அரசாங்கப் பணிகளில், அதுவும் நீர்வளத் துறை சார்ந்த, தியோகர் அணைக்கட்டுத் திட்டப் பணிகளில் ஈடுபடும் உயரதிகாரிகள் மட்டுமே உலகவங்கியின் இந்தக் கடனுதவித் திட்டத்தின் விவரங்களைப் பார்வை யிட முடியும் என்று தடை விதிக்கப்பட் டுள்ளதிலிருந்தே, உலக வங்கியின் ஆதிக்கத்தை எவரும் புரிந்து கொள்ள முடியும். தகவல் அறியும் சட்டப்படி, நாட்டு மக்களோ, மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட சட்டமன்ற - நாடாளு மன்ற உறுப்பினர்களோ, அமைச்சர் களோ கூட இத்திட்டத்தின் விவரங் களை முழுமையாக அறிய முடியாது.

மகாராஷ்டிராவில் நீரா ஆறு தனி யாருக்கு விற்கப்படும் சூழலில், தமிழ கத்தில் கடந்த அக்டோபர் 1-ந்தேதி முதலாக "தமிழ்நாடு குளங்கள் பாது காப்பு மற்றும் நீர்நிலை ஆக்கிரமிப்புத் தடைச் சட்டம்" நடைமுறைக்கு வந் துள்ளது. தமிழகமெங்கும் நீர்நிலை களில் ஆக்கிரமிப்பை அகற்றுதல் என்ற பெயரில் ஏரி-குளங்களின் ஓரங் களில் ஏழை மக்களால் பயிரிடப்பட்டி ருந்த காய்கறி, வெள்ளரி, கீரை முதலா னவை புல்டோசர் - பொக்லைன்கள் மூலம் அழிக்கப்பட்டுள்ளன. ஊருணி கள் - குளங்களில் உள்ளூர் மக்கள் மீன் பிடித்து வந்த பாரம்பரிய உரிமையும் பறிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் ஏரி-குளங்களின் நீர்வளத்தை மேம் படுத்த உலக வங்கி ரூ. 2500 கோடி களைக் கடனாகக் கொடுத்துள்ளது. மகாராஷ்டிரா வழியில் தமிழகத்தின் ஏரி-குளங்களும் தனியாருக்கு விலை பேசப்படுவதற்கான சதி வேகமாக அரங்கேறி வருகிறது.

தண்ணீர் என்பது இயற்கையின் கொடை; மனித இனத்தின் அடிப்படை ஆதாரம்; பூவுலகின் உயிர்நாடியான தண்ணீர் யாருக்கும் சொந்தமல்ல. ஆனால் தண்ணீரை விற்பனைப் பண்ட மாக மாற்றி வருகிறது, ஏகாதிபத்தியங் களின் கைக்கருவியான உலக வங்கி. நேற்று வரை கோக்-பெப்சிக்காக நிலத் தடி நீர் உறிஞ்சப்பட்டது. இன்று ஏகாதி பத்தியங்களின் மறுகாலனிய தாகத்திற் காக ஆறுகளும் உறிஞ்சப்படுகின்றன.

• அழகு

www.padippakam.com

# ஜார்ஜ் புஷ்: 21-ஆம் நூற்றாண்டின் கோயபல்சு

**ஈரானிடம் அணுகுண்டு தயாரிக்கும் திறன் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதால், புஷ் கும்பலின் போர்வெறி மீண்டும் அம்பலமாகியிருக்கிறது.**

"ஈரான் ஒரு ரவுடி நாடு (Rogue State); அந்நாடு அணு ஆயுதத் தயாரிப்பில் இரகசியமாக ஈடுபட்டு வருகிறது; மூன்றாம் உலகப் போர் உருவாகுமானால், அதற்கு ஈரான்தான் காரணமாக இருக்க முடியும்" - இவையெல்லாம், அமெரிக்க அதிபர் ஜார்ஜ் புஷ் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஈரான் மீது சுமத்தி வரும் குற்றச்சாட்டுகள். இதனைக் காரணமாகச் சொல்லியே, ஈரான் மீது ஒரு அதிரடி ஆக்கிரமிப்புத் தாக்குதலை நடத்துவதற்கும் அமெரிக்கா திட்டமிட்டு வந்தது.

மேற்காசியாவில் ஈராக்கையொட்டி அமைந்துள்ள ஈரான், அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளுள் ஒன்று. எனவே, இந்த ஒப்பந்தத்தை மீறி ஈரான் இரகசியமாக அணு ஆயுதத் தரப்பில் ஈடுபடுகிறதா என்பது குறித்து சர்வதேச அணு ஆயுத முகாமை விசாரணை நடத்தி வந்தது. எனினும், இந்த விசாரணை முடிவதற்கு முன்பாகவே, அமெரிக்காவின் நிர்பந்தம் காரணமாக அவ்விசாரணை பற்றிய விவரங்கள் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலிடமும் கொடுக்கப்பட்டன. இதனையடுத்து, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் சில வகை ஆயுதங்களை ஈரானுக்கு விற்கக் கூடாதென்றும்; ஈரானின் நான்காவது பெரிய வங்கியான செபாவின் சொத்துக்களை முடக்கியும் தடை உத்தரவு போட்டது. அமெரிக்க அரசு, தன் பங்குக்கு ஈரானைச் சேர்ந்த மெல்லி வங்கி, மெல்லட் வங்கி, சதேரத் வங்கி ஆகிய மூன்று வங்கிகளோடு வர்த்தகத் தொடர்பு வைத்துக் கொள்வதைத் தடை செய்தது.

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் ஈரானின் மீது இன்னும் அதிகமான பொருளாதாரத் தடைகளை விதிக்க வேண்டும் என அமெரிக்கா நிர்பந்தம் கொடுத்துவரும் வேளையில், ஈரானின் அணுசக்தித் துறை குறித்து வெளிவந்துள்ள சர்வதேச அணுசக்தி முகாமையின் அறிக்கையும்; அமெரிக்காவின் பல்வேறு உளவு நிறுவனங்களும் இணைந்து வெளியிட்டுள்ள தேசிய உளவு மதிப்பீடு அறிக்கையும் ஜார்ஜ் புஷ் கும்பலின் அண்டப் புளுகையும்,

# மன்மோகன் சிங்: ஜார்ஜ் புஷ்ஷின் கூஜா!

சர்வதேச அணுசக்தி முகாமையில், ஈரான் பிரச்சினை தொடர்பாக கடந்த பிப்.2006-இல் நடந்த தேர்தலில், அமெரிக்காவின் நிர்பந்தத்திற்கு அடிபணிந்து, ஈரானுக்கு எதிராக வாக்களித்தது இந்தியா; ஈரானிடமிருந்து எரிவாயுவை இறக்குமதி செய்யும் வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சு வார்த்தைகளிலும் இந்தியா கலந்து கொள்ள மறுத்து வருகிறது. இப்பொழுது உண்மை தெரிந்துவிட்ட நிலையிலும் கூட மன்மோகன் சிங், ஈரான் பிரச்சினையில் அமெரிக்காவிற்குச் சாமரம் வீசுவதை நிறுத்திக் கொள்ளவில்லை.

இந்தியப் பொருட்களை இறக்குமதி செய்யும் ஈரானிய நிறுவனங்கள், அப்பொருட்களின் மதிப்புக்கு நிகராகத் தரும் கடன் அனுமதிக் கடிதங்களை (Letter of credit) அங்கீகரிக்க இந்திய அரசு வங்கி சமீப காலமாக மறுத்து வருகிறது. அமெரிக்க அரசு, மூன்று ஈரானிய வங்கிகளுடன் வர்த்தகம் செய்வதைத் தடை செய்த பிறகுதான், இந்திய அரசும் அதற்குப் பயந்து கொண்டு கடன் அனுமதிக் கடிதங்களை அங்கீகரிக்க மறுத்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளது. தி ஹிந்து நாளிதழ் (நவம்பர் 30, பக்.12)

இந்தியத் தரகு முதலாளித்துவ நிறுவனமான எஸ்ஸார் குழுமம், ஈரானில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை தொடங்கத் திட்டமிட்டிருந்தது. அமெரிக்காவின் மின்னாசொடா மாநிலத்தின் குடியரசு கட்சியைச் சேர்ந்த கவர்னர், "எஸ்ஸார் நிறுவனம் அம்மாநிலத்தில் தொடங்கத் திட்டமிட்டிருந்த இரும்பு உருக்காலைக்கு அனுமதி மறுத்து விடுவோம்; அந்த ஆலைக்கு அரசு மானியம் தர மாட்டோம்" என மிரட்டியதைத் தொடர்ந்து, எஸ்ஸார் குழுமம் ஈரானில் தான் தொடங்கத் திட்டமிட்டிருந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையைக் கைகழுவி விட்டது.

தமிழ்நாட்டில், கூடங்குளத்தில் அமைக்கப்படும் அணு மின்நிலையத்திற்காகக் கூடுதல் அணு உலைகளை ரசியாவிடம் இருந்து வாங்குவதற்குத் தயாரான ஒப்பந்தம், கையெழுத்துப் போட வேண்டிய கடைசி நிமிடத்தில் கைகழுவப்பட்டது. "இந்த ஒப்பந்தத்தை ரசியா முறித்துக் கொள்ளவே முடியாது; கூடாது என்ற நிபந்தனையை இந்த ஒப்பந்தத்தில் சேர்க்கக் கோரியது இந்தியா; ரசியா விரும்பாத இந்த நிபந்தனையை அமெரிக்கா சொல்லி இந்தியா முன் மொழிந்தது" என ரசியா பகிரங்கமாகக் குற்றஞ்சுமத்தியுள்ளது.

அமெரிக்காவிற்கு வால் பிடிக்கும் இந்தப் போக்கை, நாம் அடிமைத்தனம் என்கிறோம்; மன்மோகன் சிங் கும்பலோ, நாடு வல்லரசு ஆவதற்கான பாதை என்கிறார்கள். வேட்டியை அவிழ்த்துதான் முண்டாசு கட்டிக் கொள்ள வேண்டுமா?


படிப்பகம்

www.padippakam.com

போர் வெறியையும் அம்பலப்படுத்தி யுள்ளன.

"ஈரான் 1980-களில் இரகசியமாக யுரேனியம் இறக்குமதி செய்தது. அந்த யுரேனியத்தைச் செறிவூட்டி, அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈடு பட்டு வருகிறது; இதற்காகவே, நதான்ஸ் எனுமிடத்தில் அணு உலை யொன்று இயங்கி வருகிறது; அணு ஆயுதங்களைத் தாங்கிச் செல்லும் ஏவு கணைத் தயாரிப்பிலும் ஈடுபட்டு வரு கிறது" என அமெரிக்கா சுமத்திய ஒவ் வொரு குற்றச்சாட்டையும் ஆராய்ந்த சர்வதேச அணுசக்தி முகாமை, "அணு சக்தியைப் பயன்படுத்துவது குறித்த ஈரானின் நடவடிக்கைகள் அனைத்தும் சர்வதேச அணுசக்தி முகாமையின் விதி களுக்கு உட்பட்டு இருப்பதாக"த் தனது இடைக்கால அறிக்கையில் குறிப் பிட்டுள்ளது.

"ஈரான் யுரேனியத்தை 4 சதவீத அளவிற்கே செறிவூட்டும் தொழில்நுட் பத் திறனைப் பெற்றுள்ளது; இதை வைத்துக் கொண்டு, அணுகுண்டெல் லாம் தயாரித்துவிட முடியாது."

"சர்வதேச அணுசக்தி முகாமைக் குத் தெரியாமல் 1980-களில் ஈரான் யுரேனியம் இறக்குமதி செய்திருந்தா லும்; சில பரிசோதனை நடவடிக்கை களில் ஈடுபட்டிருந்தாலும், அவை இர கசியமாக அணு ஆயுதம் தயாரிக்கும் நோக்கங் கொண்டவையாகச் சொல்ல முடியாது."

**அரபு நாடுகளை அச்சுறுத்தி வரும் யூதவெறி பிடித்த இசுரேலிடம் 200-க்கும் மேற்பட்ட அணு ஆயுதங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே, ஈரான் தனது தற்காப்புக்காக அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டாலும், அதனை அநீதியானதாகவோ, உலக அமைதிக்கு எதிரானதாகவோ குற்றஞ்சுமத்த முடியாது.**

"நதான்ஸ் பகுதியில் இயங்கி வரும் யுரேனியத்தைச் செறிவூட்டும் அணு உலை, சர்வதேச அணுசக்தி முகா மையின் விதிகளுக்கு உட்பட்டு இயங் குவதாகவும்; பாகிஸ்தானில் இருந்து பெறப்பட்டுள்ள அணுஉலைக் கருவிக ளைப் பயன்படுத்தி அணு ஆயுதம் தயாரிப்பது தொடர்பான பரிசோதனை கள் நடத்தப்படவில்லை" என்றும் தனது இடைக்கால அறிக்கையில் சர்வ தேச அணுசக்தி முகாமை குறிப்பிட் டுள்ளது.

அமெரிக்க அரசின் உளவு நிறுவ னங்கள் இணைந்து வெளியிட்டுள்ள தேசிய உளவு மதிப்பீட்டு அறிக்கை யில், "ஈரான் அணு ஆயுதம் தயாரிப் பது தொடர்பான முயற்சிகளை 2003-ஆம் ஆண்டே நிறுத்தி விட்டது; அம்முயற்சிகளை இன்று வரை திரும் பத் தொடங்கவில்லை; 2015-ஆம் ஆண்டுக்குள் ஈரான் அணுஆயுதம் தயாரிக்கும் திறனைப் பெற்றுவிடும் என்று கூற முடியாது; ஈரானின் நோக் கம் அணு ஆயுதம் தயாரிப்பதல்ல; யுரேனியத்தைச் செறிவூட்டும் திற னைப் பெறத்தான் அந்நாடு விரும்புகி றது" எனக் குறிப்பிட்டுள்ளன.

சர்வதேச அணுசக்தி முகாமையின் இடைக்கால அறிக்கையைத் திட்டித் தீர்த்துள்ள ஜார்ஜ் புஷ் கும்பல், "ஈரான், யுரேனியத்தைச் செறிவூட்டும் திறன் பெறுவதைத் தடை செய்ய வேண்டும்" எனப் புது கட்டளை போட்டு வருகி றது. "ஈரான் யுரேனியத்தைச் செறிவூட் டும் திறன் பெற்றுவிட்டால், பிறகு அணு குண்டுகளைத் தயாரிக்க தொடங்கி விடும்" என இப்பொழுதே அமெரிக்கா தனது அழுகுணி ஆட்டத் தைத் தொடங்கி விட்டது.

**ஈரான் மீது ஜார்ஜ் புஷ் சுமத்திய குற்றச்சாட்டுகளை அமெரிக்க உளவு நிறுவனங்களே ஒதுக்கித் தள்ளிவிட்டதைத் தனது ஆதரவாளர்களுடன் கொண்டாடும் ஈரான் அதிபர் மஹ்முத் அகமதிநிஜாத்.**



அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந் தத்தில் கையெழுத்திட்டுள்ள நாடுகள், அணு சக்தியை சமூக (சிவில்) நோக்கங் களுக்குப் பயன்படுத்தவும்; அதற்கு ஏற்றாற் போன்று யுரேனியத்தைச் செறி வூட்டும் திறனைப் பெறவும் உரிமை பெற்றுள்ளன. எனவே அணுசக்தி யைப் பயன்படுத்துவது தொடர்பான ஈரானின் நடவடிக்கைகளில் எவ்வித தீய உள்நோக்கத்தையும் காண முடி யாது.

மேலும், அரபு நாடுகளை அச்சு றுத்தி வரும் யூதவெறி பிடித்த இசுரேலி டம் 200-க்கும் மேற்பட்ட அணுஆயு தங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. எனவே, ஈரான் தனது தற்காப்புக்காக அணு ஆயுதத் தயாரிப்பில் ஈடுபட்டா லும், அதனை அநீதியானதாகவோ, உலக அமைதிக்கு எதிரானதாகவோ குற்றஞ் சுமத்த முடியாது. குறிப்பாக, ஈரானுக்கு எதிராக இக்குற்றச்சாட்டைக் கூறும் தார்மீக உரிமை அமெரிக்கா வுக்கு மட்டுமல்ல, இந்தியாவுக்கும் கிடையாது!

• அழகு



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியக் 'குடியரசின்' இன ஒதுக்கல்

**தாழ்த்தப்பட்டோர் - முசுலீம்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு நீதி வழங்க மறுப்பதன் மூலம், அவர்களை இரண்டாம்தரக் குடிமக்களாக ஒதுக்கிவிட்டது, இந்திய அரசு.**

சங்கரராமன் கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட காஞ்சி சங்கராச்சாரி ஜெயேந்திரனுக்குப் பிணை வழங்க, விடுமுறை என்றும் பாராமல் ஞாயிறு அன்று நீதிமன்றம் கூடியது; சேதுக் கால்வாய் திட்டத்தை வலியுறுத்தி தி.மு.க அரசு அறிவித்த ''பந்த்'' -ஐத் தடை செய்யவும், நீதிமன்றம் ஞாயிற்றுக்கிழமை கூடியது.

இந்திய நீதிமன்றங்களின்/நீதிபதிகளின் இந்த முனைப்பு, எல்லா வழக்குகளுக்கும் கிடைப்பதில்லை; அதிலும் பாதிக்கப்பட்டோர் முசுலீம்களாகவோ, தாழ்த்தப்பட்டோராகவோ இருந்துவிட்டால், நீதிமன்றங்களின் இயல்பான வேகம்கூடச் சுணங்கிப் போய்விடும். இப்படிப்பட்ட வழக்குகள் விசாரணை கட்டத்தைத் தாண்டவே பல ஆண்டுகள் ஆகிவிடுவதோடு, குற்றவாளிகளைத் தண்டனையில் இருந்து தப்ப வைக்க அரசாங்கமே குழி பறிக்கும். நாடு தழுவிய அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்திய வழக்குகள் கூட, இப்படிப்பட்ட அபாயத்தில்தான் சிக்கிக் கொண்டுள்ளன. பாபர் மசூதி இடிப்பு, மும்பய்க் கலவரம், குஜராத் இனப் படுகொலை, கோவை இந்துவெறி கலவரம் என நீளும் இந்தப் பட்டியலில், **''துலினா படுகொலை வழக்கும்''** சேர்ந்து விட்டது.

அரியானா மாநிலம், ஜஜ்ஜார் நகருக்கு அருகில் உள்ள துலினா புறக்காவல் நிலையம் முன்பாக, வீரேந்தர், தயாசந்த், டோடாராம், ராஜூ, கைலாஷ் ஆகிய ஐந்து தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் இந்து மதப் பயங்கரவாதிகளாலும், மேல்சாதி வெறியர்களாலும் அக்.15, 2002 அன்று அடித்தே கொல்லப்பட்டனர். ''அந்த ஐந்து இளைஞர்களும் பசு மாட்டைக் கொன்று, அதன் தோலை உரிப்பதாக'' வதந்தியைப் பரப்பி, அதன் மூலம் மேல்சாதி வெறியர்களைத் தூண்டிவிட்டு, ஆர்.எஸ்.எஸ். கும்பல்தான் இப்படுகொலையைச் செய்தது என்பதும் ஜஜ்ஜார் நகர போலீசார் இதற்குப் பக்கபலமாக இருந்துள்ளனர் என்பதும், இப்படுகொலை நடந்த ஓரிரு நாட்களிலேயே அம்பலமானது.

இப்படுகொலை பற்றி விசாரிக்க அரியானா மாநில அரசால் நியமிக்கப்பட்ட ஆர்.ஆர்.பன்ஸ்வால் கமிசனின் விசாரணையில், ''அந்த ஐந்து தாழ்த்தப்பட்ட இளைஞர்களுள், வீரேந்திரும், தயாசந்தும் தோல் வியாபாரம் செய்வதற்கு அரசு உரிமம் பெற்றவர்கள்; சம்பவம் நடந்த நாளன்று, அவர்கள் ஏற்கெனவே பதப்படுத்தி வைத்திருந்த தோல்களை விற்பதற்குச் சென்று கொண்டிருந்த பொழுதுதான் வழிமறித்துத் தாக்கப்பட்டனர். ஜஜ்ஜார் நகர போலீசார், ஆர்.எஸ்.எஸ். கும்பலின் கொலைக் குற்றத்திற்குச் சப்பைக் கட்டும் முகமாகத்தான், 'சட்ட விரோதமாக மாட்டுத் தோலை உரித்ததாக' அந்த ஐந்து தாழ்த்தப்பட்டோர் மீதும் பொய் வழக்கு ஜோடித்தனர்'' என்ற உண்மைகள் மீண்டும் சந்தேகத்திடமின்றி நிருபிக்கப்பட்டன.

''தாழ்த்தப்பட்ட இளைஞர்களைத் தாக்கியவர்கள், போலீசாரைவிட அதிக எண்ணிக்கையில் இருந்ததால்தான், தங்களால் அவர்களைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது'' என விசாரணையின் பொழுது கூறி, போலீசார் தங்களைத் தற்காத்துக் கொள்ள முயன்றனர். போலீசாரின் இந்த வடிகட்டிய பொய்யை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்ட விசாரணை கமிஷன், ''துலினா புறக்காவல் நிலையம் முன்பாக ஒரு பெரும் கும்பல் திரண்டதையும்; அக்கும்பல் இந்து மதவெறியையும், மேல்சாதி வெறியையும் தூண்டிவிடும்படி முழக்கம் போட்டதையும் போலீசார் அனுமதித்தனர். இதன் முடிவில், தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் அடித்துக் கொல்லப்பட்டனர்'' எனக் குறிப்பிட்டுள்ளது.

''இப்பிரச்சினை மாலை 6.15-க்குத் தொடங்கியிருக்கிறது. தாழ்த்தப்பட்ட இளைஞர்கள் மீது நடத்தப்

**துலினாவில் இந்து மதவெறிக் கும்பல் நடத்திய தாக்குதலில் தனது மகனைப் பறிகொடுத்துவிட்ட ரத்தன் சிங் மற்றும் அவரது மனைவி. தெருவில் திரிந்து மிட்டாய்களை விற்றுக் கிடைக்கும் வருமானத்தில், இவர்களின் வாழ்க்கை ஓடுகிறது.**





படிப்பகம்

www.padippakam.com

பட்ட தாக்குதல் இரவு 9.45 மணிக்குத் தொடங்கி 10.15 வரை நடந்திருக்கிறது. இடைப்பட்ட நேரத்தில் அந்தக் கும்பலிடமிருந்து தாழ்த்தப்பட்ட இளைஞர்களைக் காப்பாற்ற போதிய அவகாசம் இருந்தும் கூட, போலீசார் அக்கும்பலுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என பன்ஸ்வால் விசாரணைக் கமிசன் குறிப்பட்டுள்ளது.

சுருக்கமாகச் சொன்னால், விசுவ இந்து பரிசத், பஜ ரங்தள் கும்பல் தலைமையில் நடந்த கொலைக்கு, அரியானா போலீசுத்துறை உடந்தையாக இருந்துள்ளது. ஆனாலும், ஜஜ்ஜார் நகரக் குற்றவியல் நீதிமன்றத்தில் நடந்து வரும் இந்த வழக்கில், எந்தவொரு போலீசுக்காரன் மீதும் கிரிமினல் குற்றம் சுமத்தப்படவில்லை. ஜஜ்ஜார் நகரின் துணை போலீசு கண்காணிப்பாளர், துலினா புறக்காவல் நிலையத்தின் துணை ஆய்வாளர் உள்ளிட்ட 13 போலீசு அதிகாரிகள் மீது துறைரீதியான விசாரணை என்ற கண்துடைப்பு நாடகம் நடத்தப்பட்டது. இவ்விசாரணையின் முடிவில், இந்த 13 போலீசு அதிகாரிகளுக்கும் இரண்டு சம்பள உயர்வை நிறுத்தி வைப்பது என்ற 'மாபெரும் தண்டனை' அளிக்கப்பட்டது.

இப்படுகொலை, எதிர்பாராத விதமாக திடீரென நடந்துவிட்ட சம்பவம் அல்ல. இச்சம்பவம் நடைபெறுவதற்கு முன்பாகவே, விசுவ இந்து பரிசத்தும் பஜ்ரங்தளும் ''முசுலீம்கள் பசுக்களைக் கொல்கிறார்கள்'' என்ற வதந்தியைப் பரப்பி, ஜஜ்ஜார் நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் பல மதக்கலவரங்களை நடத்தி வந்தன. இப்படுகொலை நடந்த மறுநாளே, அவ்விரண்டு அமைப்புகளும், தாழ்த்தப்பட்ட இளைஞர்களைக் கொன்ற ''எழுச்சியுற்ற இந்துக்களை''ப் பாராட்டி, ஜஜ்ஜார் நகரில் ஊர்வலம் நடத்தின. ''மனித உயிரைவிட, பசுவின் உயிர் விலை மதிப்பற்றது என இந்து சாஸ்திரங்கள் கூறுகின்றன'' என்பதை மேற்கோளாகக் காட்டி, இப்படுகொலையை நியாயப்படுத்தினார், விசுவ இந்து பரிசத்தின் துணைத் தலைவர் ஆசார்யா கிரிராஜ் கிஷோர். ஆனாலும், இப்படுகொலை தொடர்பாக மட்டுமல்ல, தாழ்த்தப்பட்டவர்களின் மீதான வன்



உ.பி. - ஹாஷிம்புராவில் அரசு பயங்கரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட தனது உறவினரின் படத்தைக் காட்டும் முசுலீம் மூதாட்டி.

கொடுமையை நியாயப்படுத்தும் இந்த நடவடிக்கைகள் (ஊர்வலம், பத்திரிகை பேட்டி) தொடர்பாகக்கூட, எந்தவொரு ஆர்.எஸ்.எஸ்.காரன் மீதும் வழக்கு போடப்படவில்லை.

ஆர்.எஸ்.எஸ்.-ஐப் போலவே முசுலீம் எதிர்ப்பு இந்து மதவெறியைப் பரப்புவதில் முனைப்பாகச் செயல்பட்டுவரும் ''ஆரிய சமாஜம்'' என்ற அமைப்பு, ஜஜ்ஜார் நகரில் பசு பராமரிப்பு மையமொன்றை நடத்தி வருகிறது. ''இம்மையத்தின் தலைவர் உள்ளிட்ட மூன்று பேர், தாழ்த்தப்பட்ட இளைஞர்களை அடித்துக் கொல்லும்படித் தூண்டிவிட்டதாக'' சில போலீசார் பன்ஸ்வால் கமிசனிடம் சாட்சியம் அளித்துள்ளனர். எனினும், இப்படுகொலையில் அவர்களின் பங்கு பற்றி எவ்வித விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை.

மாறாக, ஆரிய சமாஜம் இப்பசு மையத்தில் நடத்திய சாதி பஞ்சாயத்தில் கலந்துகொண்ட போலீசாரும் அரசு அதிகாரிகளும் இப்படுகொலை தொடர்பாக ''அப்பாவிகளை''க் கைது செய்ய மாட்டோம் என்ற வாக்குறுதியைக் கொடுத்தனர். இந்த வாக்குறுதிக்கு ஏற்ப, இப்படுகொலையில் நேரடித் தொடர்புடைய, அடையாளம் தெரிந்த 14 ''அப்பாவிகளின்'' பெயர்களை முதல் தகவல் அறிக்கையில்கூட சேர்க்காமல், போலீசார் காப்பாற்றிவிட்டனர்.

இப்படுகொலை நடந்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்டாலும், நீதிமன்றத்தில் இவ்வழக்கு இன்னும் விசாரணை கட்டத்தையே தாண்டவில்லை. கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுக்கு வழக்கு விசாரணை எந்தக் கட்டத்தில் இருக்கிறது என்பதைத் தெரியப்படுத்துவதற்குக் கூட அரசு தயாராக இல்லை. இந்து மதவெறிக் கும்பலால் கொல்லப்பட்ட வீரேந்தரின் தந்தை ரத்தன் சிங், விசாரணை தொடர்பாக நீதிமன்றத்திற்கு வந்த பொழுது, '' வழக்கு முடிந்துவிட்டதாக''க் கூறி, அவரைத் திருப்பி அனுப்பிவிட்டார், ஒரு போலீசு அதிகாரி.

இவ்வழக்கில் ''நீதி'' நிலைநாட்டப்படுகிறதோ இல்லையோ, ஜஜ்ஜார் நகரைச் சுற்றியுள்ள பகுதிகளில் ''அடிமாட்டைக் கூடக் கொல்லக் கூடாது'' என்ற இந்து மதவெறிக் கட்டளையைச் செயல்படுத்துவதில், ஆரிய சமாஜம் இப்படுகொலையைப் பயன்படுத்தி வெற்றி பெற்றிருக்கிறது.

•••

**து**லினா படுகொலை நடப்பதற்கு 15 ஆண்டுகள் முன்பாக, உ.பி. மாநிலம் மீரட் நகருக்கு அருகில் உள்ள ஹாஷிம்புரா பகுதியைச் சேர்ந்த 42 முசுலீம்கள் படுகொலை செய்யப்பட்டனர். இது, இந்து மதவெறிக் கும்பலுக்கு ஆதரவாக, அரசு பயங்கரவாதிகள் நடத்திய படுகொலை.

பாபர் மசூதிக்குள் கள்ளத்தனமாக வைக்கப்பட்ட ராமன் சிலையை வழிபட, அக்கோயிலின் கதவை இந்துக்களுக்கு ராஜீவ் காந்தி திறந்துவிட்ட பிறகு, 1987 ஏப்ரல்-மே மாதங்களில் உ.பி.யிலும், டெல்லியிலும் இந்து-முசுலீம் மோதல்கள் உச்சகட்டத்தை அடைந்தன. அந்தச் சமயத்தில், உ.பி. மாநில பிரதேச ஆயுதப் படையைச் சேர்ந்த போலீசார், ஹாஷிம்புரா பகுதியைச் சேர்ந்த 50 முசுலீம்களைத் துப்பாக்கி முனையில் கடத்திக் கொண்டு சென்றனர். முராத் நகருக்கு அருகில் உள்ள கங்கை கால்வாய்க்குக் கொண்டு செல்லப்பட்ட இவர்கள், நேருக்கு நேராக நிற்க வைக்கப்பட்டுச் சுடப்பட்டனர்; குண்டு பாய்ந்த 50 முசுலீம்களின் உடல்களும் கங்கை நதியில் தூக்கி வீசப்பட்டன. ஈவிரக்கமின்றி நடத்தப்பட்ட இந்தச் சட்டவிரோதத் துப்பாக்கிச் சூட்டில் 42 முசுலீம்கள் மாண்டு போனார்கள். 20 ஆண்டு காலமாக நடந்துவரும் இந்தப்



படிப்பகம்

www.padippakam.com

படுகொலை பற்றிய வழக்கு, வாய்தா-விசாரணை என்ற ஊறுகாய்ப் பானைக்குள் முடங்கிக் கிடக்கிறது.

இப்படுகொலையின் இருபதாம் ஆண்டு நினைவு தினத்தை யொட்டி, கொல்லப்பட்ட முசுலீம்களின் உறவினர்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், இப்படுகொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள 19 காக்கிச் சட்டை கிரிமினல்கள் பற்றி சில தகவல்களை அளிக்குமாறு, உ.பி. மாநில லக்னோ போலீசு அதிகாரிகளிடம் கோரியிருந்தனர். ஹாஷிம்புரா படுகொலையை விட, அப்படுகொலையில் தொடர்புடைய 19 போலீசார் பற்றி உ.பி. மாநில அரசு அளித்திருக்கும் தகவல்கள்தான் மிகுந்த அதிர்ச்சி அளிப்பதாக உள்ளன.

• இப்படுகொலை அம்பலமானவுடனேயே, அது பற்றி ''சி.பி.சி.ஐ.டி'' விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. இவ்விசாரணையில், 19 போலீசார் மீது குற்றம் சுமத்தப்பட்டது. எனினும், அந்தப் போலீசாரின் பணி குறித்த பதிவேட்டில் (Service Register), இக்கொலைக் குற்றம் பற்றிக் குறிப்பிடப் படவில்லை. மாறாக, படுகொலை நடந்த 1987-ஆம் ஆண்டில், போலீசாரின் பணி குறித்து தயாரிக்கப்பட்ட வருடாந்திர இரகசிய அறிக்கையில், ''அவர்கள் அந்த ஆண்டில் (1987) மிகச் சிறப்பாகப் பணியாற்றியிருப்பதாக''க் குறிப்பிடப்பட்டுள்ளது.

• குற்றம் சுமத்தப்பட்ட இந்த 19 போலீசார் மீது துறைரீதியான விசாரணை நடத்தப்படவில்லை. எந்த விதமான ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

• இப்படுகொலை நடந்து எட்டு ஆண்டுகள் கழித்து 1995-இல் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டவுடன், 19 போலீசாரும் பதவியில் இருந்து இடைநீக்கம் செய்யப்பட்டனர். எனினும், அடுத்த ஒரு ஆண்டுக்குள்ளாகவே குற்றவாளிகள் அனைவரும் மீண்டும் பணியில் அமர்த்தப் பட்டு விட்டனர்.

''அவர்களின் சேவை உ.பி. அரசிற்குத் தேவைப்படுகிறதென்றும், பணி இடைநீக்கம் செய்யப்பட்டதால், போலீசாரின் குடும்பங்கள் வருமானமின்றி வறுமையில் தள்ளப்பட்டதைத் தடுக்கும் முகமாகத்தான் அவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டதாகவும்'' காரணம் கூறப்பட்டுள்ளது.

இப்படுகொலையோடு தொடர்புடைய மற்ற போலீசு அதிகாரிகளைப் பாதுகாக்கும் பொருட்டு, இப் படுகொலை பற்றிய சி.பி.சி.ஐ.டி போலீசாரின் விசாரணை அறிக்கையை வெளியிட மறுத்து வருகிறது, உ.பி. அரசு. கொலைக் குற்றவாளிகளுக்கு இதற்கு மேல் ஒரு அரசினால் என்ன பாதுகாப்பு வழங்கிவிட முடியும்? இந்த நயவஞ்சகத்திற்குப் பதிலாக, உ.பி. அரசு வழக்கைத் தள்ளுபடி செய்திருந்தால், பாதிக்கப்பட்ட முசுலீம் குடும்பங்களுக்கு வழக்குச் செலவாவது மிச்சமாயிருக்கும்!

இந்திய நீதிமன்றங்களில் இலட்சக்கணக்கான வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றுள், ஒன்றாக இந்த வழக்குகளை ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. இந்தியக் 'குடியரசில்', தாழ்த்தப்பட்டோரும், முசுலீம்களும் இரண்டாம்தரக் குடிமக்களாக நடத்தப்பட்டு வருவதற்கான ஆதாரங்களில் ஒன்றுதான், இந்த வழக்குகள்!

• செல்வம்

# மனைவியைக் கொல்லத் துணியும் வரதட்சிணைக் கொடூரம்!

திருச்சியைச் சேர்ந்த ஜெனிதா என்ற இளம் பெண், அமெரிக்காவில் வரதட்சிணைக் கொடுமையால் வதைபட்டு, குற்றுயிராகத் திரும்பிய நிகழ்ச்சி தமிழகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

திருச்சியைச் சேர்ந்த ஜெனிதாவின் பெற்றோர், திருமணத் தகவல் மையம் மூலம் அறிமுகமான கிறிஸ்டி டேனியல் என்ற அமெரிக்காவில் வேலை செய்யும் கணினிப் பொறியாளருக்கு கடந்த 2006-ஆம் ஆண்டில் ஜெனிதாவை மண முடித்துக் கொடுத்தனர். 50 சவரன் நகையும் பல லட்சம் ரொக்கமாக வரதட்சிணையுடன் அனைத்துச் சீர்வரிசைகளும் செய்து கொடுத்தும்கூட இன்னும் கூடுதலாக வரதட்சிணை கேட்டு வந்த டேனியலும் அவரது பெற்றோரும், அமெரிக்காவில் தொடர்ந்து ஜெனிதாவைச் சித்திரவதை செய்துள்ளனர். கர்ப்பிணி என்றும் பாராமல் ஜெனிதாவைக் காரிலிருந்து தள்ளிக் கொல்லவும் இக்கும்பல் துணிந்துள்ளது. கை-கால் எலும்பு முறிந்து நினைவு திரும்பாமல் மருத்துவமனையில் கிடந்த ஜெனிதாவை மீட்டு சென்னைக்குக் கொண்டு வந்து, அவரது பெற்றோர் சிகிச்சையளித்து வருகின்றனர். தமிழகத்தையே உலுக்கிய இந்த வரதட்சிணைக் கொடூரத்தை அறிந்த தேசிய மகளிர் ஆணையம், ஜெனிதாவையும் அவரது பெற்றோரையும் சந்தித்து வாக்குமூலம் பெற்றுள்ளது.




திருச்சியில் செயல்படும் பெண்கள் விடுதலை முன்னணி, ஜெனிதாவின் குடும்பத்தாரைச் சந்தித்து ஆறுதல் கூறி நம்பிக்கையூட்டியதோடு, வரதட்சிணைக்காக மனைவியையே கொல்லத் துணிந்த டேனியலையும் அவனது பெற்றோரையும் கைது செய்து, தமிழகத்துக்கு இழுத்து வந்து தூக்கிலிடக் கோரி, உடனடியாக சுவரொட்டிப் பிரச்சாரத்தை மேற்கொண்டது. ஏற்கெனவே பெண்களை ஆபாசப் படமெடுத்து குறுந்தகடாக்கி வெளியிட்ட காம வெறியன் லியாகத் அலியைத் தூக்கிலிடக் கோரிப் போராடிய இவ்வமைப்பினர், தற்போது அமெரிக்க மோகம் ஏற்படுத்தியுள்ள பயங்கரத்தை விளக்கி மேற்கொண்டுள்ள இப்பிரச்சாரம், உழைக்கும் மக்களிடம் உற்சாகமான வரவேற்பையும் பேராதரவையும் பெற்றுள்ளது.

- பு.ஜ. செய்தியாளர், திருச்சி.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com

## எமது விற்பனையில்...




**குண்டுவைப்புகளில்
ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க.
பயங்கரவாதிகள்**
— புதிய ஜனநாயகம் இதழில்
வெளியான தொடர்கட்டுரை



**இந்து என்று சொல்லாதே!
ராமன் பின்னே செல்லாதே!
(கவிதை)**
— துரை.சண்முகம் (ம.க.இ.க)




**இஸ்லாத்தில் மனுவாதிகள்**
— மகுத் ஆலம் ஃபலாஹி

**போராடும் தருணங்கள்**
— மருதையன் (ம.க.இ.க)






**உதவியா? சதியா?**
— அமெரிக்க அறக்கட்டளைகள்
பற்றிய ஆய்வு



**ராமன் பாலம் புராணப் புரட்டு
பார்ப்பன மதவெறிக்
கும்பலை விரட்டு!**
— தோழர்கள் மருதையன்,
துரை.சண்முகம் மற்றும்
பேரா.பெரியார்தாசனின்
பொதுக்கூட்ட உரைகள்

**உலகைச் சூறையாடும் உலகமயம்**
— பி. இரயாகரன்




**இந்திய மரபும்
பார்ப்பன திரிபும்**
— பேரா. பெரியார்தாசன்




மற்றும்

**மக்கள் கலை இலக்கியக் கழகத்தின் பாடல்கள், உரைகள்,
ஒலி-ஒளி வட்டுகள், சிறுவெளியீடுகள் அனைத்தும்**

**சனவரி 4 முதல் 17 வரை சென்னை செயிண்ட் ஜார்ஜ் பள்ளி மைதானத்தில்
(பச்சையப்பன் கல்லூரி எதிரில்) நடைபெறும் புத்தகக் கண்காட்சியில்
கீழைக்காற்று அரங்கில் கிடைக்கும்.**

**முற்போக்கு நூல்களுக்கு ஒரு முகவரி...**

**கீழைக்காற்று வெளியீட்டகம்,**
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 044-28412367

கீழைக்காற்று


படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/06-08 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/06-08

# கருவறையே கல்லறையாக...



சென்னை - பல்லாவரம் பகுதியில் சாக்குப் பையில் வைத்துத் தெருவில் வீசப்பட்ட பெண் குழந்தை, அக்கம்பக்கத்திலுள்ள ஏழைகளால் காப்பாற்றப்படும் அவலம்.

பஞ்சாப், அரியானா, இராசஸ்தான், மத்தியப் பிரதேசம், இமாச்சலப் பிரதேசம் ஆகிய ஐந்து மாநிலங்களின் மக்கள் தொகையில் பெண்களின் விழுக்காடு பற்றி எடுக்கப்பட்ட புள்ளிவிவரம், பெண் இனம் சிறுகச் சிறுக அழிக்கப்படும் அபாயத்தை எடுத்துக் காட்டியிருக்கிறது.

1,000 ஆண்களுக்கு மத்தியப் பிரதேசத்தில் 842 பெண்கள்; இராசஸ்தானில் 871 பெண்கள்; இமாச்சலப் பிரதேசத்தில் 789 பெண்கள்; அரியானாவில் 780 பெண்கள்தான் இருப்பதாகத் தெரிவித்துள்ள இப்புள்ளி விவரம், பஞ்சாப் நிலைமையை மிகவும் அபாயகரமானதாகக் குறிப்பிட்டுள்ளது. அம்மாநிலத்தில் ஜாட் சாதியினர் மத்தியில் 1,000 ஆண்களுக்கு 527 பெண்களும்; மற்ற இந்து மேல் சாதியினர் மத்தியில் 1,000 ஆண்களுக்கு 300 பெண்கள்தான் இருப்பதாகக் கணக்கெடுப்பில் கண்டறியப்பட்டுள்ளது.

மேல்தட்டு மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் மத்தியில் உருவாகி வரும் ''ஒரு குழந்தை போதும்'' என்ற மனோபாவம், ஆண் குழந்தையை மட்டும்தான் விரும்புவதாக இந்தப் புள்ளிவிவரம் சுட்டிக் காட்டியுள்ளது.

கருவில் பெண் குழந்தை உருவானால், அதை அழித்துவிட மட்டுமல்ல; கருவில் பெண்ணே உருவாகாமல் தடுத்து விடவும் அறிவியல் தொழில்நுட்பம் இவர்களுக்கு உதவுகிறது. ஆணாதிக்க வெறிபிடித்த பார்ப்பன இந்து மதமோ, இப்பெண் சிசுக்கொலையை பல்வேறு வழிகளில் நியாயப்படுத்தி விடுகிறது. கருவில் இருக்கும் சிசு ஆணா அல்லது பெண்ணா என்பதைக் கண்டு பிடிப்பதைத் தடை செய்யும் சட்டமோ, சோளக் காட்டுப் பொம்மையைப் போலத் தொங்குகிறது.

உலகமயத்தால் இந்தியப் பொருளாதாரம் நவீனமயமாகியிருக்கலாம்; ஆனால், இந்திய சமூகமோ இன்னும் மத்திய கால காட்டுமிராண்டித்தனத்தில் தான் வாழ்கிறது என்பதற்கு இப்பெண் சிசுக் கொலையே சாட்சி!

பெண்ணாகப் பிறந்துவிட்ட ஒரே காரணத்தால், தமிழக அரசு நடத்திவரும் தொட்டில் மையங்களில் விடப்பட்ட குழந்தைகள்.



படிப்பகம்